ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
Ministry of Economic Development

# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# PERFORMANCE REPORT

## 2012

# செயலாற்றுகை அறிக்கை

# 2012

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

2012 ஆம் ஆண்டின் செயற்றிறன் அறிக்கையானது இல 402, 2002 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி திறைசேரி சுற்றறிக்கைக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முகவுரை | 01 |
| 1. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 02- 10 |
| 2. திவி நெகும – வலுவூட்டப்பட்ட மனைப் பொருளாதாரம் | 11- 23 |
| ▪ திவி நகும நிகழ்ச்சித்திட்டம் | |
| i. விவசாயப் பிரிவு | 12 -14 |
| ii. கால்நடைவளர்ப்பு அபிருத்தி | 14 |
| iii. மீன் வளர்ப்பு பிரிவு | 15-16 |
| iv. தொழில்முயற்சி அபிவிருத்தி, சுயதொழில் திட்டம் | 17 -18 |
| ▪ திவி நெகும நிகழ்ச்சித்திட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகள் | 19 |
| ▪ திவி நெகும நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகள் மற்றும் சவால்கள் | 20 -21 |
| ▪ சமூகப்பாதுகாப்பு - சமுர்த்தி நிகழச்சித்திட்டம் | 22 -23 |
| 3. கம நெகும – வலுவூட்டப்பட்ட பிரஜை | 24 - 42 |
| ▪ பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் | 38 -39 |
| ▪ 5000 முதல்நிலைப் பாடசாலைகள் மற்றும் 1000 இடைநிலைப் பாடசாலைகளை மறுசீரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் - “சிறந்தவைகள் தேசத்தின் பிள்ளைகள்” | 40 -42 |
| 4. நகர எழுச்சி - மனங்கவரும் நகர சூழல் | 43 - 47 |
| ▪ தியத்த பூங்கா – நகர அபிவிருத்தி வேலைத்திட்டம் | 44 |
| ▪ மாதர் சிகிச்சை நிலையங்களை மேம்படுத்தல் | 45 |
| ▪ வாரச்சந்தைகளை நிர்மாணித்தல் | 46 |
| ▪ உடற்பயிற்சி மேடைகள் நிர்மாணித்தல் | 46 |
| ▪ பஸ்தரிப்பு நிலைய அபிவிருத்தி | 47 |
| 5. பிரதேச வளர்ச்சி மத்திய நிலையம் - பரந்த அபிவிருத்தி | 48 -67 |
| ▪ கிராமங்களுக்கும் மாகாணங்களுக்கும் தொடர்புகளை மேம்படுத்தல் | 50 -51 |
| ▪ கைவிடப்பட்ட அரசசொத்துக்களை மீள்திருத்தம் செய்தல் | 51 - 52 |
| ▪ பல்தரப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் | 53 |
| ▪ சுற்றுலா நடவடிக்கைகளுக்காக பொதுப்பயன்பாடுகளை வழங்கல் | 53 - 55 |
| ▪ அடிப்படை மனிதத் தேவைகளுக்கான பிரவேசம் | 55 -56 |
| ▪ வாழ்வாதார அபிவிருத்தி சுயதொழிலுக்கான ஒன்றிணைந்த வசதிகள் | 56 – 57 |
| ▪ வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியும் மீள்நிர்மாணமும் | 58 - 64 |
| ▪ நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் வேலைத்திட்டம் | 65 - 67 |
| 6. தந்திரோபாய முயற்சிகள் - பொருளாதார எழுச்சி | 68-92 |
| ▪ சுற்றுலா நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் அபிவிருத்தி | 69 |
| ▪ சுற்றுலா உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான வெளிநாட்டு உதவிதிட்ட பங்களிப்பு | 73-75 |
| ▪ சுற்றுலா நடவடிக்கைகளின் அபிவிருத்தி | 75-77 |
| ▪ சுற்றுலாத்துறையில் மனித வள அபிவிருத்தியை மேற்கொள்ளல் | 78-79 |
| ▪ பொதுப் பொழுது போக்கு வசதிகள் அபிவிருத்தி | 80 |
| ▪ தேசிய வனவிலங்குப் பூங்கா அபிவிருத்தி | 80-81 |
| ▪ தேசிய பசுமைப் பூங்காக்களின் பொது வசதிகள் அபிவிருத்தி | 82-86 |
| ▪ முதலீட்டு வளர்ச்சி | 87-92 |
| 7. நிதிச் செயலாற்றுகை | 93 - 112 |
| 8. கணக்காய்வாளரின் விசாரணை மற்றும் மீளாய்வு | 113-115 |

# முகவுரை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அனைத்து அபிவிருத்தியின் நுழைவாயில்களின் அத்திவாரமாவது "மனிதனைக் கட்டியெழுப்பி குடும்பத்தைக் காப்பதும், குடும்பத்தைக் கட்டியெழுப்பி கிராமத்தைக காப்பதும், கிராமத்தைக் கட்டியெழுப்பி உலகினை வெல்வதற்கும்" எனும் கோட்பாடாகும். அது முழு மொத்த அபிவிருத்தி வேலைக்கான ஏற்பாடாகும். (Inclusive Growth) இதன் ஆரம்ப தோற்றமாவது வெற்றிகரமாக சிறந்த மனித சமூகத்தை தோற்றுவிப்பதாகும். அதன் மூலம் எல்லாப் பகுதிகளிலும் வலுவூட்டப்பட்ட ஒரு குடும்பத்தை உருவாக்குவதற்கும், அதன் மூலம் கிராமிய, நகர மற்றும் மாகாணங்களை அபிவிருத்தி செய்து தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான தொழிற்சாலைகளின் அபிவிருத்தியினால் சர்வதேச பொருளாதாரம் மற்றும் பிணைக்கப்பட்ட பரந்த அளவிலான பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நோக்கி பயணிக்கின்றது. இதற்காக அமைச்சு 2012 ஆம் ஆண்டில் மிகவும் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை வழங்கியுள்ளது.

முழு நாட்டையும் உள்ளடக்கும் விதமாக திவிநெகும தேசிய வர்த்தகத்தின் III ஆம் கட்டமாக நன்மை பெறும் 25 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறுவதோடு 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும் IV ஆம் கட்டத்தில், 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 50 இலட்சம் அளவு நாட்டின் அனைத்துக் குடும்பங்களுக்கும் பயனடைவதற்கு செயற்படுத்தப்படுத்தப்பட்டுளளது.

கம நெகும வேலைத் திட்டத்தின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும், பாடசாலைகளில் சுத்திகரிப்பு வசதிகளை மேம்படுத்தலும் முன்பள்ளிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தலும் போன்ற பகுதிகளை வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுள்ளது. உடற் பயிற்சி வழிப்பாதையை அமைத்தல், பஸ் தரிப்பு நிலையம் அபிவிருத்தி, விளையாட்டு மைதானம் மற்றும் பொது மக்கள் பூங்கா அமைத்தல், நடை பாதை அபிவிருத்தி, வார சந்தை அபிவிருத்தி, தாய், சேய் மருத்துவ நிலையம் போன்ற நகர்ப்புற வசதிகள் அபிவிருத்தி, 'புரநெகும' வேலைத்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத்திற்கு செய்யும் பங்களிப்பினால் மாகாணங்களுக்கு அச் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுப்பதற்காக நாட்டின் அனைத்து மாகாண அபிவிருத்தியின் சார்பில் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேச வேலைத் திட்டங்கள் (வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம், மேற்கின் ரண் அருண, வடமேற்கின் மறுமலர்ச்சி, ருஹுணு உதானய, சப்ரகமுவ அருணலோகய, புபுதமு வெல்லஸ்ஸ, கந்துரட்ட உதாய மற்றும் ரஜரட்ட நவோதயம்) மூலம் எல்லா மாகாணங்களையும் உள்ளடக்கும் விதமாக அபிவிருத்தி நடவடிக்கை 2010 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும். இங்கு விசேட கவனமானது வடக்கு பிரச்சினைகளுக்குள்ளான பிரதேசங்களில் கண்ணி வெடி அகற்றுதலும், புலம் பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தலும், அவர்களின் வாழ்வாதார வழிகளை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அதற்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்திசெய்வதற்கும், புதிய வாழ்வாதார வழிகளை உருவாக்குவதும் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் முன்னுரிமையாக செயற்படுத்தப்படுகின்றது. இது தவிர 2012 ஆம் ஆண்டிற்குள் மாகாண அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவியின் கீழும் கூட உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தியும் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திக்குப் பொருத்தமான கருத்திட்டங்கள் பலவற்றை செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு முடியுமாக இருந்தது.

2016 ஆம் ஆண்டாகும் போது கொள்வனவு செய்யும் திறன் அதிகமாக உல்லாசப் பயணிகள் 2.5 மில்லியனை இந்நாட்டுக் கொண்டுவரும் நோக்கத்தை அடைவதற்காக தேவையான வேலைத்திட்டங்கள் கடந்த ஆண்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் 1.0 மில்லியன் உல்லாசப் பயணிகளை இந்நாட்டுக் கொண்டுவரும் நோக்கு அடைய சில உல்லாசப் பயணிகளை கொண்டு வருவதற்கு உல்லாசத்துறைக்குள் செயற்படுத்தப்படும் உல்லாசப் பிரிவுகளின் அபிவிருத்தி, மேம்படுத்தும் நடவடிக்கை மற்றும் உல்லாசத்துறைக்குள்ளேயே மனிதவள அபிவிருத்தி பெரும் உதவியாக இருந்தது.

2012 ஆம் ஆண்டில் 1.0 மில்லியன் முதலீடுகளை இந்நாட்டுக்கு கொண்டுவரும் நோக்கின் பிரகாரம் செயற்படுத்தப்படும் முதலீட்டுத்துறையை மேம்படுத்தும் நடவடிக்கை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதோடு மேலும் நேரடி தேசிய பொருளாதாரம் மற்றும் சர்வதேச பொருளாதாரத்திற்கிடையிலான சிறந்த பொருளாதார இணைப்பொன்றை கட்டியெழுப்புவதற்கும் முடியுமாயிருந்தது. 2012 ஆம் ஆண்டில் உள்நாட்டு வர்த்தகர்களை வலுவூட்டச் செய்வது சம்பந்தமாக விவசாயத் தொழிநுட்பம், மீன்பிடி மற்றும் கால்நடைகள், கட்டுமானம், கணனி மற்றும் சேவை நடவடிக்கைகள், உல்லாச மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற துறைகளில் பரந்த கருத்திட்டங்களை உருவாக்குவதோடு, முதலீட்டு மேம்பாடு சம்பந்தமாக முழுமையான சர்வதேச சந்தையுடன் தொடர்புபடுத்தி உயர் தொழிநுட்ப உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் இணைந்துகொண்ட மிகவும் உயர் பெறுமதியான உள்நாட்டு உற்பத்திக்கு சேர்த்துக் கொள்வதும் அமைச்சினால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகளிலொன்றாகும்.

"இலங்கை ஆசியாவின் அதிசயம்" என் உருவாக்கும் ஆசையுடன் இந்த முழு செயற்பாடுகளையும் இயக்குகின்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அதற்காக தேவையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மற்றும் நிறுவன வசதிகளை மேம்படுத்துவதும் நிருவாக நடவடிக்கைகளை மிகவும் எளிமையாக்குவதன் மூலம் வியாபார அபிவிருத்திக்கு மற்றும் முதலீட்டுக்கு சாத்தியமான சூழலொன்றை கட்டியெழுப்புவதனால் இலங்கை ஆசியாவின் உயர்ந்த பொருளாதாரமுள்ள நாடொன்றாக உருவாக்கும் நோக்கிற்காக தேவையான வேலைத்திட்டங்களை பரவலாக செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

# 1

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# தலைமைத்துவமும் நெறியாளர்களும்

## அமைச்சர்

கௌரவ பசில் ராஜபக்ஷ

## பிரதி அமைச்சர்கள்

கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன

கௌரவ ஆர். முத்து சிவலிங்கம்

## அலுவலக உத்தியோகத்தர்கள்

### செயலாளர்

பி.பீ. ஜயசுந்தர

### மேலதிக செயலாளர்கள்

| | | |
|---|---|---|
| நிஹால் சோமவீர | - | பிரதேச அபிவிருத்தி |
| ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்க | - | கிராமியப் பொருளாதாரம் |
| சந்திரா விக்ரமசிங்க | - | கால்நடை அபிவிருத்தி |
| என்.பி.எச். தர்மவர்த்தன | - | நிர்வாகம் |
| எம்.பி.கே. திசாநாயக்க | - | முதலீடு |

### ஆணையாளர் நாயகங்கள்

| | | |
|---|---|---|
| ரூபா எஸ். ஏக்கநாயக்க | - | நிர்வாகம் |
| எஸ்.எஸ்.ஹெட்டியாராய்ச்சி | - | சுற்றுலாத்துறை |
| சரோஜா சிறிசேனா | - | வெளி நாட்டு உதவி |
| சுனந்த மத்தும பண்டார | - | தொடர்பாடல் மற்றும் அபிவிருத்தி |
| சந்ரவங்ஷ பத்திராஜ | - | வனவிலங்குகள் மற்றும் பூங்கா |
| தம்ம திஸாநாயக்க | - | மக்களவை மற்றும் கிராம அபிவிருத்தி |
| பீ.எஸ். குணரட்ன | - | அபிவிருத்தி அமைப்பு |

### பிரதம கணக்காளர்

டபிள்யூ. விமலசேனா

### உள்ளக கணக்காய்வாளர்

எச். சந்திரசேனா

## பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட உதவி செயலாளர்கள்

| | | |
|---|---|---|
| ஆர்.பி.ஆர். அமரசிங்க | - | சிரேஷ்ட உதவி செயலாளர் |
| எம்.டி. நெவில் பத்மசிறி | - | சிரேஷ்ட உதவி செயலாளர் |
| எம்.ஏ.எஸ். வீரசிங்க | - | சிரேஷ்ட உதவி செயலாளர் |
| எச்.சி.எஸ். குணதிலக | - | பணிப்பாளர் (பொறியியலாளர்) |
| யு. சமரசிங்க | - | பணிப்பாளர் (கிராமிய பொருளாதாரம்) |
| டபிள்யூ. ஆனந்த விஜயசூரிய | - | பணிப்பாளர் (முதலீடு) |
| ஆர்.டி. அநுர ரணசிங்க | - | பணிப்பாளர் (திட்டமிடல்) |
| ஏ.எச்.எம்.யு. அருண பண்டார | - | பணிப்பாளர் (கண்காணிப்பு) |
| ஆர்.எச்.டபிள்யூ.ஏ. குமாரசிறி | - | பணிப்பாளர் (உலக உணவுத் திட்டம்) |
| என்.பி. மொண்டி ரணதுங்க | - | பணிப்பாளர் (பிரதேச அபிவிருத்தி மற்றும் புறநெகும) |
| எச்.எம். ஜெயதிலக கேரத் | - | பணிப்பாளர் (திவி நெகும) |
| என்.ஏ.பி. நிசங்க | - | பணிப்பாளர் (சுய வேலைவாய்ப்பு) |
| எம்.சி.கே. தம்மிக்க | - | பணிப்பாளர் (கம நெகும) |
| சி.ஆர். சூரியாராச்சி | - | பணிப்பாளர் (வறுமை ஒழிப்பு மற்றும் SAARC) |
| எம்.ஐ.ஏ. வகப்தீன் | - | பணிப்பாளர் (பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம்) |
| கே.என்.ஏ. சோமரத்ன | - | சிரேஷ்ட உதவி செயலாளர் |
| பி.வி. குணதிலக | - | சிரேஷ்ட உதவி செயலாளர் |
| டி.ஆர்.எல். அபேரத்ன | - | சிரேஷ்ட உதவி செயலாளர் |
| அலெக்சி குணவர்த்தன | - | பணிப்பாளர் (வெளிநாட்டு உதவி) |

### சிரேஷ்ட கணக்காளர்

எஸ்.யு. சந்திரகுமாரன்
எச்.பி. லலித் குமார
பி.ஆர்.எல். வசன்ந்த

# திணைக்களங்கள் நிறுவனங்களின் தலைவர்கள்

சந்திர விக்ரமசிங்க - ஆணையாளர் நாயகம்,
சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

எச்.டபிள்யூ.எம் புஸ்பலதா மெனிக்கே - ஆணையாளர் நாயகம், (பதிற்கடமை)
மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களம்

ஆர்.பி.பி. திலகசிறி - பணிப்பாளர் நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

ஏ.பி.எஸ். ரஞ்சித் குணசேகர - பணிப்பாளர் நாயகம், இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை

அமரநந்த வீரசிங்க - தலைவர், இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை

திலக் ஹெட்டியாராச்சி - பணிப்பாளர், கிராம அபிவிருத்தி பயிற்சி, ஆராய்ச்சி நிறுவனங்கள்

டி.எஸ்.ஏ. விஜேசுந்தர - பணிப்பாளர் நாயகம், தேசியப் தாவரவியல் பூங்காத் திணைக்களம்

பி.எம். அநுர டி சில்வா - பணிப்பாளர், தேசிய வனவிலங்குப் பூங்கா திணைக்களம்

நாலக கொடகேவா - தலைவர்
- இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை
- இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம்

ஜே.டி.நீல். ரூபசிங்க - தலைவர், இலங்கை சம்மேளனப் பணியகம்

சரத் சந்திர மொகொடி - தலைவர், இலங்கை சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

எம்.எம்.சீ. பெனான்டோ - தலைவர், இலங்கை முதலீட்டுச் சபை

விபுல வணிகசேகர - பணிப்பாளர், (பதிற்கடமை) இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை
- முகாமைத்துவ பணிப்பாளர், இலங்கை சம்மேளனப் பணியகம்

ரூமி ஜ.ஃ.பர் - முகாமைத்துவ பணிப்பாளர்,இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம்

சேனக்க விஜேவர்த்தன - பணிப்பாளர் நாயகம், இலங்கை சுற்றுலா, ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

# நோக்கு

மஹிந்த சிந்தனையூடாக நடுத்தர வருமானம் உள்ள நாடாக புதிய இலங்கையைக் கட்டி எழுப்புதல்.

# செயற்பணி

வலுவூட்டப்பட்ட பிரஜை, சகல வசதிகளும் கொண்ட வலுவான கிராமம், பலதரப்பட்ட சக்திகளும் கொண்ட சமபலம் எழுந்து வரும் ஒரு மாகாணம், மற்றும் நிரந்தர தேசிய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் கொள்கை, உபாய முறை, வேலைத்திட்டம் மற்றும் கருத்திட்ட வழங்களுக்கும் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான செயற்றிறனுள்ள பங்களிப்பைப் பெற்றுக் கொடுத்தல்.

# அமைச்சின் விடயப் பரம்பல்

2010 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 30 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1651/20 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலிற்கு இணங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்குக் கையளிக்கப்பட்டுள்ள விடயப் பரம்பல் பின்வரும் பிரகாரமாகும்.

1. வறுமை ஒழித்தல், உல்லாசக் கைத்தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பிற்குரிய கருத்திட்டங்களைத் தொகுத்தல் மற்றும் கொள்கை வழங்கல்.

2. வருடாந்தம் வரவு செலவுகளில் இருந்து ஒதுக்கப்படும் நிதிகளுக்கு இணங்க தேசிய திட்டச் செயற்படுத்துகைத் திணைக்களத்துடன் இணைந்து காலச் சட்டகத்திற்குள் தேசியக் கொள்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கான கொள்கை வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்.

3. அமைச்சின் கீழுள்ள பொது மக்களுக்குச் சேவை வழங்கும் நிறுவனங்களை மிகத்திறனுடனும் நட்பாகவும் நடாத்திச் செல்லல்.

4. மாசடைதல் மற்றும் அழிவைக் குறைத்து உரிய கைத்தொழிலின் திறனை உயர்த்துவதற்காக நவீன முகாமைத்துவ வழிமுறையையும் தொழில் நுட்ப விதிமுறைகள் பாவிப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சகல செயற்பாடுகளையும் முறைகளையும் மீள் தாபித்தல்.

5. கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி ஆரம்பத்தை செயற்படுத்தல்.

6. கிராம மற்றும் பிரதேச பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் கட்டங்களைச் செயற்படுத்தல்.

7. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை செயற்படுத்தல்.

8. உல்லாசக் கைத்தொழில் வளர்ச்சியை உரிய தரத்திற்கு உயர்த்துதல்.

9. உல்லாச முகவர் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

10. பசுமைப் பூங்காக்களை நடாத்துதல் மற்றும் பூ வளர்ப்புக் கைத்தொழிலிற்கு உதவியளித்தல்.

11 மிருகங்களைக் சேகரித்து அவை தொடர்பான கல்வி வேலைத்திட்டங்கள் மற்றும் கண்காட்சிகளை நடாத்தல்.

## 2012ஆம் ஆண்டு அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள்

சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

இலங்கை மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களம்

தேசிய வனவிலங்குப் பூங்கா திணைக்களம்

தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம்

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை

இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கை சம்மேளனப் பணியகம்

இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம்

இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

இலங்கை முதலீட்டுச் சபை

கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்

## வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கான அமைச்சின் மத்தியஸ்தம்




உருவக் குறிப்பு இலக்கம் 1:1

# 2

# வலுவூட்டப்பட்ட மனைப் பொருளாதாரம்

## 2.வலுவூட்டப்பட்ட மனைப்பொருளாதாரம்

நிகழ்கால அரசாங்கத்தின்முன்னோடிப் பிரபலமான மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள "வாழ்வாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் ஊடாக 2016 ஆம் ஆண்டை அடையும் போது வளங்களினால் நிறைந்த சுபீட்சமுள்ள கிராமத்தை நிர்மாணிக்கிறேன்" என்ற எண்ணக்கரு மற்றும் 2011 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உண்மை நிலைக்கு உருவாக்க திவிநெகும நிகழ்ச்சித் திட்டம் தேசிய மட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தின் முன்னேற்றத்தை எதிர்பார்த்து, குடும்பத்தைக் கேந்திரமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சித் திட்டம் விவசாயம், மிருக வளம், மீன்.வளர்ப்பு மற்றும் தொழில் முயற்சி ஆகிய பிரிவுகளின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் அன்றாடப் பாவனைக்குத் தேவையானவற்றை வீட்டிற்குள்ளேயே பூர்த்தி செய்து கொள்வதையும், மேலதிக உற்பத்திகளை விற்பனை செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்வதையும் இத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கு இணங்க 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பமான வீட்டுப் பொருளாதார அலகுகள் இருபது இலட்சத்தையும்,ஒக்தோபர் மாதத்தில் ஆரம்பமான வீட்டுப் பொருளாதார அலகுகள்சுமார் ஐம்பது இலட்சம் மட்டிலான நாட்டின் சகல குடும்பங்களையும் இலக்காகக் கொண்டு இந்த நிகழ்ச்சித் திட்டம் பின்வருமாறு செயற்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1. விவசாயப் பிரிவு

வீட்டுத் தோட்டத்தை அபிவிருத்தி செய்வதன் ஊடாக வீட்டுக்குத் தேவையான காய்கறிகள், பழவகைகளை ஆகியவற்றை வீட்டுத் தோட்டத்திலேயே பெற்றுக் கொள்வதற்கும், அதன் மூலம் குடும்பத்தின் போசாக்கை உயர்த்துவதற்கும், வீட்டுப் பொருளாதாரத்தை விருத்தி செய்வது போல் உள்நாட்டுப் பயிர்களை ஊக்குவிப்பதன் ஊடாக விவசாயப் பயிர்களின் இறக்குமதியைக் குறைத்துக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் திவிநெகும தேசியத் திட்டத்தின் பிரதானப் பிரிவாக விவசாயப் பிரிவு செயற்படுத்தப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு இறுதியாகும் போது இந்தப் பிரிவிற்காக 1559.81 மில்லியன் ரூபா செலவு செய்து தேவையான உள்ளீடுகளைப் பயனாளிகளுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட் டுள்ளன. மூன்றாம் மற்றும் நான்காம் கட்டங்களின் கீழ் சகலதும் பூர்த்தியாகிய வீட்டுத் தோட்டம் ஒன்றைக் கட்டி எழுப்புவதை நோக்காகக் கொண்டு அன்றாடப் பாவனைக்குத் தேவையான காய்கறிகள் மற்றும் கீரை வகைகள்,குறுகிய காலப் பயிர்கள், மத்திய கால மற்றும் நீண்டகாலப் பயிர்கள் மற்றும் தேனீ வளர்ப்பை விரிவுபடுத்தவதற்கும், காளான் பயிர்ச் செய்கையை உயர்த்துவதற்கும் தேவையான உள்ளீடுகளைப் பயனாளிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அதே போல் 2012 ஆம் ஆண்டு இறுதியாகும் போது 27,28176 தென்னங் கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டு 42,628 ஏக்கர் நிலப்பரப்பில் தேசியத் தெங்கு உற்பத்திக்கு திவிநெகும திட்டத்தின் ஊடாக பங்களிப்புச் செலுத்தியுள்ளதுடன், அதன் ஊடாக ஐந்து ஆண்டுகளில் வீட்டின் தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெய்ப் பாவனையை உயர்த்துவதன் ஊடாக மாற்றுவழி எண்ணெய் நுகர்விற்குவெளிநாட்டிற்கு இழுத்துச் செல்லப்படும் அன்னியச் செலாவணியைக் குறைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப் பட்டுள்ளது.
இதற்கு மேலதிகமாக நாட்டில் பழங்கள் உற்பத்தியை உயர்த்துதல் மற்றும் குடும்பத்தின் பழத் தேவையால் தன்னிறைவடைவதை நோக்காகக் கொண்டு 2012 ஆம் ஆண்டிற்குள் 3.96 மில்லியன் பழக்கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக எதிர்வரும் ஐந்து வருட காலத்திற்குள் பழ உற்பத்தியின் அளவு 40% வீதத்தால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளன.

மேலும் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பயிர் வகைகளான பயறு, எள்,உளுந்து, நிலக்கடலை, மற்றும் உலர் மிளகாய் ஆகிய பயிர் வகைகளை பயிர் செய்வதன் ஊடாக உள்நாட்டுத் தேவையை உள்நாட்டிற்குள்ளேயே பூர்த்தி செய்து கொண்டு இறக்குமதியைக் குறைப்பதன் ஊடாக அன்னியச் செலாவணியை மீதப்படுத்திக் கொள்வதன் ஆரம்பமாக 2012 ஆம் ஆண்டில் சுமார் பத்தாயிரம் ஏக்கர் மட்டில் பயிர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

### 2.1.1 கட்டை இன முருங்கைக்கன்று பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டம்

கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களின் பிரேரணைக்கு இணங்க, வடக்கில் போன்றே, கிழக்கிற்கும் உரித்தான பயிராக கட்டை இன முருங்கைக்கன்று பகிர்ந்தளிக்கும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போசாக்கு வளத்தில் மிகவும் உயர்தல், ஆறு (06) மாத காலத்திற்குள் காய்த்தல் மற்றும் பயிர் விருத்தி அடைவதற்காக குறைந்த அளவு இடவசதி தேவைப்படல் மற்றும் வருடம் முழுக்க பயன்தருவது இதன் விஷேட தன்மையாகும்.

அதற்கு இணங்க 2012 ஆம் ஆண்டு மே/ஜூன் சிறு போகத்தின் போது 05 இலட்சம் கட்டை முருங்கைக்கன்றுகள் பிரதேச செயளாலர் பிரிவுகள் ஊடாக நாடு முழுக்கப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.



பயறுப் பயிர்ச் செய்கை
திவிநெகும வேலைத்திட்டம்
திக்வெல்ல பிரதேச செயளாலர் பிரிவு.
மாத்தறை மாவட்டம்



தேனீ வளர்ப்பு தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு
தமன்கடுவைப் பிரதேச செயளாலர் பிரிவு
பொலன்னறுவை மாவட்டம்



கட்டை இன முருங்கை பயிர்ச்செய்கை
நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு
யாழ்ப்பாண மாவட்டம்



வீட்டுத் தோட்டம்
திவிநெகும வேலைத்திட்டம்
மெதிரிகிரிய பிரதேச செயளாலர் பிரிவு
பொலன்னறுவை மாவட்டம்

### 2.1.2 பாதுகாப்பான வீட்டுத் தோட்டத்திற்குள் உயர் பெறுமதியுடன் கூடிய பயிர்களைப் பயிரிடல்.

நாட்டில் நிலவும் பல்வேறு வானிலை மற்றும் காலநிலைக்கு முகங்கொடுக்கக் கூடிய பிரகாரம் வருடம் முழுக்க காய்கறிகள்,பழவகைகள், வர்த்தகப் பெறுமதியுடன் கூடிய வெளிநாட்டுச் சந்தைகளில் மிகச் சிறந்த கேள்வியுள்ள பூ வகைப் பயிர்கள் மற்றும் உயர் பெறுமதியுடன் கூடிய பயிர்களைப் பெற்றுக் கொள்ளும் ஆற்றலைக் கட்டி எழுப்பும் வகையில் பச்சைவீடு என்று அழைக்கப்படும் பாதுகாப்பு வலை வீட்டிற்குள் பயிரிடல், திவிநெகும தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. 2012.12.31 ஆம் திகதியாகும் போது நிர்மாணித்து பாவணைக்கு எடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலை வீடுகளின் தொகை 2297 ஆகும்.

**2012 ஆம் ஆண்டின் விவசாயப் பிரிவின் முன்னேற்றம்** அட்டவணை 2.1.1

| பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள பொருட்கள் | பகிர்ந்தளிக்கப்பட்ட அளவு | செலவு(மி.ரு.) |
|---|---|---|
| விதைப் பொதிகள் | 7,509,406 | 633.97 |
| காய்கறிச் செடிகள் | 4,297,853 | 51.88 |
| பழப் பயிர்ச் செடிகள் | 3,955,492 | 350.83 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செடிகள் | 2,449,501 | 64.27 |
| தானிய வகைகள்(05 பயிர் வகைகளினால் தன்னிறைவு அடைவதற்கு) | 14,734 | 4.73 |
| மூலிகைச் செடிகள் | 39,748 | 2.53 |
| தென்னங் கன்றுகள் | 2,728,176 | 111.95 |
| ஏனைய செடிகள் | 1,207,726 | 37.4 |
| தேனி வளர்ப்பு உள்ளீடுகள் | 9,016 | 20.22 |
| காளான் பயிர் உள்ளீடுகள் | 2,730 | 26.01 |
| அலங்காரப் பயிர் உள்ளீடுகள் | 2,154 | 39.58 |
| பாதுகாப்பு வலை வீடுகளுக்கான உள்ளீடுகள் | 2,297 | 175.26 |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### 2.2. விலங்கு வளர்ப்புப் பிரிவு

இலங்கையில் சிறுவர் சந்ததிகளுக்கிடையில் நிலவும் மந்த போசணை மற்றும் புரதக் குறைபாட்டைக் குறைப்பதற்கு விலங்குப் புரதம் உதவியாக அமைவதனால் வீடு தொடர்புள்ளவிலங்குப் புரதம் அதிகமாகக் கிடைக்கும் பசுப் பால், முட்டை போன்ற உணவுகளை உற்பத்தி செய்தல் இந்தப் பிரிவின் கீழ் செயற்படுத்த ப்படுகிறது. அதன் ஊடாக மந்த போசாக்கு நிலைக்குப் பரிகாரம் கிடைப்பதுடன், உணவு இறக்குமதிக்காகச் செலவு செய்யப்படும் பணத்தை நாட்டுக்காக மீதப்படுத்துவதற்கு உதவியாக அது அமையும்.

விலங்கு வளப்பிரிவின் கீழ் கோழிக் குஞ்சுகள், கறவைப் பசுக்கள், ஆடுகள் போன்ற விலங்குகளைப் பெற்றுக் கொடுத்தல். மாட்டுக் கொட்டகைகளை நிர்மாணித்தல் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2012.12.31 ஆம் திகதிக்குள் குறித்த கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு 365.00 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

**2012.12.31 ஆம் திகதிக்குவிலங்கு வளர்ப்புப் பிரிவின் முன்னேற்றம்** அட்டவணை: 2.2.1

| செயற்பாடுகள் | தொகை | செலவு (மி.ரு.) |
|---|---|---|
| கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளித்தல் | 488,780 | 163.04 |
| கறவைப் பசுக்கள் பகிர்ந்தளித்தல் | 1,810 | 5.68 |
| ஆடுகள் பகிர்ந்தளித்தல் | 3,547 | 18.14 |
| மாட்டுக் கொட்டகைகளை நிர்மாணித்தல் | 5,319 | 148.06 |
| கோழிக் கூடுகளை நிர்மாணித்தல் | 6,536 | 28.48 |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



கோழி வளர்ப்புக் கருத்திட்டம்
அதுரலிய கிராம சேவகர் பிரிவு
மாலிம்பட பி.செ பிரிவு
மாத்தறை மாவட்டம்



ஆடுகள் பகிர்ந்தளித்தல்
அக்மீமனை பி.செ பிரிவு
காலி மாவட்டம்

## 2.3 மீன் வளர்ப்புப் பிரிவு

திவிநெகும மீன் பிரிவின் கீழ் மீன்கள் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் ஊடாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பேரில், மீன்கள் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், தேசிய நீர்வாழ்ப் பண்ணைகள் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நீரக வளங்கள் ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனங்கள் ஊடாகவும், 12 மீன் வளர்ப்புக் கருத்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டில் செயற்படுத்தப் பட்டுள்ளதுடன் அதன் மூலம், உணவுப் பாதுகாப்பை உயர்த்துதல்,விலங்குப் புரதத்தின் தேவையை நிவர்த்தி செய்தல், மேலதிக வருமானம் ஈட்டுதல்,அறுவடைக்குப் பின்னான அழிவைக் குறைத்தல், மீன் மற்றும் நீர்வாழ் பயிர்ச்செய்கை தொடர்பான அறிவு மற்றும் தொழில் நுட்பத்தைப் பெற்றுக் கொடுப்பதன் உடாக வறுமையைக் குறைப்பதற்கும் மற்றும் அன்னியச் செலாவணியை ஈட்டுவதை நோக்காகவும் கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கருத்திட்டங்கள் தனி நபர் கருத்திட்டமாகவும்,குழுக் கருத்திட்டமாகவும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடையும் போது தொட்டிகளுக்குள் உணவுக்காக மீன்/நன்னீர் இறால் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு, எசித்தன்களை எங்கில்லன் வரை விருத்தி செய்தல், ஒன்றிணைந்த மீன் வளர்ப்பு, அலங்கார மீன் பயிர்ச் செய்கையாளர்களின் நிலையை உயர்த்துதல், நத்தை வளர்ப்பு மற்றும் காலத்திற்கேற்ற மீன் வளர்ப்பு, தோட்ட நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பு, மோதா மீன் வளர்ப்பு, மற்றும் அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பக் கருத்திட்டங்கள் 6,764 ஐச் செயற்படுத்தியுள்ளதுடன், இதற்காக 105.81 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன.

புகைக் கருவாடு உற்பத்தி மற்றும் கடற்கரைப் பயிர்செய்கைக்கான பயிற்சிகள் முடிக்கப்பட்டுள்ளதுடன், 2013 ஆம் ஆண்டில் 54 பயனாளிகளிகளின் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன.

### 2012.12.31 ஆம் திகதிக்கு மீன் வளர்ப்புப் பிரிவின் முன்னேற்றம்

அட்டவணை : 2.3.1

| தொடர் | கருத்திட்டம் | ஆரம்பிக்கப்பட்டுள்ள பயனாளிகள் |
|---|---|---|
| 01 | தொட்டிகளுக்குள் உணவுக்காக மீன்/நன்னீர் இறால் வளர்ப்பு, | 516 |
| 02 | அலங்கார மீன் வளர்ப்பு, (புதிய) | 577 |
| 03 | எசித்தன்களை எங்கில்லன் வரை விருத்தி செய்தல், | 24 |
| 04 | ஒன்றிணைந்த மீன் வளர்ப்பு, | 113 |
| 05 | அலங்கார மீன் பயிர்ச் செய்கையாளர்களின் நிலையை உயர்த்துதல | 793 |
| 06 | நத்தை வளர்ப்பு | 18 |
| 07 | காலத்திற்கேற்ற நீர்த்தேக்களின் மீன் வளர்ப்பு, | 760 |
| 08 | தோட்ட நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பு | 230 |
| 09 | நன்னீர் புகைக் கருவாடு உற்பத்தி | உபகரணங்களுக்கான கேள்விகோரப்பட்டுள்ளன. 2013 ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன. |
| 10 | கடற்கரைப் பயிர்செய்கை | |
| 11 | மோதா மீன் வளர்ப்பு, | 43 |
| 12 | அறுவடைக்குப் பின்னான தொழில்நுட்பக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல் | 2675 |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு





கருவாடு உற்பத்திக் கருத்திட்டம்
திவிநெகும வேலைத்திட்டம்
யாழ்ப்பாண மாவட்டம்

நன்னீர் மீன்வளர்ப்புத்திட்டம்
அம்பகமுவ பி.செ.பிரிவு
நுவரேலியா மாவட்டம்





நன்னீர் மீன்வளர்ப்பு (அறுவடை)
தனமல்வில பி.செ.பிரிவு
மொனராகலை மாவட்டம்



நன்னீர் மீன் வளர்ப்புக் கருத்திட்டம்
மொனராகலை மாவட்டம்

## 2.4 தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு

திவிநெகும வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டிற்கு உள்ளிட்ட கைத்தொழிலை ஆரம்பித்தல் மற்றும் விருத்தி செய்வதன் மூலம் குடும்பத்தைப் போன்று நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக விஷேட பொறுப்புக்களை ஈடு செய்ய முடியும். அதற்கு இணங்க திவிநெகும தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் வீட்டுக் கைத்தொழிலைத் தாபிக்கும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வேலைத்திட்டத்தின் முதலாம் கட்டமாக வீட்டுக் கைத்தொழிலிற்குறிய தொழில் நுட்பம், சந்தை வசதி மற்றும் பயிற்சிச் சந்தர்ப்பங்கள் தொடர்பாக அறிவுறுத்தும் கண்காட்சி அந்தந்த மாவட்டங்களிற்கு ஏற்ற கைத்தொழில் மற்றும் பலம் தொடர்பாக விஷேட கவனத்தைச் செலுத்தி மாவட்ட மட்டத்தில் நடாத்தியுள்ளதுடன், 2012.12.31 ஆம் திகதியாகும் போது 24 மாவட்டங்களிலும் கண்காட்சிகளை நடாத்தி மக்களை அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இதன் இரண்டாம் கட்டமாக கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கான பயிற்சிகள் தேவைப்படும் நபர்களைத் தெரிவு செய்து கொண்டு பின்வரும் துறைகள் உள்ளடங்கலாக பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டுள்ளன.

- உணவுசார் உற்பத்திக் கைத்தொழில்
- தோல் பொருட்கள் உற்பத்திகள்
- மரம் சார்ந்த கைத்தொழில்
- தும்பு மற்றும் நார் உற்பத்திக் கைத்தொழில்
- இறப்பர் பிளாஸ்டிக் கைத்தொழில்
- இரசாயன உற்பத்திகள் தொடர்பான கைத்தொழில்
- ஒளி பொறியியல் கைத்தொழில்
- கடதாசி சார்ந்த கைத்தொழில்
- ஆடைகள் இணைப்பு வேலை,செல்லப்பிராணிகள் தொடர்பான கைத்தொழில்
- நிர்மாணம் தொடர்பான கைத்தொழில்
- மின் பொறியியல் தொடர்பான கைத்தொழில்
- மூங்கில் மரம்,பிரம்பு தொடர்பான கைத்தொழில்
- மண் தொடர்பான கைத்தொழில்
- கித்துள் மற்றும் பனை தொடர்பான கைத்தொழில்
- கைத்தறிப் பொருட்கள் தொடர்பான கைத்தொழில்.
- சுத்தமான தேங்காய் எண்ணெய் உற்பத்திக் கைத்தொழில்
- சேவைகள்
- விவசாயம் தொடர்பான உற்பத்திக் கைத்தொழில்
- காளான் தொடர்பான கைத்தொழில்
- அலங்காரப் பூ தொடர்பான கைத்தொழில்

வெற்றிகரமாக பயிற்சியை முடித்த நபர்களுக்கும், பயிற்சி தேவையற்ற தற்பொழுது தொழில் நுட்ப அறிவு உள்ள நபர்களுக்கும் தத்தமது வீட்டுக் கைத்தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான மூலதன உபகரணம் மற்றும் ஆரம்ப மூலப் பொருளை பெற்றுக் கொடுத்துள்ளதுடன், தற்பொழுது 12,535 பயனாளிகளுக்கு வீட்டுக் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவையான வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. 2012.12.31 ஆம் திகதிக்குள் கைத்தொழில் பிரிவிற்காக 178.69 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன.

தற்பொழுது ஏதாவது கைத்தொழில் ஒன்றில் ஈடுபட்டுள்ள நபர்களின் நன்மை கருதி அவர்களின் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக மேலும் நிதிவசதிகள் தேவைப்படும் நபர்களுக்கு மாவட்ட மட்டத்தில் வங்கி உத்தியோகத்தர்களை அழைத்து கருத்தரங்கு ஒன்றை நடாத்தி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், தற்பொழுது நான்கு மாவட்டங்களில் இந்த வங்கி வேலைத்திட்டங்களை நடாத்தி 573 பயனாளிகளிற்கு தேவையான நிதிவசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





வீட்டுக் கைத்தொழில் பயிற்சியின் பின்னர் தொழில் முயற்சி
தனமல்வில பிரதேச செயளாலர் பிரிவு –மொனராகலை மாவட்டம்



பயிற்சியின் பின்னர் தும்பு உள்ளிட்ட
உற்பத்திக் கைத்தொழில்
ஹிக்கடுவை பிரதேச செயளாலர் பிரிவு
காலி மாவட்டம்

### 2.4.1சுயதொழில் வேலைத்திட்டம்

சுயதொழிலை செயற்படுத்தல் மற்றும் அது தொடர்பான அரச நிறுவனங்களுடன் ஒன்றிணைந்த சுயதொழில் ஈட்டுதல் மற்றும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இந்தப் பிரிவின் பிரதான பொறுப்பாகும்.

2012 ஆம் ஆண்டுவரவு செலவுப் பிரேரணைக்கு இணங்க ஊனமுற்ற, ஊனமுற்று ஓய்வு பெற்ற முப்படையினருக்கும் மற்றும் பொலிஸ் படையினருக்கும்,மற்றும் உயிரழந்த மற்றும் காணாமற் போன முப்படையினருக்கும்மற்றும் பொலிஸ் படைவீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு சுயதொழில் கடன் பெற்றுக் கொள்வதற்காக இராணுவ திவிநெகும சுயதொழில் விஷேட கடன் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்த சுழற்சிக் கடன் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 2012 ஆம் ஆண்டிற்குள் 10.00 மில்லியன் ரூபா நிதியேற்பாடு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. கடன் பெற்றுக் கொடுப்பதற்காக அமைச்சினால் வழங்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக பிரதேச அபிவிருத்தி வங்கியினால் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

## இராணுவ திவிநெகும சுயதொழில் விஷேட கடன் திட்டம்

2012.12.31 ஆம் திகதிக்குள் பிரதிலாபதில் ஏற்பட்ட முன்னேற்றம் அட்டவணை:2.4.1

| இல | சுயதொழிலின் வகைகள் | பயனாளிகள் தொகை | | | கடன் பணம் (மி.ரூ.) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | புதிய சுயதொழிலை ஆரம்பித்தல் | சுயதொழிலை மேம்படுத்தல் | மொத்தம் | புதிய சுயதொழிலை ஆரம்பித்தல் | சுயதொழிலை மேம்படுத்தல் | மொத்தம் |
| 1 | வியாபாரம் | 4 | 6 | 10 | 1.80 | 2.75 | 4.55 |
| 2 | ஆடைக் கைத்தொழில் | 0 | 2 | 2 | | 1.00 | 1.00 |
| 3 | விவசாய நடவடிக்கைகள் | 8 | 9 | 17 | 3.50 | 3.80 | 7.30 |
| 4 | சேவை வழங்கல் | 2 | 3 | 5 | 1.00 | 1.50 | 2.50 |
| 5 | கோழி வளர்ப்பு | 1 | 0 | 1 | 0.20 | 0.00 | 0.20 |
| 6 | சிறு கைத்தொழில் | 2 | 6 | 8 | 1.00 | 2.75 | 3.75 |
| 7 | தும்புக் கைத்தொழில் | 0 | 1 | 1 | 0.00 | 0.50 | 0.50 |
| 8 | முச்சக்கர வண்டி கொள்வனவு செய்தல் | 3 | 0 | 3 | 1.50 | 0.00 | 1.50 |
| மொத்தம் | | **20** | **27** | **47** | **9.00** | **12.30** | **21.30** |

மூலம் : பிராந்திய அபிவிருத்தி வங்கி

## 2.5. திவிநெகும திட்டத்தினால் ஏற்பட்ட பலாபலன்கள்

கடந்த பலவருடங்களில் ஜனவரி தொடக்கம் டிசம்பர் மாதம் வரை காய்கறிகளின் விலையைக் கவனத்திற் கொள்ளும் போது ஏப்ரல் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் (அவ்வாறாயின் பண்டிகை மாதங்களில்) காய்கறிகளின் விலைகள் கடுகதியாக அதிகரித்துள்ளது. இருந்த போதிலும் அந்த வருடத்திற்குச் சமமாக 2012 ஆம் ஆண்டில் அந்த மாதங்களின் போது காய்கறிகளின் விலைகளில் வீழ்ச்சியைக் காணக்கூடிதாக உள்ளது. மேலும் மொத்தமாக 2011 ஆம் ஆண்டிற்கு சமமாக 2012 ஆம் ஆண்டில் காய்கறிகளின் விலைகளில் வீழ்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது. திவிநெகும தேசிய வேலைத்திட்டத்தின் ஊடாக உருவான மலர்ச்சி காரணமாக பலர் தத்தமது வீட்டுத் தோட்டங்களில் பயிர்களை பயிரிட்டமையேஇவ்வாறான விலை வீழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது

வரைபு : 2.5.1




மூலம் : ஹெக்டர் கொபெகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிலையம்

வரைபு: 2.5.2




மூலம் : மூலம் : ஹெக்டர் கொபெகடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிலையம்

## 2.6.திவிநெகும வேலைத்திட்டத்தின் வெற்றிகள் மற்றும் சவால்கள்

நிகழ்காலத்தில் இலங்கை, உலகில் பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குச் சமமாக பாரிய அபிவிருத்தியை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. உலகில் எந்த நாட்டிற்கும்பழுவல்லாது வாழ்வதாயின் எங்கள் நாடு சகல துறைகளிலும் தன்னிறைவை ஏற்படுத்துவதை மட்டுமல்லாமல் சகல இனங்களதும் வாழ்க்கையை வலுப்படுத்துவது அவசியமாகியுள்ளது. இறந்த காலத்தில் இருந்து இலங்கை விவசாயத் துறையில் தன்னிறைவு அடைந்துள்ளமை இரகசியமற்ற ஒன்றாகும். திறந்த பொருளாதாரக் கொள்கையின் வருகையுடன் அந்த நிலை படிப்படியாக மாறுவதற்கு ஆரம்பித்தது. மீண்டும் தன்னிறைவடைவதற்கு மனைப் பொருளாதார அலகை ஏற்படுத்துவதற்காக திவிநெகும தேசிய வேலைத்திட்டம் மிகவும் உகந்ததாகும்.

அன்றாடம் பாவனைக்குத் தேவையான சகலவற்றையும் சந்தையில் கொள்வனவு செய்வதற்குப் பழகியுள்ள மக்கள் தமக்கு இயன்ற வகையில் வீட்டுத் தோட்டத்திலேயே பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மனோநிலையைப் பெற்றிருக்கின்றனர். நச்சுத் தன்மையற்ற சுத்தமான துாய போசாக்கு மிக்க காய்கறிகள், பழவைகைகளை உணவில் சேர்த்துக் கொள்வது மிகச் சிறந்த முன்னெடுப்பாகக் காணப்படுகிறது. அத்துடன் நோயற்ற திடகாத்திரமுள்ள மக்களை உருவாக்குவதற்கு அது வழிகோலியுள்ளது.

கோழி வளர்ப்பின் கீழ் தமது வீட்டிற்கு உள்ளேயே நாளாந்த முட்டைப் பாவனையைப் பூர்த்தி செய்வதற்கு முடிந்துள்ளதால் கூடிய விலையின் கீழ் சந்தையில் முட்டையைக் கொள்வனவு செய்து பாவிக்காத மக்களுக்கு நாளாந்தம் தமது சாப்பாட்டு வேளையில் முட்டையினால் போசாக்கைப் பெற்றுக் கொள்வதற்கு முடிந்துள்ளது. அவ்வாறே கறவை மாடு வளர்ப்பின் காரணமாக பால் மா பாவனைக்குப் பழகி இருந்த மக்கள் துாய பசுப் பாலைப் பருகுவதற்கு ஆரம்பித்துள்ளனர். திவிநெகும வேலைத்திட்டம் வீட்டுத் தோட்டத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் ஒன்றல்ல. அதன் ஊடாக குடும்பத்தின் அபிவிருத்திக்கான சகல துறைகளையும் உள்ளடக்கும் வேலைத்திட்டமாகும். அதற்கு இணங்க வியாபார அபிவிருத்தியின் கீழ் சுயதொழிலில் ஈடுபட்டுவதற்கு விருப்பம் உள்ள நபர்களுக்கு அதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொடுத்து சிறு கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக தொழிலில் விரக்தி அடைந்திருந்த மக்களுக்கு தொழிலாளர்களாக மட்டுமல்லாது தமது திறைமையின் ஊடாக எழுந்து நிற்கக்கூடிய அபிமானமுள்ள பிரஜைகள் உருவாக்கப்பட்டுள்ளனர்.

இந்த சகல வெற்றிகளுக்கும் மத்தியில் இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதற்காக தடையான சவால்கள் இல்லாமல் இல்லை. எந்த நாட்டிலும் பலதரப்பட்ட மக்கள் பகுதி ஒன்று இருக்கத்தான் செய்கிறது. தமது சக்தியின்மூலம் முன்னேறுவதற்கு முயற்சி எடுக்கும் மனிதர்கள் உள்ள சமூகத்தினுள் அடுத்தவர்களில் தங்கி வாழும் துர்க்கதியுடைய மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவ்வாறான மக்களின் குடும்பத்தின் முன்னேற்றத்தை எதிர்பார்த்து சொந்த முயற்சியினால் எழுந்து நிற்கும் மக்களுக்குக் கைகொடுப்பதென்பது இந்த வேலைத்திட்டத்திற்கான சவாலாகும்.அவ்வாறே இந்த வேலைத்திட்டத்தைக் கீழ் மட்டத்தில் இருந்து செயற்படுத்தும் போது நியமிக்கப்பட்ட வசதியளிப்போர்களின் மத்தியஸ்தம், இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்கு எதிர்பார்த்த மட்டத்தில் கிடைக்காமை மேலுமொரு சவாலாகும். அத்தியாவசிய உணவு இறக்குமதிக்காகப் பாரிய அளவு நிதியைச் செலவு செய்யும் அவ்வாறான பொருட்களை இந்த நாட்டிற்குள் பயிரிடக் கூடிய மிளகாய், எள், உளுந்து, கௌபி, பயறு, நிலக்கடலை போன்ற பயிர்களால் தன்னிறைவு அடைவதே இந்த வேலைத்திட்டத்தின் எதிர்கால இலக்காகும்

**திவிநெகும முன்னேற்றம் - 2012** அட்டவணை: 2.6.1

| இல | மாவட்டடம் | விவசாயம் ரூபா.(மில்) | கால்நடை வளர்ப்பு ரூபா.(மில்) | கைத்தொழில் ரூபா.(மில்) | ஏனைய செலவுரூபா.(மில்) | மொத்த செலவு ரூபா.(மில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 13.88 | 7.22 | 3.78 | 25.98 | **50.86** |
| 2 | கம்பஹா | 41.12 | 18.75 | 14.42 | 81.16 | **155.44** |
| 3 | களுத்துறை | 30.56 | 10.83 | 8.49 | 58.96 | **108.85** |
| 4 | இரத்தினபுரி | 42.14 | 12.69 | 10.33 | 5.56 | **70.72** |
| 5 | கேகாலை | 47.54 | 6.90 | 11.04 | 6.76 | **72.25** |
| 6 | குருநாகல் | 85.41 | 16.08 | 1.76 | 10.83 | **114.08** |
| 7 | புத்தளம் | 31.15 | 23.70 | 2.32 | 40.77 | **97.94** |
| 8 | அநுராதபுரம் | 26.79 | 15.01 | 4.91 | 18.70 | **65.41** |
| 9 | பொலன்நறுவை | 37.04 | 10.63 | 10.77 | 20.09 | **78.54** |
| 10 | காலி | 44.61 | 20.24 | 8.79 | 31.19 | **104.83** |
| 11 | மாத்தறை | 92.18 | 9.29 | 3.31 | 47.06 | **151.84** |
| 12 | அம்பாந்தோட்டை | 66.27 | 8.38 | 6.85 | 65.20 | **146.70** |
| 13 | மொனராகலை | 24.44 | 8.68 | 10.77 | 2.83 | **46.71** |
| 14 | பதுளை | 54.20 | 26.40 | 16.23 | 35.96 | **132.79** |
| 15 | நுவரேலியா | 44.54 | 17.04 | 8.34 | 2.30 | **72.22** |
| 16 | கண்டி | 44.17 | 35.57 | 7.59 | - | **87.33** |
| 17 | மாத்தளை | 32.78 | 11.57 | 13.22 | 24.75 | **82.32** |
| 18 | திருகோணமலை | 11.61 | 4.37 | 1.09 | 5.33 | **22.40** |
| 19 | மட்டக்களப்பு | 15.89 | 10.50 | 3.45 | 10.52 | **40.35** |
| 20 | அம்பாறை | 52.41 | 28.32 | 0.14 | 1.08 | **81.95** |
| 21 | வவுனியா | 0.83 | 2.51 | 2.20 | 3.66 | **9.20** |
| 22 | மன்னார் | 2.90 | 1.00 | 1.88 | 1.00 | **6.78** |
| 23 | யாழ்ப்பாணம் | 8.63 | 11.81 | 8.85 | 2.00 | **31.29** |
| 24 | முல்லைத்தீவு | 5.00 | 7.49 | 3.93 | 1.30 | **17.72** |
| 25 | கிளிநொச்சி | 4.01 | 1.00 | 3.79 | 1.20 | **10.00** |
| 26 | ஏனைய அரச நிறுவனங்கள் | 699.70 | 144.83 | 13.21 | 155.14 | **1,012.87** |
| 27 | பொருளாதார அபிவிருத்தி | - | - | - | 41.59 | **41.59** |
| **மொத்தம்** | | **1,559.81** | **470.81** | **181.47** | **700.90** | **2,912.99** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

*ஏனைய செலவுகளின் கீழ்நிலுவைச் செலவு, திரிய பியஸ வீட்டு வேலைத்திட்டம், திவிநெகும் சந்தை, நெல் களஞ்சிய சாலைகளை நவீனமயப்படுத்தல், மீனவர் எரிபொருள் நிவாரணம் ஆகிய செலவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2.7.சமூகப் பாதுகாப்பு – சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம்

அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையில் முழு நாடு பூராகவும் உள்ள குறைந்த வருமானம் பெறுவோர் சார்பாக செயற்படுத்தப்படுகின்ற சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் வறுமையை ஒழிக்கும் உறுதிபூணச் செயற்படத் தூண்டும் சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டங்கள் உதவி நிகழ்ச்சித்திட்டங்களாகும். சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படத் தூண்டுகின்றது. அதன் பிரகாரம் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொடுப்பதை நோக்காகக் கொண்டு 2012 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும் பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறாகும்.

- சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டம்
- தாய்மார்களுக்கான போசணை நிகழ்ச்சித்திட்டம் (போசணைப் பொதி நிகழ்ச்சித்திட்டம்)
- சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

### 2.7.1சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டம்

1995 ஆம் ஆண்டிலிருந்து சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டம் நாடு பூராகவும் பரந்துள்ள குறைந்த வருமானம் பெறுவோர்களின் வாழ்வாதாரநிலையை உயர்த்தும் நோக்கில் செயற்படுத்தப்படுவதோடு 2012 வரவு செலவு திட்ட பிரேரணைக்கு ஏற்ப இதுவரை வழங்கப்பட்ட சமுர்த்தி நிவாரணத் தொகை கீழ் குறிப்பிடப்பட்டவாறு அதிகரிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 2.7.1

| குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை | நிவாரணத் தொகை ரூபா. |
|---|---|
| 1-2 | 750.00 |
| 3-5 | 1200.00 |
| 5 இற்கு மேல் | 1500.00 |
| வலுப்பெற்ற குடும்பங்களுக்காக | 210.00 |

மூலம் - சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் விருத்தி செய்வதன் மூலம் நன்மைபெறுவோர்களை சேமிப்பதற்கும் முதலீட்டை தூண்டும் நோக்குடன் சமுர்த்தி முத்திரைக்குப் பதிலாக அவர்களுக்கு உரிய தொகை, சமுர்த்தி வங்கிகளில் நன்மைபெறுவோர்களின் கணக்கிற்கு வரவு வைக்கும் முறையொன்று 2012 ஏப்ரல் மாதத்திலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்குள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.10,553 மில்லியன் பெறுமதியான உதவி தொகை 1,549,107 குடும்பங்களுக்கிடையே பகிரப்பட்டுள்ளன.

சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2006 – 2012 ஆம் ஆண்டு வரை பெற்றுக்கொடுக்கப்படுகின்ற நன்மை பற்றி தகவல்கள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை: 2.7.2

| ஆண்டு | சமுர்த்தி நிவாரண நிகழ்ச்சித்திட்டம் | |
|---|---|---|
| | குடும்பங்களின் எண்ணிக்கை | தொகைரூ.மில். |
| 2006 | 1,916,594 | 9,244 |
| 2007 | 1,844,660 | 9,423 |
| 2008 | 1,631,113 | 9,967 |
| 2009 | 1,600,786 | 9,274 |
| 2010 | 1,572,129 | 9,241 |
| 2011 | 1,541,575 | 9,044 |
| 2012 | 1,549,107 | 10,553 |

மூலம் - சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

### 2.7.2 தாய்மார்களுக்கான போசணை நிகழ்ச்சித் திட்டம் (போசணைப் பொதி நிகழ்ச்சித்திட்டம்)

“மஹிந்த சிந்தனை” கொள்கைப் பிரகடனத்தின் கீழ் வருகின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில், பால் ஊட்டும் தாய்மார்களின் போசணை மட்டத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிதாக குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு போசணைமிக்க உணவுவேளையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காக போசணை முத்திரையொன்றை வழங்கப்படுவதோடு இதற்காக 2012 ஆம் ஆண்டில் ரூ.249.60 மில்லியன் செலவிடப்பட்டு 55,299 நன்மை பெறுவோர்களுக்காக போசணை முத்திரை வழங்கப்பட்டுள்ளது.

தாய்மார்களுக்கான போசணை நிகழ்ச்சித்திட்டம் - 2008 -2012

அட்டவணை: 2.7.3

| ஆண்டு | நன்மைபெறுவோர்களின் எண்ணிக்கை | செலவு ரூ. |
|---|---|---|
| 2008 | 60,050 | 385.70 |
| 2009 | 76,620 | 505.00 |
| 2010 | 71,471 | 388.00 |
| 2011 | 43,252 | 360.00 |
| 2012 | 55,299 | 249.60 |

மூலம் - சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

### 2.7.3 சமூக பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்

சமுர்த்தி நன்மைபெறுவோர் அல்லது அவர்களின் குடும்பஉறுப்பினர்களின் பொருளாதார மற்றும் உறுப்பினர் செயற்பாடுகளில் பூரணமாக அர்ப்பணிப்பதற்கு தேவையான ஆதரவு, சமூகப் பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் தன்னம்பிக்கையுடன் எழும்புவதற்கு தேவையான கண்ணியத்தைக் கொடுக்கும் நோக்குடன் சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரண்டு உறுப்பினர்களுக்கு மேல் உள்ள குடும்பங்களுக்காக இதற்காக பங்களிப்புச் செய்யப்படுவதோடு பிள்ளைப் பேறின் போது, திருமணத்தின் போது, மரணத்தின் போது, வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது மற்றும் மேற்படிப்பிற்காக போன்ற விசேட சந்தர்ப்பங்களுக்காக சமூகபாதுகாப்பு நிகழ்ச் சித்திட்டத்தின் மூலம் நன்மை வழங்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் 2012இல் நன்மைகள் பகிரப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை: 2.7.4

| கொடுப்பனவுகளும் நன்மைகளும் | செலவுரூ.மில். | நன்மை பெறுவோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பிறப்பு | 3.64 | 729 |
| திருமணம் | 9.89 | 3,297 |
| நோய் | 9.79 | 3,449 |
| இறப்பு | 33.02 | 3,303 |
| புலமைப் பரிசில் | 28.72 | 26,739 |

மூலம் - சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்

# 3

# கமநெகும - வலுவூட்டப்பட்ட பிரஜை

## 3. கம நெகும – வலுவூட்டப்பட்ட பிரஜை

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களின் கேந்திர நிலையமாக விளங்கும் கிராமத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், மஹிந்த சிந்தனை கொள்கை வெளியீட்டில் குறிப்பிட ப்பட்டுள்ள பிரகாரம் இன்பகரமான அன்பும் மற்றும் அழகும் நிறைந்த கிராமம் ஒன்றை 2016 ஆம் ஆண்டாகும் போது உருவாக்கு வதற்கு ''கமநெகும'' வேலைத் திட்டம் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிராமிய நகர அபிவிருத்திப் பாகுபாட்டைக் குறைத்துக் கொள்ளும் நோக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் கமநெகும நிகழ்ச்சித் திட்டத்தில் ஆன்மீக மற்றும் சமூக அபிவிருத்தி, வாழ்வாதார அபிவிருத்தி, உட்கட்ட மைப்பு வசதிகள் அபிவிருத்தி ஆகிய பிரதான மூன்று துறைகளின் கீழ் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களான சமுர்த்தி அதிகார சபை, மலையக அபிவிருத்தித் திணைக்களம், தென்னிலங்கை அபிவிருத்தி அதிகார சபை ஆகிய நிறுவனங்கள் ஊடாக 2011 ஆம் ஆண்டு வரை செயற்பட்டுக் கொண்டிருந்தன.

2012 ஆம் ஆண்டாகும் போது கமநெகும நிகழ்ச்சித் திட்டம் புதிய பிரவேசத்தில் சென்று, கிராமியப் பொருளாதார செயற்பாடுகளிற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பிரதி லாபங் களைப் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு, சிறிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத் திட்டமாக "ஒரு கிராமத்திற்கு ஒரு வேலைத் திட்டம்" எனும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியுடன் கூடிய அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றை ஒரு கிராமத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க நாடு முழுக்க அமைந்துள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கும் பிரகாரம் சுமார் 14000 கருத்திட்டங்களைச் செயற்படுத்து வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட தொழில்நுட்பக் காரணங்க ளினால் அனுமதிக்கப்பட்டுள்ள கருத்திட்டங் களில் 13,098 கருத்திட்டங்களின் வேலைகளை ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் 11,819 கருத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு முடிந்துள்ளன.

கிராமப் பாதைகள் அபிவிருத்தி, கிராமத்திற்கான மின்சாரத்தைப் பெற்றுக் கொடுத்தல், சிறிய நீர்ப்பாசனம்,குடிநீர் வழங்கல், மாதர் மற்றும் சிறுவர் சுகாதார சிகிச்சை நிலைய வசதிகள், முன்பள்ளிக் கட்டிடங்களை மேம்படுத்தல் கட்டிட வசதிகள் அபிவிருத்தி, விளையாட்டு மைதானம் மற்றும் பூங்கா அபிவிருத்தி போன்ற வகுதிகளின் கீழ் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.



மகப்பேற்று சிறுவர் சுகாதார நிலையம்
நொச்சியாகம பிரதேச செயலகம்
அநுராதபுர மாவட்டம்



குடிநீர் வழங்கல் வேலைத்திட்டம்
திம்புலகல பிரதேச செயலகம்
பொலனறுவை மாவட்டம்

## 2012 ஆம் ஆண்டிற்குள் “ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை”வேலைத்திட்டத்தில் கருத்திட்டங்கள் பிரிந்து சென்றுள்ள விதம்.

வரைபு: 3.1




மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### 3.1.கிராமியப் பாதைகள் அபிவிருத்தி

"ஒரு கிராமத்திற்கு – ஒரு வேலை " எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னிலைக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது கிராமியப் பாதைகள் அபிவிருத்திக்காகும். அதன் ஊடாக உருவாகும் புதிய இடைப்பட்ட தொடர்பு, மனைப் பொருளாதார அலகிற்குள் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான விரிவான பிரவேசம் உருவாவதுடன், கிராமங்களில் எழுந்துள்ள புதிய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பாதைகள் அபிவிருத்தி கிராமத்திற்குப் பெரிதும் உறுதுணையாக அமைந்துள்ளது. அதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குப் புதிய சுற்றுலா மனங்கவர் இடங்களை மிக இலகுவாகவும், குறுகிய காலத்திற்குள்ளும் செல்வதற்கான வசதிகள் உருவாகல், கிராமப் பிரதேசங்களில் புதிய கைத்தொழில்களை உருவாவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளில் அபிவிருத்தி அடைதல் மற்றும் கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையிலான அபிவிருத்திப் பாகுபாட்டை குறைத்துக் கொள்வதற்கு முடிந்தமை அதனால் கிடைத்த பிரதிலாபம் ஒன்றாகும்.

2012 ஆம் ஆண்டில் கிராமத் தெருக்கள் அபிவிருத்தியின் கீழ் தெருக்கள், பாலங்கள், போக்குகள் போன்ற சுமார் 9,310 கருத்திட்டங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், அதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி 7,652 மில்லியன் ரூபாவாகும். இந்தக் கருத்திட்டத்தினால் சுமார் 3,618,517 நபர்கள் பிரதிலாபம் அடைந்துள்ளனர்.

## கிராமியப் பாதைகள் அபிவிருத்தி (தெருக்கள், பாலங்கள், போக்குகள்)- 2012.12.31 ஆம் திகதிக்குள் அடைந்து கொண்ட முன்னேற்றம்

அட்டவணை : 3.1.1

| மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவுபெற்ற திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூபா (மில்) |
|---|---|---|---|
| கொழும்பு | 451 | 406 | 331.00 |
| கம்பஹா | 980 | 936 | 722.20 |
| களுத்துறை | 616 | 589 | 444.65 |
| இரத்தினபுரி | 484 | 471 | 430.69 |
| கேகாலை | 513 | 502 | 380.93 |
| குருநாகல் | 921 | 755 | 529.02 |
| புத்தளம் | 342 | 313 | 277.37 |
| காலி | 753 | 704 | 516.24 |
| மாத்தறை | 550 | 472 | 352.4 |
| அம்பாந்தோட்டை | 372 | 360 | 282.57 |
| மொனராகலை | 250 | 248 | 207.16 |
| பதுளை | 498 | 489 | 426.19 |
| நுவரேலியா | 379 | 340 | 276.31 |
| கண்டி | 1003 | 935 | 818.67 |
| மாத்தளை | 458 | 445 | 424.85 |
| அநுராதபுரம் | 343 | 310 | 242.54 |
| பொலன்நறுவை | 208 | 208 | 190.88 |
| திருகோணமலை | 165 | 160 | 162.75 |
| மட்டக்களப்பு | 270 | 270 | 260.40 |
| அம்பாறை | 488 | 397 | 375.04 |
| **மொத்தம்** | **10044** | **9310** | **7652.00** |

மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### பூர்த்தி செய்யப்பட்டுள்ள பல கருத்திட்டங்கள்



மளிகஸ்பே மொரகொட கால்வாய்க்குச் சமாந்தரமான பாதை - கடவத் சதர பிரதேச செயளாளர் பிரிவு
காலி மாவட்டம்



நிர்மாணிக்கப்பட்டுள்ள பனனாவத்தைப் பாதை வறக்காப்பொலை - பிரதேச செயளாளர் பிரிவு
கேகாலை மாவட்டம்

## 3.2. சமுதாய நீர் வழங்கல் திட்டம்

ஆரோக்கியமான சுகாதாரம் மிக்க கிராமிய மக்களை உருவாக்குவதற்காக, அத்தியா வசியமான, சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பதற்காக நீர்த் தாங்கிகளை நிறுவுதல், பொதுக் கிணறுகளை நிர்மா ணித்தல், குழாய்களை அமைத்தல் “ஒரு கிராமத்திற்கு – ஒரு வேலை” நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் பொது மக்கள் நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் 451 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக செலவு செய்யப்பட்டுள்ள நிதி 367 மில்லியன் ரூபாவாகும். அதன் மூலம் சுமார் 252,799 நபர்களுக்குப் பிரதிலாபம் கிடைத்துள்ளன.

### மக்கள் நீர் வழங்கல் திட்டம் 2012.12.31 திகதிக்குள் அடைந்துள்ள முன்னேற்றம்

அட்டவணை : 3.2.1

| மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவுபெற்ற திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூபா (மில்) |
|---|---|---|---|
| கொழும்பு | 6 | 4 | 4.90 |
| கம்பஹா | 12 | 7 | 9.92 |
| களுத்துறை | 58 | 51 | 41.04 |
| இரத்தினபுரி | 32 | 28 | 25.31 |
| கேகாலை | 28 | 26 | 19.67 |
| குருநாகல் | 921 | 755 | 529.02 |
| புத்தளம் | 53 | 43 | 21.73 |
| காலி | 15 | 11 | 6.72 |
| மாத்தறை | 10 | 5 | 2.59 |
| அம்பாந்தோட்டை | 21 | 20 | 17.41 |
| மொனராகலை | 7 | 5 | 6.85 |
| பதுளை | 23 | 19 | 15.92 |
| நுவரேலியா | 49 | 40 | 30.26 |
| கண்டி | 56 | 43 | 40.39 |
| மாத்தளை | 15 | 11 | 11.07 |
| அநுராதபுரம் | 38 | 30 | 22.4 |
| பொலன்நறுவை | 11 | 11 | 6.80 |
| திருகோணமலை | 10 | 10 | 9.73 |
| மட்டக்களப்பு | 3 | 3 | 2.58 |
| அம்பாறை | 4 | 1 | 1.16 |
| **மொத்தம்** | 583 | 451 | 367.00 |

மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### பூர்த்தி செய்யப்பட்டுள்ள பல கருத்திட்டங்கள்



விநியோகிக்கப்பட்டுள்ள குடிநீர் வசதிகள் - பிங்தாளிய சந்தியில் இருந்து தம்பேயாய வரை புத்தளைப் பி. செ. பிரிவு மொனராகலை மாவட்டம்



விரிவாக்கப்பட்டுள்ள கனிச்சாகல குடிநீர் கருத்திட்டம் தமன்கடுவைப் பி.செ.பிரிவு பொலன்னறுவை மாவட்டம்

## 3.3. சிறியளவிலான நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டம்

இதன் கீழ் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரைத் தேக்கிவைத்துக் கொள்வதும், விநியோகிப்பதற்கான குளங்கள், வான்கதவுகள் மற்றும் கால்வாய்களை நிர்மாணித்துக்கொள்வதும், மற்றும் துப்பரவு செய்வதும் அத்தியாவசியமாகியுள்ளது. இந்த விடயங்கள் 'ஒரு கிராமத்திற்கு– ஒரு வேலை" நிகழ்ச்சித் திட்டத்தின் போது சிறிய அளவிலான நீர்ப்பாசன அபிவிருத்தியின் கீழ் மேற்கொள்ளப்படும். இந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக பயிரிடாத நிலங்களைத் திருத்துவதன் மூலம் கமத்தொழில் புரியும் மக்களின் பொருளாதாரம் மலர்ந்து, அவர்களின் வாழ்க்கை நிலை உயர்வடையும். அதன் மூலம் நாடு தன்னிறைவடையும் தேசிய நோக்கிற்கு சிறந்த பங்களிப்பைப் பெற்றுக் கொடுக்கும். அசுத்தமான கால்வாய்களைச் சுத்தம் செய்வதன் ஊடாக சூழல் மாசடைதல் குறைவடைதற்கும், டெங்கு, வாந்திபேதி நோய்களைத் தடுக்க முடிகின்றமைக்கும், வெள்ளம் இடர் அழிவுகளைக் குறைப்பதற்கும் காரணமாக அமையும்.

2012 ஆம் ஆண்டிற்குள் சிறிய அளவிலான நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 605 கருத்திட்டங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், அதற்காக செலவு செய்யப்பட்டுள்ள நிதி 542 மில்லியன் ரூபாவாகும். அதன் மூலம் சுமார் 243,110 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

### சிறியளவிலான நீர்ப்பாசன அபிவிருத்தி 2012.12.31 வரை அடைந்த முன்னேற்றம்

அட்டவணை : 3.3.1

| மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவுபெற்ற திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூபா (மில்) |
|---|---|---|---|
| கொழும்பு | 737 | 605 | 542 |
| கம்பஹா | 12 | 10 | 9.19 |
| களுத்துறை | 12 | 12 | 9.01 |
| இரத்தினபுரி | 9 | 8 | 7.44 |
| கேகாலை | 5 | 5 | 0 |
| குருநாகல் | 258 | 192 | 194.65 |
| புத்தளம் | 35 | 31 | 30.64 |
| காலி | 49 | 39 | 30.98 |
| மாத்தறை | 39 | 29 | 26.07 |
| அம்பாந்தோட்டை | 107 | 103 | 88.61 |
| மொனராகலை | 16 | 14 | 14.63 |
| பதுளை | 8 | 8 | 7.56 |
| நுவரேலியா | 6 | 4 | 2.32 |
| கண்டி | 12 | 12 | 11.70 |
| மாத்தளை | 22 | 21 | 19.85 |
| அநுராதபுரம் | 85 | 66 | 47 |
| பொலன்நறுவை | 18 | 18 | 13.19 |
| திருகோணமலை | 15 | 13 | 11.72 |
| மட்டக்களப்பு | 3 | 3 | 2.86 |
| அம்பாறை | 17 | 11 | 10.89 |
| **மொத்தம்** | **737** | **605** | **542.00** |

மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டம்



கொங்கிரீட் இடப்பட்டுள்ள 9 சீ கிளைக் கால்வாயின் மிகுதிப் பகுதி
அம்பாந்தோட்டைப் பி செயளாளர் பிரிவு
அம்பாந்தோட்டை மாவட்டம்

## 3.4. மாதர் மற்றும் சிறுவர் சிகிச்சை வசதிகள்

சுகாதாரம் மிக்க ஆரோக்கியமுள்ள சிறுவர் சந்ததி ஒன்றை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு கிராமியப் பிரதேசங்கள் தொடர்புள்ள மாதர் மற்றும் சிறுவர் சுகாதார சிகிச்சை வசதிகளை மேம்படுத்துதல் "ஒருகிராமத்திற்கு – ஒரு வேலை" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயலில் எழுந்துள்ளது. ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்கு சகல வசதிகளும் கொண்ட ஒரு மாதர் சிகிச்சை நிலையத்தையாவது நிர்மாணிப்பதற்கும், தற்பொழுது உள்ள குறைபாடுகள் கொண்ட மாதர் சிகிச்சை நிலையங்களிற்குத் தேவையான வசதிகளை வழங்கவதற்கும் இதன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மாதர் மற்றும்

சிறுவர் சுகாதார சிகிச்சை நிலையத்திற்குச் சுத்தமான குடி நீரைப் பெற்றுக் கொடுத்தல், இருப்பிட வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், சிறுவர்களின் ஆடை மாற்றக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சிறுவர்களிற்கு விளையாடுவதற்கான இடவசதிகள், சுத்தமான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள், மின் விசிறி மற்றும் தொலைக் காட்சி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டிற்குள் மாதர் மற்றும் சிறுவர் சுகாதார சிகிச்சை வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 118 கருத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு முடிந்துள்ளதுடன், அதற்காக 90 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் சுமார் 93,439 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**மாதர் மற்றும் சிறுவர் சிகிச்சை வசதிகள் - 2012.12.31 ஆம் திகதிக்குள் அடைந்துள்ள முன்னேற்றம்**

அட்டவணை : 3.4.1

| மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவுபெற்ற திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூபா (மில்) |
|---|---|---|---|
| கொழும்பு | 6 | 6 | 5.6 |
| கம்பஹா | 4 | 4 | 3.61 |
| களுத்துறை | 4 | 3 | 1.17 |
| இரத்தினபுரி | 6 | 6 | 5.83 |
| கேகாலை | 3 | 3 | 0 |
| குருநாகல் | 39 | 31 | 23.92 |
| புத்தளம் | 8 | 7 | 6.21 |
| காலி | 8 | 7 | 2.85 |
| மாத்தறை | 6 | 4 | 2.5 |
| அம்பாந்தோட்டை | 4 | 4 | 1.95 |
| மொனராகலை | 8 | 8 | 7.65 |
| பதுளை | 5 | 4 | 3.47 |
| நுவரேலியா | 9 | 8 | 3.89 |
| கண்டி | 9 | 6 | 6.30 |
| அநுராதபுரம் | 9 | 8 | 6.36 |
| பொலன்நறுவை | 1 | 1 | 0.43 |
| திருகோணமலை | 1 | 1 | 0.98 |
| மட்டக்களப்பு | 6 | 6 | 5.66 |
| அம்பாறை | 2 | 1 | 1.29 |
| **மொத்தம்** | **138** | **118** | **90.00** |

மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டம்



மாதர் மற்றும் சிறுவர் சுகாதார சிகிச்சை நிலையம்
கம்பஹா மாவட்டம்

## 3.5. முன்பள்ளி அபிவிருத்தி

சிறு பிள்ளைகளை சமூகத்திற்கு முகங்கொடுக்கப் பழக்குதல், பாடசாலை செல்லுமுன் தேவையான சமூகத்திற்கான கல்விப் பிண்ணனியைத் தொகுத்தல். சிறுபராயத்தில் இருந்தே உள்நாட்டு உணவு, குடிபானங்களிற்கும் சமய அநுஷ்டானங்களுக்கும் மற்றும் சிறந்த குணங்களிற்கும் பழக்குதல், சமூகத்தில் நடமாடும் போது கடைபிடிக்க வேண்டிய கலாசாரப் பண்புகளைப் பழக்குதல், தமது திறைமைகளை வெளிப்படுத்துவதற்கு அவகாசம் பெற்றுக் கொடுத்தல், அடுத்தவர்களின் துணிபுக்கும், அடத்தவர்களுக்கு மதிப்பளிப்பதற்கு கற்றுக் கொடுத்தல், சமய சம்பிரதாயங்களுக்கு இணங்க ஆன்மீகப் போசாக்கை சிறுபராயத்தில் இருந்தே உருவாக்குவதற்கு முன்பள்ளிகள் அபிவிருத்தி முக்கியமானதாகும்.

அதற்கு இணங்க “ஒரு கிராமத்திற்கு-ஒரு வேலைத்திட்டம்” எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமப் பிரதேசங்களில் ஊள்ள முன்பள்ளிச் சிறார்களின் கல்வி, விளையாட்டு மற்றும் சுகாதார கழிவறைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான முன்பள்ளிக் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்தல், முன்பள்ளிகளுக்கான விளையாட்டு முற்றங்கள் மற்றும் கற்பிக்கும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டில் முன்பள்ளி வசதிகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 325 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக 266 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் சுமார் 117,118 பயனாளிகள் பிரதிலாபம் அடைந்துள்ளனர்.

## முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்தல் - 2012.12.31 ஆம் திகதிக்குள் அடைந்த முன்னேற்றம்

அட்டவணை : 3.5.1

| மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவுபெற்ற திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூபா (மில்) |
|---|---|---|---|
| கொழும்பு | 20 | 18 | 16 |
| கம்பஹா | 13 | 12 | 10.86 |
| களுத்துறை | 19 | 10 | 6.24 |
| இரத்தினபுரி | 6 | 6 | 5.45 |
| கேகாலை | 5 | 4 | 0.39 |
| குருநாகல் | 33 | 21 | 17.72 |
| புத்தளம் | 25 | 20 | 16.30 |
| காலி | 13 | 11 | 7.09 |
| மாத்தறை | 11 | 7 | 5.78 |
| அம்பாந்தோட்டை | 37 | 34 | 23.44 |
| மொனராகலை | 23 | 23 | 21.45 |
| பதுளை | 17 | 15 | 12.14 |
| நுவரேலியா | 19 | 18 | 12.42 |
| கண்டி | 23 | 20 | 18.00 |
| அநுராதபுரம் | 70 | 66 | 54.98 |
| பொலன்நறுவை | 15 | 15 | 13.10 |
| திருகோணமலை | 6 | 4 | 3.5 |
| மட்டக்களப்பு | 13 | 13 | 11.62 |
| அம்பாறை | 13 | 8 | 9.19 |
| **மொத்தம்** | **381** | **325** | **266.00** |

மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### 3.6. மின்சார வசதிகள் அபிவிருத்தி

“ஒரு கிராமத்திற்கு – ஒரு வேலைத்திட்டம்” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் போது மிக முக்கிய பிரிவொன்றான மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக முன்னிலைக் கவனம் செலுத்தப்பட்டு இதுவரை மின்சாரம் இல்லாத மக்கள் வசிக்கும் பிரதேசங்களிற்கு மின்சார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் மேற்கொள்ளப்படுகிறது. அதன்மூலம் இருட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைக்குப் பாரிய ஒளி கிடைத்தள்ளதுடன், கிராமிய வாழ்வாதாரம் அபிவிருத்தி அடைதல், தகவல் தொழில் நுட்பம் மற்றும் கணனி வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தமை, கிராமிய முதலீட்டு வளர்ச்சி, ஆகிய பலதரப்பட்ட துறைகளில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டில் கிராமிய மின்சார வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 217 கருத்திட்டங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்துள்ளதுடன், அதற்காக 194 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் சுமார் 7,791 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மின்சார வசதிகள் அபிவிருத்தி – 2012.12.31 ஆம் திகதிக்குள் அடைந்துள்ள முன்னேற்றம்

அட்டவணை : 3.6.1

| மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவுபெற்ற திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூபா (மில்) |
|---|---|---|---|
| குருநாகல் | 126 | 126 | 107.39 |
| புத்தளம் | 62 | 61 | 57.90 |
| மொனராகலை | 4 | 4 | 3.99 |
| நுவரேலியா | 2 | 1 | 1.00 |
| மாத்தளை | 1 | 1 | 1.00 |
| அநுராதபுரம் | 23 | 16 | 14.63 |
| பொலன்நறுவை | 2 | 2 | 1.97 |
| மட்டக்களப்பு | 3 | 3 | 2.94 |
| அம்பாறை | 3 | 3 | 2.99 |
| **மொத்தம்** | **226** | **217** | **194.00** |

மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## 3.7. கட்டிட வசதிகள் அபிவிருத்தி

மிக்க சமமான மனோநிலையுடன் வாழும் மக்கள் ஜன சமூகத்தின் உள்ளேயும் மற்றும் வெளியிலும் சிக்கல் இல்லாத கிராமமாக, கிராமத்தை அறிமுகப்படுத்த முடியும். அவ்வாறான சமூக சூழலுடன் கிராமம் ஒன்றை நிர்மாணித்துக் கொள்வதற்கு அக்கிராமத்தின் மக்கள் ஆன்மீக மற்றும் சமூக ரீதியில் வலுப்படுத்த வேண்டும்.

கிராமிய மக்கள் சமூகத்தில் நிலவும் நாளாந்தமானதும், அத்தியாவசியமானதும், சமூக மற்றும் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயற்படுவதால், அக்கிராமத்தை அபிவிருத்தியின் ஒளியாகக்கூடிய கிராமமாக உருவாக்கும் நோக்குடன் செயற்பட்ட "கமநெகும" அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின், மேலுமொரு முக்கியமான பகுதியாக கட்டிட வசதிகள் அபிவிருத்தியை அறிமுகப்படுத்த முடியும்.

கிராமிய மக்களின் ஆன்மீக மற்றும் சமூக அபிவிருத்தியினால் சிறந்த மக்கள் சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் 'ஒரு கிராமத்திற்கு – ஒரு வேலை" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மக்கள் மண்டபங்கள், வாசிக சாலைகள், பலநோக்கு கட்டிட வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

இதன் ஊடாக மக்களிற்குத் தேவையான வசதிகளை வழங்குவதுடன், அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான அறிவைப் பெற்றுக் கொள்ளும் வசதிகளை வழங்குவதுடன், கிராமப் பிரதேசத்தை சகலதும் நிரம்பிய சௌபாக்கியமான பிரதேசம் என்ற நிலையை அடைவதற்கு வழிவகுக்க வேண்டும்.
2012 ஆம் ஆண்டில் கட்டிட வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 654 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக 501 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் சுமார் 632,063 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

## கட்டிட வசதிகளை அபிவிருத்தி – 2012.12.31 ஆம் திகதிக்குள் அடைந்துள்ள முன்னேற்றம்

அட்டவணை : 3.7.1

| மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவுபெற்ற திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூபா (மில்) |
|---|---|---|---|
| கொழும்பு | 41 | 31 | 28.70 |
| கம்பஹா | 65 | 40 | 20.99 |
| களுத்துறை | 46 | 29 | 13.67 |
| கேகாலை | 16 | 12 | 4.44 |
| குருநாகல் | 83 | 52 | 39.61 |
| புத்தளம் | 17 | 15 | 12.78 |
| காலி | 42 | 33 | 19.62 |
| மாத்தறை | 48 | 30 | 22.49 |
| அம்பாந்தோட்டை | 23 | 23 | 18.43 |
| மொனராகலை | 10 | 10 | 8.20 |
| பதுளை | 13 | 13 | 10.09 |
| நுவரேலியா | 18 | 17 | 9.21 |
| கண்டி | 63 | 53 | 43.24 |
| மாத்தளை | 45 | 43 | 40.63 |
| அநுராதபுரம் | 101 | 86 | 67.13 |
| பொலன்நறுவை | 33 | 33 | 20.23 |
| திருகோணமலை | 87 | 86 | 77.98 |
| மட்டக்களப்பு | 29 | 29 | 27.08 |
| அம்பாறை | 25 | 19 | 16.04 |
| **மொத்தம்** | **805** | **654** | **501.00** |

மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டம்



நிர்மாணிக்கப்பட்டுள்ள மக்கள் மண்டபம்.
மினுவாங்கொடை பிரதேச செயளாளர் பிரிவு
கம்பஹ மாவட்டம்

## 3.8. விளையாட்டு மைதானம்/ பூங்கா வசதிகள் அபிவிருத்தி

ஒழுங்கான சரீர பலம் நிறைந்த ஆரோக்கியமுள்ள மக்களை உருவாக்குவதற்கு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி போன்றவை மிக முக்கியம் வாய்ந்ததுடன், இதற்குத் தேவையான விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல், பூங்கா வசதிகளை உருவாக்கல் 'ஒரு கிராமத்திற்கு – ஒரு வேலை' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும். இதன் ஊடாக சனநெரிசல் நிறைந்த பிரதேசங்களில் உள்ள நபர்கள் தேவையற்று நடமாடுவது தடுக்கப்படுவதுடன், பெருந்தெருக்களில் விளையாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது உருவாகும் விபத்துக்களில் இருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். மக்கள் மனஅழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு முடிந்தமை இதன் மூலம் கிடைத்த மேலுமொரு பிரதிபலனாகும்.

2012 ஆம் ஆண்டில் விளையாட்டு மைதானம்/ பூங்கா வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 139 கருத்திட்டங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடிந்துள்ளதுடன், அதற்காக 107 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன. அதன் மூலம் சுமார் 132,009 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**விளையாட்டு மைதானம்/ பூங்கா வசதிகளின் அபிவிருத்தி -2012.12.31 இல் முன்னேற்றம்**

அட்டவணை : 3.8.1

| மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவுபெற்ற திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூபா (மில்) |
|---|---|---|---|
| கொழும்பு | 10 | 9 | 9.8 |
| கம்பஹா | 14 | 8 | 4.34 |
| களுத்துறை | 10 | 9 | 5.34 |
| கேகாலை | 6 | 5 | 1.21 |
| குருநாகல் | 12 | 5 | 5.35 |
| புத்தளம் | 7 | 7 | 6.33 |
| காலி | 13 | 11 | 7.72 |
| மாத்தறை | 6 | 5 | 2.93 |
| அம்பாந்தோட்டை | 11 | 10 | 10.15 |
| மொனராகலை | 3 | 3 | 1.93 |
| பதுளை | 3 | 3 | 0.90 |
| நுவரேலியா | 7 | 7 | 4.88 |
| கண்டி | 10 | 7 | 7.42 |
| அநுராதபுரம் | 18 | 18 | 15.33 |
| பொலன்நறுவை | 6 | 6 | 3.94 |
| திருகோணமலை | 8 | 7 | 1.00 |
| மட்டக்களப்பு | 16 | 16 | 15.43 |
| அம்பாறை | 8 | 3 | 4.17 |
| **மொத்தம்** | **168** | **139** | **107.00** |

மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## கமநெகும வேலைத்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள். (மாவட்ட ரீதியாக)

அட்டவணை : 3.8.2

| மாவட்டம் | வீதிகள், பாலங்கள் போக்குகள் | மக்கள் நீர் வழங்கல் | சிறியளவிலான நீர்ப்பாசனம் | மாதர், சிறுவர் சிகிச்சை | முன் பள்ளிகள் | மின்சாரவசதி | கட்டிட வசதிகள் | விளையாட்டு மைதானம்/ பூங்கா வசதி | செலவு ரூபா (மில்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 406 | 4 | 10 | 6 | 18 | 0 | 31 | 9 | 407.28 |
| கம்பஹா | 936 | 7 | 12 | 4 | 12 | 0 | 40 | 8 | 781.91 |
| களுத்துறை | 589 | 51 | 6 | 3 | 10 | 0 | 29 | 9 | 516.79 |
| இரத்தினபுரி | 471 | 28 | 8 | 6 | 6 | 0 | 0 | 0 | 506.38 |
| கேகாலை | 502 | 26 | 5 | 3 | 4 | 0 | 12 | 5 | 406.64 |
| குருநாகல் | 755 | 83 | 192 | 31 | 21 | 126 | 52 | 5 | 1010.14 |
| புத்தளம் | 313 | 43 | 31 | 7 | 20 | 61 | 15 | 7 | 433.01 |
| காலி | 310 | 30 | 66 | 8 | 66 | 16 | 86 | 18 | 474.97 |
| மாத்தறை | 208 | 11 | 18 | 1 | 15 | 2 | 33 | 6 | 251.52 |
| அம்பாந்தோட்டை | 704 | 11 | 39 | 7 | 11 | 0 | 33 | 11 | 592.4 |
| மொனராகலை | 472 | 5 | 29 | 4 | 7 | 0 | 30 | 5 | 423.57 |
| பதுளை | 360 | 20 | 103 | 4 | 34 | 0 | 23 | 10 | 444.57 |
| நுவரேலியா | 248 | 5 | 14 | 8 | 23 | 4 | 10 | 3 | 269.86 |
| கண்டி | 489 | 19 | 8 | 4 | 15 | 0 | 13 | 3 | 485.06 |
| மாத்தளை | 340 | 40 | 4 | 8 | 18 | 1 | 17 | 7 | 344.15 |
| அநுராதபுரம் | 935 | 43 | 12 | 6 | 20 | 0 | 53 | 7 | 945.8 |
| பொலன்நறுவை | 445 | 11 | 21 | 0 | 0 | 1 | 43 | 0 | 501.32 |
| திருகோணமலை | 160 | 10 | 13 | 1 | 4 | 0 | 86 | 7 | 200.62 |
| மட்டக்களப்பு | 270 | 3 | 3 | 6 | 13 | 3 | 29 | 16 | 338.91 |
| அம்பாறை | 397 | 1 | 11 | 1 | 8 | 3 | 19 | 3 | 421.77 |
| **மொத்தம்** | **9310** | **451** | **605** | **118** | **325** | **217** | **654** | **139** | **9757.00** |

மூலம்: பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

அட்டவணை : 3.8.3

## கமநெகும நிகழ்ச்சித் திட்டம் பிரிவுரீதியான முன்னேற்றம் 2006-2011

| மாவட்டம் | வீதிகள் | | குடிநீர் வழங்கல் | | சிறியளவிலான நீப்பாசனம் | | மின்சாரம் | | மகப்பேற்று நிலையம் | | பாடசாலை சுத்திகரிப்பு வசதிகள் | | முன்பள்ளி | | பொது கட்டிடங்கள் | | வாழ்வாதார அபிவிருத்தி | | சமூக அபிவிருத்தி | | ஏனையவை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூ(மில்) |
| கொழும்பு | 3208 | 1171.84 | 123 | 36.37 | 433 | 130.84 | 14 | 6.41 | 100 | 86.95 | 306 | 132.96 | 268 | 8.85 | 22 | 5.98 | 26 | 11.72 | 91 | 16.05 | 0 | 0 | **4591** | **1608** |
| கம்பஹா | 8059 | 3542.31 | 111 | 78.58 | 717 | 252.74 | 16 | 3.24 | 0 | 0 | 972 | 172.56 | 263 | 15.13 | 66 | 25.56 | 49 | 9.17 | 35 | 62.33 | 10 | 7.98 | **10298** | **4169.6** |
| களுத்துறை | 4306 | 1792.04 | 92 | 83.42 | 307 | 79.15 | 110 | 45.43 | 30 | 10.88 | 356 | 37.44 | 430 | 7.68 | 16 | 3.6 | 1 | 0.28 | 62 | 28.79 | 0 | 0 | **5710** | **2088.7** |
| இரத்தினபுரி | 4232 | 1772.83 | 121 | 35.77 | 813 | 303.68 | 12 | 10.31 | 157 | 55.24 | 417 | 55.87 | 472 | 8.4 | 16 | 3.09 | 450 | 46.22 | 267 | 51.88 | 2 | 0.6 | **6959** | **2343.9** |
| கேகாலை | 5126 | 1474.17 | 118 | 42.43 | 695 | 184.8 | 104 | 34.54 | 120 | 53.34 | 271 | 39.95 | 353 | 8.45 | 51 | 33.94 | 1676 | 36.09 | 241 | 44.74 | 0 | 0 | **8755** | **1952.5** |
| குருநாகல் | 5231 | 1643.23 | 380 | 216.45 | 812 | 316.34 | 2010 | 718.19 | 140 | 60.51 | 379 | 115.58 | 439 | 18.28 | 679 | 222.07 | 6451 | 115.3 | 980 | 19.6 | 65 | 39.99 | **17566** | **3485.5** |
| புத்தளம் | 2219 | 1043.61 | 259 | 173.47 | 468 | 124.97 | 874 | 328.93 | 118 | 63.03 | 313 | 88.18 | 210 | 11.87 | 22 | 8.77 | 713 | 46.72 | 514 | 110.32 | 47 | 23.59 | **5757** | **2023.5** |
| காலி | 4658 | 2665.87 | 284 | 43.5 | 376 | 171.53 | 77 | 30.34 | 19 | 19.62 | 327 | 55.27 | 347 | 9.19 | 102 | 88.56 | 7 | 9.8 | 546 | 113.02 | 5 | 0.27 | **6748** | **3207** |
| மாத்தறை | 4298 | 1931.76 | 229 | 84.56 | 599 | 177.43 | 155 | 56.91 | 4 | 43.03 | 799 | 66.18 | 250 | 8.76 | 76 | 77.23 | 79 | 8.66 | 460 | 20.68 | 15 | 2.32 | **6964** | **2477.5** |
| அம்பாந்தோட்டை | 2303 | 1509.87 | 262 | 83.93 | 794 | 438.7 | 37 | 24.73 | 85 | 47.25 | 1035 | 84.3 | 226 | 7.8 | 125 | 115.16 | 195 | 61.08 | 174 | 50.49 | 0 | 51.94 | **5236** | **2475.3** |
| மொனராகலை | 2074 | 953.48 | 242 | 67.97 | 303 | 169.06 | 272 | 244.2 | 4 | 12.77 | 543 | 97.36 | 182 | 4.94 | 22 | 45.18 | 233 | 24 | 597 | 78.63 | 6 | 9.73 | **4478** | **1707.3** |
| பதுளை | 3239 | 1503.37 | 157 | 72.24 | 274 | 94.65 | 22 | 63.62 | 97 | 33.84 | 297 | 25.7 | 267 | 4.43 | 338 | 97.78 | 596 | 78.85 | 5 | 2.21 | 3 | 1.77 | **5295** | **1978.5** |
| நுவரேலியா | 2620 | 1099.25 | 180 | 61.16 | 212 | 49.28 | 121 | 84.5 | 41 | 16.14 | 264 | 30.48 | 185 | 2.7 | 285 | 48.97 | 398 | 40.79 | 10 | 3.42 | 2 | 2.92 | **4318** | **1439.6** |
| கண்டி | 4547 | 1502.08 | 190 | 39.54 | 805 | 223.36 | 35 | 12.6 | 118 | 85.36 | 473 | 115.11 | 459 | 16.82 | 154 | 364.52 | 14 | 101.95 | 190 | 66.25 | 8 | 3.34 | **6993** | **2530.9** |
| மாத்தளை | 2533 | 970.03 | 120 | 51.38 | 558 | 244.28 | 250 | 111.08 | 97 | 53.5 | 237 | 66.07 | 333 | 8.87 | 111 | 50.96 | 5 | 2.45 | 15 | 6.18 | 9 | 4.96 | **4268** | **1569.8** |
| அநுராதபுரம் | 1858 | 1120.07 | 162 | 75.31 | 614 | 292.98 | 457 | 516.26 | 103 | 64.22 | 340 | 65.91 | 182 | 7.99 | 149 | 83.3 | 4 | 1.71 | 594 | 189.09 | 121 | 53.6 | **4584** | **2470.4** |
| பொலன்நறுவை | 946 | 561.25 | 115 | 48.39 | 111 | 69.58 | 113 | 35.5 | 50 | 50.95 | 209 | 81.1 | 86 | 4 | 75 | 67.84 | 19 | 10.61 | 99 | 36.86 | 2 | 0.63 | **1825** | **966.71** |
| வவுனியா | 146 | 106.83 | 24 | 9.04 | 28 | 20.42 | 33 | 25.88 | 0 | 0 | 0 | 0 | 0 | | 11 | 12.98 | 25 | 11.26 | 65 | 66.09 | 0 | 0 | **332** | **252.5** |
| திருகோணமலை | 762 | 530.79 | 90 | 24.94 | 176 | 112.1 | 80 | 23.71 | 66 | 35.74 | 74 | 50.7 | 25 | 2.96 | 1 | 0.38 | 1521 | 78.93 | 229 | 95.87 | 3 | 2.65 | **3027** | **958.77** |
| மட்டக்களப்பு | 1148 | 870.2 | 58 | 21.53 | 56 | 45.63 | 31 | 13.89 | 44 | 28.43 | 196 | 19.82 | 112 | 5.94 | 0 | 0 | 386 | 94.56 | 451 | 122.2 | 0 | 0 | **2482** | **1222.2** |
| அம்பாறை | 1615 | 1191.6 | 105 | 38.05 | 81 | 70.74 | 31 | 13.35 | 25 | 47.2 | 79 | 41.46 | 34 | 4.94 | 30 | 10 | 789 | 131.22 | 106 | 37.72 | 15 | 5.86 | **2910** | **1592.1** |
| யாழ்ப்பாணம் | 37 | 14.08 | 107 | 42.89 | 39 | 58.86 | 32 | 12.69 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 2.38 | 424 | 360.04 | 38 | 9.33 | 0 | 0 | **678** | **500.27** |
| கிளிநொச்சி | 3 | 4.9 | 4 | 1.15 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 26 | 4.7 | 38 | 9.33 | 0 | 0 | **71** | **20.08** |
| முல்லைத்தீவு | 3 | 6 | 0 | 0 | 1 | 6.13 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 9 | 7.06 | 6 | 4 | 0 | 0 | **19** | **23.19** |
| மன்னார் | 260 | 163.02 | 39 | 10.73 | 2 | 1.65 | 39 | 77.05 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 7 | 5.15 | 65 | 34.73 | 58 | 39.77 | 0 | 0 | **470** | **332.1** |
| **மொத்தம்** | **65431** | **29144.48** | **3572** | **1442.8** | **9274** | **3638.9** | **4925** | **2493.4** | **1418** | **868** | **7887** | **1442** | **5123** | **168** | **2359** | **1373.4** | **14161** | **1327.9** | **5871** | **1284.9** | **302** | **207.62** | **120334** | **43396** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## 3.9. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்

நாடு முழுவதையும் உள்ளடக்கும் பிரகாரம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டம் வழமைபோல் 2012 ஆம் ஆண்டிலும் செயற்படுத் தப்பட்டதானது, கிராமிய பொருளாதார அபிவிருத்திக் கிடையிலான நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் மூலம் காப்பற்ற சிறிய அளவிலான பௌதிக மற்றும் சமூக அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது இதன் நோக்காகும்.

கமநெகும நிகழ்ச்சித் திட்டம் மற்றும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பாராளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களுக்காக ஒரு உறுப்பின ருக்கு ரூபா 50 இலட்சம் வீதம் மூலதன ஒதுக்கீடு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிலும் மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 196 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ரூ. 980 மில்லியனும், தேசியப் பட்டியல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 29 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ரூ. 145 மில்லியனும் என்ற ரீதியில் மொத்த 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ரூ. 1125 மில்லியனும் மூலதன ஒதுக்கீடு மாவட்டத்திற்கேற்ப ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிறிய அளவிலான பௌதிக மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத் திட்டங்கள் 14,805 ஐ பூர்த்தி செய்வதற்காக ரூ.1000.77 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது.

### பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 2012 துறைசார்ந்த பெறுபேறுகள்

வரைபு: 3.9.1

அட்டவணை : 3.1




மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் - 2012

அட்டவணை : 3.9.1

| இல | மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவுபெற்ற திட்டங்களின் எண்ணிக்கை | செலவினம் ரூபா (மில்) |
|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 19 | 1051 | 115.40 |
| 2 | கம்பஹா | 18 | 738 | 89.707 |
| 3 | களுத்துறை | 10 | 448 | 59.917 |
| 4 | இரத்தினபுரி | 10 | 540 | 54.067 |
| 5 | கேகாலை | 09 | 372 | 27.364 |
| 6 | குருநாகல் | 15 | 1449 | 68.959 |
| 7 | புத்தளம் | 08 | 818 | 28.860 |
| 8 | அநுராதபுரம் | 09 | 850 | 41.719 |
| 9 | பொலன்நறுவை | 05 | 539 | 24.780 |
| 10 | காலி | 10 | 687 | 53.620 |
| 11 | மாத்தறை | 08 | 638 | 45.859 |
| 12 | அம்பாந்தோட்டை | 07 | 796 | 34.600 |
| 13 | மொனராகலை | 05 | 393 | 24.204 |
| 14 | பதுளை | 08 | 678 | 38.525 |
| 15 | நுவரேலியா | 07 | 586 | 35.406 |
| 16 | கண்டி | 12 | 1091 | 65.844 |
| 17 | மாத்தளை | 05 | 470 | 25.713 |
| 18 | திருகோணமலை | 04 | 213 | 20.249 |
| 19 | மட்டக்களப்பு | 05 | 427 | 30.395 |
| 20 | அம்பாறை | 07 | 741 | 45.036 |
| 21 | வவுனியா | 06 | 170 | 10.364 |
| 22 | யாழ்ப்பாணம் | 09 | 698 | 37.930 |
| 23 | கிளிநொச்சி | | 139 | 8.654 |
| 24 | முல்லைத்தீவு | 06 | 69 | 7.196 |
| 25 | மன்னார் | 06 | 204 | 6.387 |
| **மொத்தம்** | | **196** | **14805** | **1000.77** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## 3.10. 5000 முதல்நிலைப் பாடசாலைகள் மற்றும் 1000 இடைநிலைப் பாடசாலைகளை மறுசீரமைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் - "சிறந்தவைகள் தேசத்தின் பிள்ளைகள்"

இலங்கை அறிவின் கேந்திரநிலையமாக அபிவிருத்தி செய்வது "மஹிந்த சிந்தனை முன் நோக்கு" இல் குறிப்பிடப்படுகின்ற நோக்கத்தை வலியுறுத்திக்கொள்வதோடு நாட்டின் பிள்ளைகளுக்கு தங்களது இயல்புதிறனை உச்ச அளவில் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான அடித்தளங்களை அமைப்பதற்காக 5000 முதல்நிலைப் பாடசாலைகளும், 1000 இடைநிலைப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்யும் திட்டம் கல்வி அமைச்சுடன் இணைந்து 2012 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வியை வினைத்திறனாக முழுமைபெற தேர்ச்சியுள்ள மாணவர்களை இடைநிலைக் கல்விக்கு அனுமதிப்பதற்காக சொகுசாக கற்கும் அனுபவத்தைக் பெற்றுக் கொடுப்பதும் பிள்ளைகளின் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் ஆதரவு போன்ற அனைத்தையும் பிள்ளைகளின் உரிமை முழுமையாக பூர்த்திசெய்யும் சூழலொன்றை உருவாக்குவதற்கு வேண்டிய விசேட கவனம் செலுத்தப்பட்டும் அபிவிருத்தி செய்யப்படும் 5000 ஆரம்பப் பாடசாலைகள் "சிறுவர் நட்புப் பாடசாலை" என அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமானது,

- இலங்கையிலுள்ள பாடசாலை மாணவர்களுக்காக முழுமைபெற்ற ஆரம்பக் கல்வியை உறுதிசெய்வதற்காக வசதிகளுள்ள முதல்நிலைப் பாடசாலை முறைமையொன்றை மறுசீரமைத்தல்.
- மிகவும் தூரத்திலுள்ள நகரிலுள்ள பாடசாலையை நோக்கிச் செல்லும் முதல்நிலை மாணவர்கள் தற்பொழுது முகங்கொடுக்கும் ஓய்வற்ற உடல்நிலை மற்றும் மன அழுத்தம் போன்ற நிலைமையிலிருந்து இயல்புநிலைக்கு கொண்டுவருவதற்கான அடித்தளத்தை உருவாக்கல்.
- முதல்நிலைப் பாடசாலை மற்றும் இடைநிலைப் பாடசாலைகளுக்கு சேர்ப்பதற்காக தற்பொழுதுள்ள போட்டித்தன்மையை இழிவாக்கல்.
- முதல்நிலைப் பாடசாலைக்காக அங்கீகரிக்கப்பட்ட தீர்வுக்கேற்ப இருக்க வேண்டிய வளங்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் முதல்நிலைப் பாடசாலை சிறுவர் நட்புப் பாடசாலையாக அபிவிருத்தி செய்தல்.
- முதல்நிலைப் பாடசாலை சிறுவர் நட்பு எனும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக கற்பதற்குரிய சூழலொன்றை நிறைவேற்றும் பண்பார்ந்த அபிவிருத்திக்காக பாடசாலை அடிப்படைச் செயற்பாடு மிக முக்கியமாக இனங்காணுதல் மற்றும் செயற்படுத்தல்.
- முதல்நிலைப் பாடசாலை சிறுவர் நட்புப் பாடசாலையாக அபிவிருத்தி செய்வதன் மூலம் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் செயற் திறன்களின் விருத்தி மற்றும் பெற்றோர்களை விழிப்புணர்வூட்டுவதன் மூலம் பெற்றோர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு முதல் நிலைப் பிரிவின் பண்புசார்பை விருத்தி செய்தல்.

ஒரு பாடசாலைக்கு ரூபா 5 இலட்சம் வீதம் ஒதுக்கீடு வழங்கப்பட்டதோடு இங்கு 6483 கருத்திட்டங்கள் பின்வரும் விடயங்களின் கீழ் மேம்படுத்தல் நடைபெற்றது.

## பகுதியளவான கருத்திட்டம் பிரிந்து சென்றுள்ள விதம்

வரைபு : 3.10.1




மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள் சில



செய்யப்பட்ட முதலாம் ஆண்டு மாணவர்களின் செயற்பாட்டறை ஹபுகஹகம முதல்நிலைப் பாடசாலை திவுலபிடிய பி.செ. பிரிவு கம்பஹா மாவட்டம்



சீர்செய்யப்பட்ட பாடசாலை வேலி மற்றும் நுழைவாயில் விஹாரகல முதல்நிலைப் பாடசாலை சூரியவெவ பி.செ பிரிவு அம்பாந்தோட்டை மாவட்டம்



பாடசாலைக்கு நீர்வசதிகளை வழங்கல் அளுத்கம முதல்நிலைப் பாடசாலை பாததும்பர பிரதேச செயலகப் பிரிவு கண்டி மாவட்டம்



பாடசாலைக் கட்டிடம் பழுதுபார்த்தல் மற்றும் வர்ணம் பூசுதல் பெருநாவலர் வித்தியாலயம் ஆலையடிவேம்பு பி. செ பிரிவு அம்பாறை மாவட்டம்

இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதமாக தெரிவுசெய்யப்பட்ட 1678 பாடசாலைகள் முன்னர் குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி வேலைகள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முழுத் தலையீட்டினால் செயற்படுத்தப்பட்டதோடு 2 மாதங்கள் போன்ற குறுகிய காலத்தினுள் இனங்காணப்பட்ட அனைத்து கருத்திட்டங்களையும் நிறைவுசெய்துள்ளதோடு அதன் முன்னேற்றம் கீழக் குறிப்பிடப்பட்டுள்து.

பாடசாலை மறுசீரமைப்பின் போதான நிகழ்ச்சித்திட்டங்களின் 2012.12.31 வரையிலான முன்னேற்றம்

அட்டவணை : 3.10.1

| இல | மாவட்டம் | பாடசாலைகளின் எண்ணிக்கை | ஒதுக்கீடு ரூபா.(மில்) | செலவினம் ரூ.(மில்) 2012.12.31 | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 45 | 22.50 | 22.00 | 100 |
| 2 | கம்பஹா | 66 | 33.00 | 32.80 | 100 |
| 3 | களுத்துறை | 49 | 25.00 | 23.44 | 100 |
| 4 | இரத்தினபுரி | 196 | 98.00 | 94.78 | 100 |
| 5 | கேகாலை | 173 | 86.50 | 68.80 | 100 |
| 6 | குருநாகல் | 111 | 55.50 | 54.95 | 100 |
| 7 | புத்தளம் | 66 | 33.00 | 27.43 | 100 |
| 8 | காலி | 86 | 43.00 | 42.72 | 100 |
| 9 | மாத்தறை | 63 | 31.50 | 30.87 | 100 |
| 10 | அம்பாந்தோட்டை | 35 | 17.50 | 15.95 | 100 |
| 11 | மொனராகலை | 41 | 20.50 | 19.79 | 100 |
| 12 | பதுளை | 56 | 28.00 | 26.72 | 100 |
| 13 | நுவரேலியா | 57 | 28.50 | 28.33 | 100 |
| 14 | கண்டி | 58 | 29.00 | 28.70 | 100 |
| 15 | மாத்தளை | 37 | 18.50 | 17.97 | 100 |
| 16 | அநுராதபுரம் | 111 | 55.50 | 52.51 | 100 |
| 17 | பொலன்நறுவை | 67 | 33.50 | 33.47 | 100 |
| 18 | வவுனியா | 14 | 7.00 | 6.99 | 100 |
| 19 | திருகோணமலை | 67 | 33.50 | 32.62 | 100 |
| 20 | மட்டக்களப்பு | 70 | 35.00 | 35.00 | 100 |
| 21 | அம்பாறை | 95 | 47.50 | 47.32 | 100 |
| 22 | யாழ்ப்பாணம் | 61 | 30.50 | 30.50 | 100 |
| 23 | கிளிநொச்சி | 13 | 6.50 | 6.50 | 100 |
| 24 | முல்லைத்தீவு | 19 | 9.50 | 9.49 | 100 |
| 25 | மன்னார் | 22 | 11.00 | 10.76 | 100 |
| | **மொத்தம்** | **1678** | **839.50** | **800.48** | |
| **அமைச்சின் செலவினம்** | | | | 2.52 | |
| **முழு மொத்தம்** | | | | 803.00 * | |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

***பாடசாலை** அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2012.12.31 ஆம் திகதிக்கு மொத்த செலவு ரூ.803.00 மில்லியன் ஆனதோடு, மாவட்டத்தினால் வேலை நிறைசெய்வதற்கான கொடுப்பனவாக ரூ.25.27 மில்லியன் கையிலிருக்கும் விலைப்பட்டியலாகக் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் மொத்தச் செலவு ரூ.828.28 மில்லியன் ஆகவுள்ளது. 2013 ஆம் ஆண்டில் இந்த கையிலுள்ள விலைப்பட்டியிலில் குறிப்பிட்ட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

# 4

# நகர எழுச்சி - மனங்கவரும் நகரச் சூழல்

# 4.நகர எழுச்சி–மனங்கவரும் நகர சூழல்

### 4.1.பச்சை நகர வேலைத் திட்டம்

கடுகதியாக நிகழ்ந்துவரும் நகரமயமாக்கலைக் காரணமாகக் கொண்டு பாரிய அளவில் நிகழும் சூழல் மாசடைதலைத் தடுத்து மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் நகர வசதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்தல் “பச்சைநகரம்” வேலைத் திட்டத்தின் எதிர்பார்ப்பாகும். கொழும்பு உட்பட அதற்கு அன்மையில் உள்ள நகரங்களை “பச்சைநகரமாக” அபிவிருத்தி செய்யும் நோக்கில் 2012 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ,பின்வரும் அபிவிருத்தி விடயங்களை மேற்கொண்டுள்ளது.

### 4.1.1. தியத்த பூங்கா – நகர அபிவிருத்தி வேலைத்திட்டம்

அரசபாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த அமைச்சின் ஊடாக 99.15 மில்லியன் ரூபா நிதியேற்பாடு பெற்றுக் கொடுக்கப்பட்டு, காணிகள் நிரப்பப்பட்டு அபிவிருத்தி செய்யும் கூட்டுத் தாபனத்தின் மூலம் பத்தரமுல்லையில் குறித்த “பச்சைப் பூங்கா ”வேலைத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்பக் கட்டமாக 84 பூ விற்பனைக் கொட்டகை, முக்கோண வடிவில் பிரகாசிக்கும் வாசஸ்தலம் மற்றும் உடற் பயிற்சி வாசஸ்தலம் போன்று நீர்ப்பூ போன்றவற்றை நிர்மாணிப்பதன் ஊடாக மிக்க மனங்கவர் சூழலை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2012.12.31 ஆம் திகதியாகும் போது இந்தக் கருத்திட்டத்திற்கு 61 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கான சிரமதானப் பங்களிப்பை கடற்படை மற்றும் இராணுவம் ஆகிய பிரிவுகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



தியத்தபூங்காவில்
நிர்மாணிக்கப்பட்டுள்ளபூக்கள் விற்பனைக்





முப்பரிமாண வடிவிலான நடைபாதையும், உடற்பயிற்சித் தடங்களும் (மேடைகள்)

### 4.1.2 மாதர் சிகிச்சை நிலைய அபிவிருத்தி

சௌபாக்கியமான சமூகம் ஒன்றிற்காக உடல் நலமிக்க மனித வளத்தைக் கட்டி எழுப்புவதற்கு முதலீடு செய்வதென்பது முன்னிலைத் தேவையென அரசினால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளது. மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கிற்கு இணங்க சுகாதாரத் துறைக்குள் அரசின் நோக்கினை அடைந்து கொள்வதற்காக சிறுவர் மற்றும் மாதர் சிகிச்சை நிலையங்களைக் கட்டி எழுப்புவதற்கு 2012 ஆம் ஆண்டில் கவனத்தைச் செலுத்தியுள்ளது. இதன் ஊடாக கிராம மற்றும் நகரப் பிரதேசங்களில் சுகாதார சேவைச் சுட்டிகளில் நிலவும் ஏற்றதாழ்வுகளைக் குறைத்துக் கொள்ளல் இந்த வேலைத் திட்டத்தின் பிரதான நோக்கமாகின.

2011ஆம் ஆண்டில சிறுவர் மற்றும் மாதர் சிகிச்சை நிலையங்களை அபிவிருத்தி செய்யும் ஆரம்ப மற்றும் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதில் கம்பஹா மாவட்டத்தின் 15 பிரதேச செயளாலர் பிரிவுகளை உள்ளடங்கும் பிரகாரம் 24 சிறுவர் மற்றும் மாதர் சிகிச்சை நிலையங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டுள்ளது. 2012.12.31 ஆம் திகதியாகும் போது 113.37 மில்லியன் ரூபாசெலவில் 24 நிலையங்களதும் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதேபோன்று 2012 ஆம் ஆண்டில் சிறுவர் மற்றும் மாதர் சிகிச்சை நிலையங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் மூன்றாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 505.64 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மூன்றாம் கட்டத்தின் கீழ் 37 சிறுவர் மற்றும் மாதர் சிகிச்சை நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக 2012.12.31 ஆம் திகதிக்குள் 76.83 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.





12.31 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள களனி - தளுகமகொடசிறுவர் மற்றும் மாதர் சிகிச்சை நிலையம் பயனாளிகளின் தொகை -250



கம்பஹாவில் 5.09 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட மாகெவிட்ட சிறுவர் மற்றும் மாதர் சிகிசிசை நிலையம் பயனாளிகள் தொகை- 175



பியகமவில் 9.70 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்ட மாவரமண்டிய சிறுவர் மற்றும் மாதர் சிகிசிசை நிலையம் பயனாளிகள் தொகை- 200

### 4.1.3 வாரச் சந்தைகளை நிர்மாணித்தல்.

நுகர்வோர் மக்களுக்காகமிகச் சிறந்த நிலையில் நுகர்வோர் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதையும், வியாபார மக்களுக்குச் சிறந்த மற்றும் நவீனவசதிகளைப் பெற்றுக் கொடுப்பதையும் நோக்காகக் கொண்டு, உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையில் நிலவும் தொடர்பை வலுப்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதேவாரச் சந்தைகளை அபிவிருத்தி செய்வதின் முக்கிய நோக்கமாகும். இது பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2012 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக 09 பிரதேச செயளாலர் பிரிவுகளில் 14 வாரச் சந்தைகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. வாரச் சந்தைகளை அபிவிருத்தி செய்யும் இரண்டாம் கட்டமாக, முதலாம் கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட வாரச் சந்தைகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 09 வாரச் சந்தைகளதும் மற்றும் புதிதாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ள 10 வாரச் சந்தைகளதும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2012.12.31 ஆம் திகதியாகும் போது முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களில் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ள 12 வாரச் சந்தைகளதும் வேலைகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2012.12.31 ஆம் திகதியாகும் போது இந்த அபிவிருத்தித் திட்டங்களினால் 337.87 மில்லியன் ரூபா நிதி முன்னேற்றத்தைக் அடைய முடிந்துள்ளது. அதே போன்று 2012 ஆம் அண்டில் மாத்தறை மிதிகம வாரச் சந்தையின் அபிவிருத்திக்காக 2012.12.31 ஆம் திகதியாகும் போது 0.8 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.



நய்வள வாரச் சந்தை
கம்பஹா மாவட்டம்



மலவத்துஹிரிபிட்டிய வாரச் சந்தையில்
திவிநெகும உற்பத்தியாளர்களுக்காக
ஒதுக்கப்பட்டுள்ள பிரிவு
கம்பஹா மாவட்டம்

### 4.1.4 உடற்பயிற்சி மேடை நிர்மாணித்தல்

ஆரோக்கியம் நிறைந்த வாழ்க்கை வளத்தை ஏற்படுத்திக் கொள்வதற்காக உடற் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு மனிதர்களை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு உடற் பயிற்சி மேடை அமைப்பதற்காக 2012 ஆம் அண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் அளவு 174.21 மில்லியன் ரூபாவாகும். அத்துடன் இதன் ஊடாககம்பஹ களுஎலமற்றும் கிரிபத்கொடை ஆகிய பிரதேசங்களில் உடற்பயிற்சி மேடைகள் நிர்மாணித்து மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.



கம்பஹ களுஎல உடற்பயிற்சிமேடை



கிரிபத்கொடையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள
உடற்பயிற்சி மேடை

### 4.1.5 பஸ்தரிப்பு நிலைய அபிவிருத்தி

மாநகர மற்றும் நகர அபிவிருத்திச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான திறைமையுடன் கூடியவாகனப் போக்குவரத்துச் சேவையை நடாத்தும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காகவும், அது தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதுமே இதில் பிரதானமாகும். இந்த நோக்கத்தை முற்கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பஸ்தரிப்பு நிலையம் அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டின் போது இந்த வேலைத் திட்டத்தின் கீழ் எம்பிலிபிட்டிய பஸ் தரிப்பு நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக 31.11 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2012.12.31 ஆம் திகதியாகும் போது இந்தக் கருத்திட்டத்தினால் 15.74 மில்லியன் ரூபா நிதி முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது. அதே போன்று பதுளை, வெலிமட, பிரதேச செயளாலர் பிரிவுகளில் மஸ்பென்ன பஸ்தரிப்பு நிலைய அபிவிருத்திக்காக 17.75 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில், 2012.12.31 ஆம் திகதியாகும் போது 5.51 மில்லியன் ரூபா நிதி முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.




எம்பிலிப்பிட்டிய பஸ்தரிப்பு நிலைய தார் இடப்பட்டு மீள்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எம்பிலிப்பிட்டிய பிரதேச செயளாலர் பிரிவு இரத்தினபுர ிமாவட்டம்



மஸ்பென்ன பஸ்தரிப்பு நிலையத்தை மீள்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. வேலிமட பிரதேச செயளாலர் பிரிவு பதுளை மாவட்டம்

# 5

# பிரதேச வளர்ச்சி மத்திய நிலையம் - பரந்த அபிவிருத்தி

# 5.பிரதேச வளர்ச்சி மத்திய நிலையம் - பரந்த அபிவிருத்தி

நாட்டின் சகல மாகாணங்களில் இருந்தும் தேசியப் பொருளாதாரத்திற்கு வழங்கும் பங்களிப்பினை அதிகரித்து, சகல மாகாணங்களையும் இணைக்கும் அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்வதை நோக்காகக் கொண்டு, 2012 ஆம் ஆண்டில் பிரதே சஅபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. அப்போது செயற்படுத்தப்பட்ட விஷேட மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்பதையும் (09) 2012 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதற்குக் கருதியுள்ளதுடன், இங்கு உயர் தரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதையும், திறனுடன் கூடிய மனித வளத்தை உருவாக்குவது தொடர்பாகவும் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது

இந்த வேலைத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள் பிரதான ஆறு (06) பிரிவுகளின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன.



## 5.1 கிராமங்களுக்கும் மாகாணங்களுக்கும் இடையிலான தொடர்புகளை மேம்படுத்தல்.

நாட்டின் உள்ளகப் போக்குவரத்துத் தொகுதியை திறைமையாக்குவதன் ஊடாக கிராமிய உற்பத்திகளை சந்தை வரை கொண்டு செல்வதை இலகுவாக்குவதனால் கிராமியப் பொருளாதாரம் வலுவடையும். கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையில் உள்ள தூரத்தைக் குறைப்பதனால் மக்கள் கிராமத்திற்குள் தரித்திருக்கும் முன்னெடுப்புக்கள் அதிகரிப்பதுடன், பொதுப் போக்குவரத்துத் தொகுதி திறமை அடைவதால் உள்நாட்டு மொத்தத் தேசிய உற்பத்திக்குவழங்கப்படும் பங்களிப்பையும், வினைதிறனையும் அதிகரித்து கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்தல் இதன் ஊடாக எதிர்பார்க்கப்படும் பிரதான நோக்கமாகும்.

### கிராமங்களுக்கும் மாகாணங்களுக்கும் இடையிலான தொடர்புகளை மேம்படுத்தும் வேலைத்திட்டம் 2012.12.31 ஆம் திகதியாகும் போது அடையப்பட்டுள்ள மொத்த முன்னேற்றம்.

அட்டவணை : 5.1.1

| பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | மாவட்டம் | மொத்தக் கருத் திட்டங்களின் இலக்குகள் (கி.மீ.)களின் தொகை | 2012.12.31 ஆம் திகதியாகும் போது பூர்த்தி செய்யப்பட்டுள்ள மொத்தக் கி.மீ.களின் தொகை | 2012.12.31 ஆம் திகதியாகும் போது செலவிடப்பட்டுள்ள மொத்தச் செலவுமி.ரு. |
|---|---|---|---|---|
| மேல் ரன் அருண | கொழும்பு | 173.61 | 167.85 | 1477.47 |
| | களுத்துறை | 206.48 | 192.09 | 1941.00 |
| | கம்பஹா | 323.00 | 256.46 | 2730.84 |
| வடமேல் எழுச்சி | குருநாக்கல் | 434.67 | 385.65 | 3904.28 |
| | புத்தளம் | 220.54 | 220.54 | 2268.95 |
| ரஜரட்டநவோதயம் | அநுராதபுரம் | 287.13 | 120.07 | 2459.74 |
| | பொலன்னறுவை | 137.96 | 80.99 | 1023.60 |
| ருஹுனு உதானய | காலி | 350.10 | 217.16 | 1675.24 |
| | மாத்தறை | 113.01 | 99.78 | 1530.29 |
| | அம்பாந்தோட்டை | 256.15 | 154.85 | 2069.72 |
| சப்ரகமுவஅருனாலோக்கய | இரத்தினபுரி | 272.65 | 140.85 | 1301.48 |
| | கேகாலை | 333.03 | 117.45 | 1278.03 |
| கந்துரட்டஉதானய | கண்டி | 430.59 | 158.10 | 2839.23 |
| | மாத்தளை | 123.50 | 65.35 | 612.11 |
| புபுதமுவெல்லஸ்ஸ | பதுள்ளை | 277.73 | 177.17 | 2990.79 |
| | மொனராகலை | 179.60 | 81.37 | 1520.78 |
| | **மொத்தம்** | **4119.75** | **2635.73** | **31623.55** |

மூலம் :பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



நாரவில யக்தெஸ்ஸாவ தெரு
பிரதேச செயளாலர் பிரிவு – நாத்தாண்டிய – புத்தளம் மாவட்டம்
காபட் இடப்பட்டுள்ள துாரம் 4.45 கிலோ மீற்றர்



மாகந்துர- உடவெல வீதி
கட்டுகம்பொல பி.செ பிரிவு
குருநாக்கல் மாவட்டம்
காபட்இடப்பட்டுள்ள துாரம் 11.38கி.மீ



கோன்கஸ்தெனிய–மல்லஹவத வீதி
மீரிகம பி செ பிரிவு கம்பஹ மாவட்டம்
காபட் இடப்பட்டுள்ள துாரம் 3.7 கி.மீ

- 2011 ஆம் ஆண்டின் போது இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த மீதி ஏழு மாகாணங்களில் உள்ள தெருக்களை மாகாணத் தெருக்கள் தரப்படுத்தல் விடயத்திற்கு உரிய ‘C’ மற்றும்‘D’ தரத்திலான 4,119.75 கிலோ மீற்றர் தூரமுள்ள பாதைகளை அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. அதில் 2011 ஆம் ஆண்டில் 1000 கிலோ மீற்றர் மற்றும் 2012 ஆம் ஆண்டில் 1,635.72 கிலோ மீற்றர் தூரமாக மொத்தம், 2,635.72 கிலோ மீற்றர் தூரமுள்ள பாதைகளுக்குக் காபட் இடப்பட்டுள்ளன.
- 2012 ஆம் ஆண்டில் மாகாணப் பாதைகளுக்குக் காபட் இடுவதற்காக 19,458.79 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.
- வட மாகாணத்தில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல், மண்ணாலான அணைகளை உடைத்து அகற்றுதல், ஆகியவற்றிற்குப் பயன்படுத்திய கனரக வாகனப் பராமரிப்பிற்காக 2012 ஆம் ஆண்டில் 145.75 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதில் 2012.12.31 ஆம் திகதியாகும் போது 82.56 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

### 5.2 கைவிடப்பட்ட அல்லது பூர்த்தி செய்யப்படாத அரச சொத்துக்களை மீள் திருத்தம் செய்தல் அல்லது பூரணப்படுத்தல்.

நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தினால் பாவனைக்கு எடுக்க முடியாத நிலையில் உள்ள அரச சொத்துக்கள், வளஅழிவாகவும் மற்றும் ஆரம்ப நோக்கத்தை விட, பல்தரப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் முன்னெடுப்பாகவும் அவற்றை அடையாளங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது, அதற்கு இணங்க அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ள 14 மாவட்டங்களில் கைவிடப்பட்டுள்ள அல்லது பூரணப்படுத்தப்படாத அரசசொத்துக்களை மீள் திருத்தம் செய்து அவற்றை உபயோகத்திற்கு எடுக்கக்கூடிய மட்டத்தில் துப்பரவுசெய்வதன் ஊடாகஅவற்றின் பிரதிலாபங்கள் மக்களைச் சென்றடைவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக அரச செலவுகளின் பிரதிலாபங்களை முறைப்படி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.





கிதுல் எல்ல பல்விடயக் கட்டிடம்
பிரதேச செயளாலர் பிரிவு – எல்ல
பதுளை மாவட்டம்

ஸெஸிலியா தேசிய பாடசாலையில் பூரணப்படுத்தப்படாது நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைகளின் வேலைகளைப் பூர்த்தி செய்தல்.

## கைவிடப்பட்டுள்ள அல்லது பூர்த்தி செய்யப்படாத அரச சொத்துக்களை திருத்தம் செய்தல் அல்லது பூரணப்படுத்தல்.2012.12.31 ஆம் திகதிக்குள் அடைந்த மொத்த முன்னேற்றம்

அட்டவணை :5.2.1

| வேலைத்திட்டம் | மாவட்டம் | ஒதுக்கப் பட்டுள் ள நிதி (மி.ரூபா) | 2012.12.31 ஆம் திகதிக்கு செலவு செய்யப்பட்டு ள்ள நிதி (மி.ரூபா) | அனுமதி க்கப்பட்டு ள்ள கருத் திட்டங்க ளின் தொகை | பௌதீகமுன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2012.12.31 ஆம் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் தொகை | 2012.12.31 ஆம் திகதிக்கு செய்றப்படும் நிலையில் உள்ள கருத்திட்டங்களின் தொகை |
| மேல் மாகாணரன் அருண | கம்பஹா | 39.15 | 24.31 | 4 | 4 | |
| | களுத்துறை | 31.02 | 17.52 | 17 | 16 | |
| ருஹுனு உதானய | காலி | 35.26 | 18.90 | 18 | 11 | 4 |
| | மாத்தறை | 3.67 | | 2 | 2 | |
| சப்ரகமுவஅருனாலோக்கய | கேகாலை | 1.44 | 1.44 | 3 | 3 | |
| ரஜரட்டநவோதயம் | அநுராதபுரம் | 34.71 | 20.01 | 30 | 24 | 5 |
| புபுதமுவெல்லஸ்ஸ | பதுளை | 28.66 | 45.66 | 11 | 10 | 1 |
| வடமேல் எழுச்சி | குருநாகல் | 51.16 | 28.41 | 47 | 45 | 2 |
| | புத்தளம் | 16.43 | 11.83 | 42 | 39 | 3 |
| கந்துரட்டஉதானய | கண்டி | 1.90 | 1.84 | 2 | 2 | |
| | நுவரெலியா | 6.05 | 2.30 | 2 | 2 | |
| கிழக்குநவோதயம் | திருகோணமலை | 20.78 | 18.29 | 3 | 3 | |
| | அம்பாறை | 24.07 | 18.88 | 15 | 14 | 1 |
| | மட்டக்களப்பு | 205.54 | 156.9 | 45 | 24 | 21 |
| **மொத்தம்** | | **499.84** | **366.29** | **241** | **199** | **37** |

மூலம் :பொருளாதாரஅபிவிருத்திஅமைச்சு

2012 இல் 241 கருத்திட்டங்கள் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளதுடன், வருடம் முடிவடையும் போது 199 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்த ிசெய்யப்பட்டுள்ளன. மிகுதியாயுள்ள 37 கருத்திட்டங்களின் வேலைகளை 2013 இல் முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளன. இதற்காக 499.84 மில்லியன் ரூபாநிதி 2012 இல் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2012.12.31 ஆம் திகதிக்குள் 366.29 மில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

## 5.3. பல்தரப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்

போதிய அளவுநீர் விநியோகிக்கப்பட்டு விவசாயக் காணிகளின் உற்பத்தி வினைதிறனை அதிகரிப்பதும், அவ்வாறே பயிரிடக் கூடிய காணிகளின் அளவை அதிகரிப்பதன் ஊடாக விளைச்சலை அதிகரித்து விவசாய உற்பத்திகளை விருத்தி செய்து விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிப்பதும், நீர்க் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதும், புனர்நிர்மாணம் செய்வதுமே இந்த வேலைத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.




திமுதுகமவெவதிகொடதுவ கால்வாயைப் புனர்நிர்மாணம் செய்தல் - வெலிமட பி.செ பிரிவு பதுளை மாவட்டம்



கோன்கஹவெவ குளத்தை புனர்நிர்மாணம் செய்தல்
பிரதேச செயளாலர் பிரிவு–படல்கும்புர
மொனராகலை மாவட்டம்

2012 ஆம் ஆண்டில் இந்த வேலைத் திட்டத்திற்காக 534.17 மில்லியன் ரூபா நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதில் 2012.12.31 ஆம் திகதிக்குள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் தொகை 38 ஆகும். 19 கருத்திட்டங்களின் வேலைகளை 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## 5.4. சுற்றுலாநடவடிக்கைகளுக்காகப் பொதுப் பயன்பாடுகளைவழங்கல்

மனசங்கடமான நிலையிலும் கடும் வேலைப் பழுவிலும் கூடிய மக்களுக்கு தமது ஓய்வு காலத்தை மனநிம்மதியினை ஏற்படுத்தும் வகையில் களிப்பதற்குத் தேவையான சூழல் ஒன்றினை நிர்மாணிப்பதற்கு அமைச்சு இதன் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் அடிப்படையில் சுற்றுலா வலயங்களை அபிவிருத்தி செய்தல் சமய வழிபாட்டுத்தலங்களை மீள்திருத்தம் செய்தல், பல்லினமக்களுக்கான கலாச்சார நிலையங்களை நிர்மாணித்தல், நகரஅலங்காரம் சுற்றுலாப் பயணிகளின் சுகாதார வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று நாட்டின் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கிடையில் பணப் பரிமாற்றத்தினை அதிகரித்து அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காக குறித்த வேலைத் திட்டத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

## சுற்றுலா நடவடிக்கைகளுக்கான பொதுப் பயன்பாட்டுக் கருத்திட்டம்

## 2012.12.31 ஆம் திகதிக்குள் கைப்பற்றப்பட்டுள்ள மொத்த முன்னேற்றம்

அட்டவணை : 5.4.1

| மாவட்டம் | அனுமதிக்கப்பட்டுள்ள நிதி (மில்லியன் ரூபா) | செலவு செய்யப்பட்டுள்ள நிதி (மில்லியன் ரூபா) | அனுமதிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் தொகை | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத் திட்டங்களின் தொகை | செயற்படும் நிலையில் உள்ள கருத் திட்டங்களின் தொகை |
| கம்பஹா | 200.00 | 7.81 | 11 | 8 | 3 |
| காலி | 213.01 | 320.30 | 29 | 1 | 28 |
| அம்பாந்தோட்டை | 63.91 | 13.10 | 2 | | 1 |
| கேகாலை | 88.52 | | 1 | | 1 |
| பொலனறுவை | 102.15 | 17.92 | 5 | | 5 |
| பதுளை | 54.44 | 7.62 | 19 | 16 | 3 |
| மாத்தளை | 1.25 | 0.54 | 1 | | 1 |
| நுவரெலியா | 260.66 | 107.04 | 326 | 136 | 190 |
| யாழ்ப்பாணம் | 50.00 | 13.43 | 2 | | 2 |
| **மொத்தம்** | **1033.94** | **487.76** | **396** | **161** | **234** |

மூலம் :பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



பண்டாரவெல தேசிய விடுமுறை விடுதியின் பிரவேசபாதையை புனர்நிர்மாணம் செய்தல்
பிரதேச செயளாலர் பிரிவு - எல்ல
பதுளை மாவட்டம்



வீரகெட்டிய உடுகிரிவெலவெவ குளத்தைச் சூழ்ந்த பாதைத் தொகுதியைஅமைத்தல்
பிரதேச செயளாலர் பிரிவு–வீரகெட்டிய
அம்பாந்தோட்டை மாவட்டம்

- இதற்காக 2012 ஆம் ஆண்டில் 1033.94 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் தொகை 396 ஆகும். 2012.12.31 ஆம் திகதியாகும் போது 487.76 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டு 161 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 234 கருத்திட்டங்களின் வேலைகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## 5.5 அடிப்படை மனிதத் தேவைகளுக்கான பிரவேசம்

வாழ்வதற்காக சகல இலங்கைப் பிரஜைகளுக்கும் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அவகாசம் அழித்தல் ‘அடிப்படை மனிதத் தேவைகளுக்கான பிரவேசம்’’ எனும் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. விஷேடமாக வெள்ளத்தினால் அழிவடைந்த வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்தல், குடிநீர்க் கருத்திட்டங்களை நிர்மாணித்தல், மின்சாரம் வழங்கும் கருத்திட்டம் மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற கருத்திட்டங்கள் இதில் சிறந்து விளங்குவதுடன், மக்களுக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுத்து மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாயின.

### அடிப்படை மனிதத் தேவைகளுக்கான பிரவேசக் கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டிற்குள் அடையப்பட்ட மொத்த முன்னேற்றம்

அட்டவணை : 5.5.1

| மாவட்டம் | அனுமதிக்கப் பட்டுள்ள நிதி (மில்லியன் ரூபா) | செலவு செய்யப்பட் டுள்ளநிதி (மில்லியன் ரூபா) | அனுமதிக்கப்ப ட்டுள்ள கருத் திட்டங்களின் தொகை | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத் திட்டங்களின் தொகை | செயற்படும் நிலையில் உள்ள கருத்திட்டங்க ளின் தொகை |
| கம்பஹா | 230 | 117.1 | 26 | 24 | 1 |
| காலி | 37.45 | | 3458 | 3457 | 1 |
| மாத்தறை | 64.15 | 35.8 | 4544 | 4544 | |
| அம்பாந்தோட்டை | 98.4 | 75.04 | 740 | 192 | 408 |
| கேகாலை | 5.35 | | 5 | | 5 |
| அநுராதபரம் | 32.75 | | 14 | 13 | |
| பதுளை | 30.62 | 24.38 | 90 | 65 | 25 |
| கண்டி | 26.7 | 7.41 | 267 | 93 | 174 |
| நுவரெலியா | 73.3 | 55.9 | 1 | 1 | |
| திருகோணமலை | 4.94 | | 1 | 1 | |
| அம்பாறை | 45.06 | | 5 | 3 | 1 |
| வவுனியா | 36.45 | 0.67 | 1 | | 1 |
| மன்னார் | 10 | | 1 | | 1 |
| முல்லைத்தீவு | 8.91 | | 3 | | 3 |
| வடமாகாணம் | 26.53 | 24.86 | 4 | 4 | |
| **மொத்தம்** | **730.61** | **341.16** | **9160** | **8397** | **620** |

மூலம் :பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



குடிசையில் இருந்து புதிய உலகத்திற்கு எனும் வேலைத்திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதிஉதவிகளினால் திருமதி: கார்யமடித்த ஏ.கே.துல்மினிதரங்கா அவர்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வீடு
பிரதேசசெயளாலர் பிரிவு- அங்குனகொலபெலஸ்ஸ
அம்பாந்தோட்டை மாவட்டம்



வட மாகாணம்
புலம்பெயர்ந்தோரை மீள் குடியேற்றுவதற்காக மெற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது ஈடுபடுத்தப்பட்ட இயந்திரங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட திரவம் மற்றும் எரிபொருள் நிவாரணம்

2012 ஆம் ஆணடில் அனுமதிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் தொகை9160 ஆவதுடன் 2012.12.31 ஆம் திகதியாகும் போது அதில் 8397 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2012.12.31 ஆம் திகதியாகும் போது அடைந்த நிதி முன்னேற்றம் 341.16 மில்லியன் ரூபாவாகும்.



மீள்திருத்தம் செய்யப்பட்ட மலல்பொலபிதுருவெல்ல பாலம் பிரதேச செயளாலர் பிரிவு– யட்டியாந்தோட்டை
கேகாலை மாவட்டம்

### 5.6 வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சுயதொழிலிற்கான ஒன்றிணைந்த உட்கட்டமைப்பு வசதிகள்

சுயதொழிலாலர்களுக்கு விரிவான உற்பத்தி மற்றும் சேவைச் சந்தையைப் பெற்றுக் கொடுத்து நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் அவர்களின் அதிகூடிய பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதே இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். அத்துடன் நாட்டிற்கு உள்ளேயே உற்பத்தி செய்யப்பட்டு பாவனைக்கு எடுப்பதன் காரணமாக வெளிநாட்டிற்கு இழுத்தச் செல்லப்படும் பணத்தை நாட்டிற்கு உள்ளேயே சேமித்தல் மற்றும் மக்களின் வாழ்வாதார நிலையை உயர்வடையச் செய்தல் போன்ற பல பிரதிலாபங்களை இதன் ஊடாக அடைய முடியும் என ஊகிக்கப்படுகின்றது. அதே போன்று கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் காரணமாக நகரமயமாக்கலில் சிக்கிக் கொள்ளாமல் கிராமியப் பொருளாதாரத்தை வலுவடையச் செய்வதற்காக மக்களைக் கிராமத்திற்குள் தரித்து வைத்துக் கொள்வதையே இந்த வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன.



தேயிலைக் கொழுந்து வாகனப் போக்குவரத்திற்காக மஹதிகஆராவ பாதைக்குக் கொங்கிரீட் இட்டு நிர்மாணித்தல்
பிரதேச செயளாலர் பிரிவு- ஹாலிஎல
பதுளை மாவட்டம்

## வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் சுயதொழிலிற்கான ஒன்றிணைந்த உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்டம்
## 2012.12.31 ஆம் திகதிக்குள் அடைந்த முன்னேற்றம்

அட்டவணை : 5.6.1

| மாவட்டம் | அனுமதிக்கப் பட்டுள்ள நிதி (மில்லியன் ரூபா) | செலவு செய்யப்பட்டுள்ள நிதி (மில்லியன் ரூபா) | அனுமதிக்கப்பட்டுள்ள கருத் திட்டங்களின் தொகை | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | | | பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத் திட்டங்களின் தொகை | செயற்படும் நிலையில் உள்ள கருத்திட்டங்களின் தொகை |
| கொழும்பு | 61.54 | 15.58 | 5 | 5 | |
| கம்பஹா | 38.46 | 17.30 | 1 | 1 | |
| மாத்தறை | 3.97 | 0.80 | 1 | | 1 |
| அம்பாந்தோட்டை | 112.34 | 26.00 | 1 | | 1 |
| கேகாலை | 18.91 | 24.88 | 3 | 1 | |
| இரத்தினபுரி | 33.09 | 6.22 | 2 | 1 | |
| அநுராதபுரம் | 127.58 | 117.78 | 661 | 79 | 582 |
| பொலன்னறுவை | 112.71 | 51.65 | 190 | 116 | 187 |
| பதுளை | 1.57 | 7.06 | 6 | 6 | |
| மொனராகலை | 65.50 | 5.35 | 3 | 1 | 2 |
| புத்தளம் | 20.00 | 20.00 | 26 | 26 | |
| குருநாகல் | 75.00 | 31.39 | 328 | 328 | |
| கண்டி | 10.10 | 10.03 | 1 | 1 | |
| திருகோணமலை | 50.00 | 28.80 | 10 | 9 | 1 |
| மன்னார் | 0.41 | | 3 | 1 | |
| **மொத்தம்** | **731.18** | **362.84** | **1241** | **575** | **774** |

மூலம் :பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

- 2012 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் தொகை1241ஆவதுடன், அனுமதிக்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் அளவு 731.18மில்லியன் ரூபாவாகும். 2012.12.31 ஆம் திகதியில் 575 கருத்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக 362.84 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று 774 கருத்திட்டங்கள் செயற்படும் நிலையில் உள்ளது.

## 5.7. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியும் மீள் நிர்மாணமும்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதேசங்களின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்த வதற்காக அரசாங்கம் அதிகபட்ச முன்னுரிமையைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன், கடந்த பல வருடங்களிற்குள் உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அப் பிரதேசங் களிற்குள் விரைவான அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பிரதேச அபிவிருத்தி எனும் உபாய முறைக்கு இணங்க வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் ஆகிய அபிவிருத்தித் திட்டங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களிற்குள் துரித அபிவிருத்தி போன்று, நீண்டகால அபிவிருத்தி தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையிலும் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யுத்த சூழ்நிலை காரணமாக அழிவடைந்த, சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்களை உள்ளடக்கிய, அபிவிருத்தி செயற்திட்டங்கள் பலதரப்படுகிறது. அதன் கீழ் பாதைகள் மீள்திருத்தல், வீடு, நீர் வழங்கல் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், கழிவறைத் தொகுதிகள். வைத்தியசாலை. பாடசாலைக் கட்டிடங்கள், பாலங்கள், போக்குகள், ஆகியவற்றை மீள்திருத்தல் திட்டங்கள், மின்சார வசதியை வழங்கல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியன 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 5.7.1 பாதைகள் மற்றும் பாலங்கள்

நீண்ட காலமாக நிலவிய மோதல் நிலை காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்குள் பழுதடைந்த நிலையை அடைந்திருந்த பாதைத் தொகுதியின் குறை பாடுகளை நிவர்த்தி செய்து அப் பிரதேசங்களில் வாழும் மக்களிற்கான சந்தைகளிற்கான போக்குவரத்து, உற்பத்திகளைக் கொள்வனவு செய்தல் போன்று கல்வி, சுகாதாரம் மற்றும் கலாசார நடவடிக்கை களிற்கான வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்திச் செயற்பாடுகளின் ஒரு கட்டமாக பாதைகள் மற்றும் பாலங்கள் மீள் திருத்தத்தைக் குறிப்பிட முடியும்.

#### வட மாகாணம்

மாகாணத்தின் பாதைகள் அபிவிருத்திக்காக அமைச்சு 3,310.93 மில் ரூபா முதலீடு செய்துள்ளது. இதன் கீழ் 470.15 கி.மீ. தூரமுள்ள கிராமியப் பாதைகள் மற்றும் 12 பாலங்களின் மீள்திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2012.12.31 போது 281.16 கிலோ மீற்றர் தூரமுள்ள பெருந்தெருக்கள் காபட் இடப்பட்டு வருகின்றன.

வட மாகாணம் - 2012.12.31 ஆம் திகதியில் அடைந்த முன்னேற்றம் — அட்டவணை 5.7.1

| மாவட்டம் | செயற்பாடுகள் | பௌதீக இலக்கு 2012 (கி.மீ, தொகை) | நெருங்கிக் கொண்ட இலக்கு 2012.12.31 (கி.மீ/ தொகை) | | நிதி ஏற்பாடு 2012 (மி.ரு ) | செலவு 2012.12.31 (மி.ரு ) |
|---|---|---|---|---|---|---|
| | | | வேலை பூர்த்தி | செயற்படும் நிலையில் உள்ள | | |
| யாழ்ப்பாணம் | பெருந்தெருக்கள் (கி.மீ.) | 60.87 | | 60.87 | 577.00 | 559.70 |
| | கிராமப்புறப் பாதைகள்(கி.மீ.)) | 219.52 | 149.82 | 46.15 | 583.65 | 361.24 |
| | பாலம்(தொகை) | 4 | 1 | 3 | | |
| கிளிநொச்சி | பெருந் தெருக்கள் (கி.மீ.) | 43.84 | | 43.84 | 491.67 | 472.80 |
| | கிராமப்புற பாதைகள் (கி.மீ.) | 131.44 | 59.85 | 35.63 | 215.14 | 131.79 |
| | பாலம்(தொகை) | 6 | 5 | | | |
| முல்லைத் தீவு | பெருந் தெருக்கள் (கி.மீ.) | 85.45 | | 85.45 | 716.83 | 699.71 |
| | கிராமப்புற பாதைகள் (கி.மீ.) | 129.26 | 74.25 | 58.67 | 296.41 | 163.16 |
| | பாலம்(தொகை) | பாலம்- 4<br>குறுக்கப்பாதை 2<br>போக்கு -1 | பாலம்-1 | பாலம்- 3<br>குறுக்குப்பாதை 2<br>போக்கு -1 | | |
| வவுனியா | பெருந்தெருக்கள் (கி.மீ.) | 23.07 | | 23.07 | 110.00 | 95.01 |
| | கிராமப்புற பாதைகள் (கி.மீ.) | 181.63 | 90.69 | 42.48 | 420.26 | 271.66 |
| | பாலம்(தொகை) | 2 | 2 | | | |
| மன்னார் | பெருந்தெருக்கள் (கி.மீ.) | 31.93 | _ | 31.93 | 377.00 | 354.96 |
| | கிராமப்புற பாதைகள் (கி.மீ.) | 201.84 | 95.54 | 80.60 | 286.93 | 200.89 |
| | பாலம் (தொகை) | பாலம் -3 | 3 | | | |
| **மொத்தம்** | **பெருந்தெருக்கள் (கி.மீ.)** | **281.16** | | **281.16** | **4074.89** | **3310.93** |
| | **கிராமப்புற பாதைகள் (கி.மீ.)** | **863.69** | **470.15** | **263.53** | | |
| | **பாலங்கள் (தொகை)** | **பாலம் -19<br>குறுக்கப்பாதை2<br>போக்கு -1** | **பாலம் -12** | **பாலம் - 6<br>குறுக்கப்பாதை -2<br>போக்கு -1** | | |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



தோணிக்கல் லக்ஷபான கிராமவீதி
வவுனியா மாவட்டம்



பரந்தன் பூனகரி வீதி
கிளிநொச்சி மாவட்டம்

## கிழக்கு மாகாணம்

மாகாணத்தின் தெருக்கள் அபிவிருத்திக்காக அமைச்சு 1,149.83 மில்லியன் ரூபா முதலீடு செய்துள்ளதுடன், இந்த வேலைத்திட்டத்தின் கீழ் 285.85 கிலோ மீற்றர் தூரமுள்ள கிராம வீதிகள் மற்றும் 37 பாலங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன.

### கிழக்கு மாகாணம் -2012.12.31 ஆம் திகதிக்குள் அடைந்த முன்னேற்றம் அட்டவணை 5.7.2

| மாவட்டம் | செயற்பாடுகள் | பௌதீக இலக்கு 2012 (கி.மீ/ தொகை ) | நெருங்கிக் கொண்ட இலக்கு 2012.12.31 (கி.மீ/ தொகை) | | நிதி ஏற்பாடு 2012 (மி.ரூ ) | செலவு 2012.12.31 (மி.ரூ ) |
|---|---|---|---|---|---|---|
| | | | வேலை பூர்த்தி | செயற்படும் நிலையில் உள்ள | | |
| திருகோணமலை | கிராமப் பாதைகள் (கி.மீ.)) | 131.40 | 58.37 | 70.06 | 341.03 | 166.33 |
| | பாலம்(தொகை) | 78 | 15 | 62 | | |
| மட்டக்களப்பு | கிராமப் பாதைகள் (கி.மீ.)) | 102.63 | 55.52 | 40.73 | 557.10 | 441.03 |
| | பாலம்(தொகை) | 36 | 19 | 3 | | |
| அம்பாறை | கிராமப்புற பாதைகள் (கி.மீ.)) | 260.96 | 182.25 | 110.50 | 801.49 | 542.47 |
| | பாலம் (தொகை) | 23 | 3 | 3 | | |
| **மொத்தம்** | **கிராமப்புற பாதைகள் (கி.மீ.)** | **494.99** | **285.85** | **221.29** | **1,699.62** | **1149.83** |
| | **பாலம் (தொகை)** | **137** | **37** | **68** | | |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



அல் அமீன் தெரு கொங்கிரீட் இடப்பட்டுள்ளது – கவத்தாமுனை-மட்டக்களப்பு




பாலம் மற்றும் போக்கு நிர்மாணித்தல்-வெருகல்- திருகோணமலை

### 5.7.2 மின்சாரம் மற்றும் எரிவாயு

யுத்த மோதல் நிலவிய காலகட்டத்திற்குள் செயல் இழந்த மின்சாரத் தொகுதியை மீண்டும் கட்டி எழுப்பும் நோக்கினை முற்கொண்டு வட மாகாணத்திற்குள் மின்சாரம் வினியோகிக்கும் நிலையம் மற்றும் மின்சாரத்தை விரிவுபடுத்தவதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு வெளிநாட்டு உதவிக் கருத்திட்டம் ஊடாக நிதியேற்பாடு வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக 2012 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் 731.12 மில்லியன் ரூபா நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2012.12.31 ஆம் திகதியாகும் போது 714.88 மில்லியன் ரூபா நிதி முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளன. இதன் கீழ் செயற்படுத்தப்படும் பிரதான கருத்திட்டங்கள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- சுமார் 132/33 கி.வோ. வலுவிலான சுன்னாகம் உப மின் நிலையத்தை நிர்மாணித்தல்
- கிளிநொச்சியில் இருந்து சுன்னாகம் வரையிலான சுமார் 132 கி.வோ. இரட்டை வலுவுள்ள மின் மாற்றிகளை நிர்மாணித்தல்.



கிளிநொச்சி - சுன்னாகம் மின் விநியோகக் கோபுரம்



சுன்னாகம் உப மின் நிலையத்தை நிர்மாணித்தல்

### 5.7.3 வறுமை ஒழித்தல்

வட மாகாணத்திற்குள் மீள்குடியேற்றம் செய்யும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதை நோக்காகக் கொண்டும், உள்ளூரில் நிர்க்கதியாகிய மக்களின் உணவுப் பாதுகாப்பை உருவாக்குவதை நோக்காகக் கொண்டும், 2012 ஆம் ஆண்டிற்குள் உலக உணவு வேலைத்திட்டத்தின் கீழ் 19,500.86 மெட்ரிக்டொன் உணவுப்பொருட்களை பயனாளிகள் 408,879 பேரிற்கு விநியோகிப்பதற்காக 2,415.54 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன. அதே போன்று கிழக்கு மாகாணத்தில் மீள் குடியேற்றம் செய்யும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதை நோக்காகக் கொண்டும், உள்ளூரில் நிர்க்கதியாகிய மக்களின் உணவுப் பாதுகாப்பை உருவாக்குவதை நோக்காகக் கொண்டும், 2012 ஆம் ஆண்டிற்குள் உலக உணவு வேலைத்திட்டத்தின் கீழ் 69.18 மெட்ரிக்டொன் உணவுப் பொருட்களை பயனாளிகள் 1,387 பேரிற்கு விநியோகிப் பதற்காக 9.41 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன.



தெரிவு செய்யப்பட்ட குழுக்களின் போசாக்கு நிலையை உயர்த்துதல்.



வேலைக்காக உணவு

வட மாகாணம் - 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் அட்டவணை 5.7.3

| மாவட்டம் | நெருங்கிக் கொண்ட இலக்கு 2012.12.31 (உணவு மெ.டொன்) | பயனாளிகளின் தொகை | நிதியேற்பாடு 2012 (மி.ரூ.) | செலவு2012.12.31 (மி.ரூ.) |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 5,975.09 | 164,530 | 850.00 | 740.38 |
| கிளிநொச்சி | 2,759.82 | 53,034 | 350.00 | 341.97 |
| முல்லைத்தீவு | 4,627.12 | 63,234 | 580.00 | 573.34 |
| வவுனியா | 3,605.54 | 69,422 | 475.00 | 446.77 |
| மன்னார் | 2,533.29 | 58,659 | 324.00 | 313.08 |
| **மொத்தம்** | **19,500.86** | **408,879** | **2,579.00** | **2,415.54** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

கிழக்கு மாகாணம் -2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம் அட்டவணை 5.7.4

| மாவட்டம் | நெருங்கிக் கொண்ட இலக்கு 2012.12.31 (உணவு மெ.டொன்) | பயனாளிகளின் தொகை | நிதியேற்பாடு 2012 (மி.ரூ.) | செலவு 2012.12.31 (மி.ரூ.) |
|---|---|---|---|---|
| திருகோணமலை | 30.72 | 596 | 4.00 | 3.84 |
| மட்டக்களப்பு | 17.95 | 264 | 3.00 | 2.57 |
| அம்பாறை | 20.51 | 527 | 4.00 | 3.00 |
| **மொத்தம்** | **69.18** | **1387** | **11.00** | **9.41** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## 5.7.4 வீட்டு அபிவிருத்தி

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு என்பதற்கு இணங்க, சகல குடும்பங்களிற்கும் பாதுகாப்பு, அடிப்படைச் சுகாதார வசதிகள் மற்றும் உணவுப் பாதுகாப்புடன் கூடிய சூழல், ஆகிய சகல வசதிகளுடன் கூடிய வீடொன்றில் வசிப்பதை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கொள்கை யாகும். சமூகத்தில் வசிக்கும் விஷேட இலக்கைக் கொண்ட குழு ஒன்றாக அடையாளங் கண்டுள்ள, வடமாகாணத்தில் யுத்தம் காரணமாக நிர்க்கதியாகிய நபர்களுக்குத் சிறந்த தரத்தில் கூடிய வீடுகளை வழங்குவதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட வீடுகள் நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் ஊடாக, 2012 ஆம் ஆண்டிற்குள் 1000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மொத்த முதலீடு 1,645.09 மில்லியன் ரூபாவாகும்.



இந்தியாவின் முன்னோடி வீட்டுக் கருத்திட்டம் கிளிநொச்சி மாவட்டம்



இந்தியாவின் முன்னோடி வீட்டுக் கருத்திட்டம் - முல்லைத்தீவு மாவட்டம்

### 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம். 

அட்டவணை 5.7.5

| மாவட்டம் | நிர்மாணிக்கப்படும் வீடுகளின் அளவு | நிதியேற்பாடு 2012(மி.ரூ.) | செலவு 2012.12.31(மி.ரூ.) | பயனாளிகளின் தொகை (குடும்பம்) |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 150 | 1,650.00 | 1,645.09 | 150 |
| கிளிநொச்சி | 250 | | | 250 |
| முல்லைத்தீவு | 250 | | | 250 |
| வவுனியா | 175 | | | 175 |
| மன்னார் | 175 | | | 175 |
| **மொத்தம்** | 1000 | 1,650.00 | 1,645.09 | **1,000** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### 5.7.5 நீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாவனை வேலைத்திட்டம்.

2020 ஆம் ஆண்டை அடையும் போது நாட்டில் வசிக்கும் சகல பிரஜைகளுக்கும் திறைமையான ஸ்திரமான முறை ஒன்றின் ஊடாக கட்டுபடியாகும் செலவிற்கு சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை முன்னெடுத்துக் கொண்டு உள்ளூரில் நிர்க்கதியான நபர்களை மீள் குடியேற்றும் போது அவர்களுக்குத் தேவையான நீர் வசதிகளை வழங்குவதற்காக அரசாங்கம் உடனடிக் கவனத்தைச் செலுத்தியுள்ளதுடன், குடிநீர்க் கருத்திட்டம் மற்றும் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக வடகிழக்கு மாகாணங்களிற்கு 2012 ஆம் ஆண்டிற்குள் செய்யப்பட்டுள்ள மொத்த முதலீடு 1,123.29 மில்லியன் ரூபாவாகும்.

### வட மாகாணம் - 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்

அட்டவணை 5.7.6

| மாவட்டம் | நிர்மாணிக்கப்படும் கிணறுகள் மற்றும் நீர்ப்பாசன முறைகள் | நிதியேற்பாடு 2012 (மி.ரூ.) | செலவு2012.12.31 (மி.ரூ.) |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 559 | 401.34 | 326.79 |
| கிளிநொச்சி | 27 | 4.95 | 2.34 |
| முல்லைத்தீவு | 11 | 226.42 | 224.44 |
| வவுனியா | 12 | 29.11 | 1.00 |
| மன்னார் | கிணறுகள் 6, நீர்வழங்கல் திட்டங்கள்- 2 | 234.14 | 229.47 |
| **மொத்தம்** | **கிணறுகள் 615, நீர்ப்பாசன முறைகள்- 2** | **895.96** | **784.04** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



வல்வெட்டித்துறை குடிநீர் வழங்கல் தொகுதி – யாழ்ப்பாண மாவட்டம்

பல்லவராயன்கட்டில் கிணறுகள் நிர்மாணித்தல் - கிளிநொச்சி மாவட்டம்



### கிழக்கு மாகாணம் -2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்

அட்டவணை 5.7.7

| மாவட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதியேற்பாடு 2012 (மி.ரூ.) | செலவு2012.12.31 (மி.ரூ.) |
|---|---|---|---|
| திருகோணமலை | கி.மீ. 3 .55 | 331.79 | 282.63 |
| மட்டக்களப்பு | கிணறுகள் 12 , கி.மீ.0.69 | 148.06 | 33.38 |
| அம்பாறை | கிணறுகள் 2 , கி.மீ.10.16 | 84.82 | 23.24 |
| **மொத்தம்** | **கிணறுகள் 14 , கி.மீ.14.40** | **564.67** | **339.25** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



குடிநீர் விநியோக தாங்கி நிர்மாணித்தல்
திருகோணமலை மாவட்டம்

ஜோதி ஒடுக்கப் பாதையின் வடிகால் தொகுதியை அமைத்தல்
ஆரையம்பதி கி. உ பிரிவு - மட்டக்களப்பு



### 5.7.6 நீர்ப்பாசனம்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்குள் மோதல் நிலவிய சமயத்தில் அழிவுக்கு உள்ளான சிறிய, மத்திய மற்றும் பாரிய அளவிலான நீர்ப்பாசன குளங்களை மீண்டும் கட்டி எழுப்புவதன் காரணமாக ஒழுங்கான நீர்ப்பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு முடிந்துள்ளது. இதன் ஊடாக விவசாய நடவடிக்கைகளுக்கான நீரை வழங்குவதன் ஊடாக விவசாய உற்பத்திகள் அதிகரித்துள்ளதுடன், அப்பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதார செயற்பாடுகள் மேம்பட்டுள்ளன.

2012.12.31 ஆம் திகதியாகும் போது மேற்கொள்ளப்பட்டுள்ள நீர்ப்பாசன அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பலவற்றின் முன்னேற்றம் பின்வருமாறு.



குடைதாங்கிக் குளம்
முல்லைத்தீவு மாவட்டம்



பிரமந்தாறு குளம்
கிளிநொச்சி மாவட்டம்



புலுகுநாவிக் குளம்
மட்டக்களப்பு மாவட்டம்

**வட மாகாணம் - 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்** அட்டவணை 5.7.8

| பிரிவு | 2012 ஆண்டில் அடையப்பட்டுள்ள இலக்கு (குளங்களின் தொகை) | நிதியேற்பாடு (மி.ரூ.) | செலவு (மி.ரூ.) |
|---|---|---|---|
| சிறிய அளவிலான குளங்கள் | 95 | 1046.99 | 847.17 |
| பாரிய,மத்திய அளவிலான குளங்கள் | 11 | 654.57 | 536.97 |
| **மொத்தம்** | **106** | **1701.56** | **1384.14** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**கிழக்கு மாகாணம் -2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்** அட்டவணை 5.7.9

| பிரிவு | 2012 ஆண்டில் அடையப்பட்டுள்ள இலக்கு (குளங்களின் தொகை) | நிதியேற்பாடு (மி.ரூ.) | செலவு (மி.ரூ.) |
|---|---|---|---|
| சிறிய அளவிலான குளங்கள் | 38 | 348.32 | 257.73 |
| பாரிய,மத்திய அளவிலான குளங்கள் | 1 | 92.46 | 67.27 |
| **மொத்தம்** | **39** | **440.78** | **325.00** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### 5.7.7 உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

யுத்த மோதல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்குள் அழிவுக்கு உள்ளான அரச மற்றும் பொதுக்கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக 2012 ஆம் ஆண்டிற்குள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 2630.77 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன. இங்கு அரச நிர்வாகக்கட்டிடம், பாடசாலை, வைத்தியசாலை மற்றும் பொதுக்கட்டிடங்கள் நிர்மாணிப்பத ற்காகவும், மீள்நிர்மாணம் செய்வதற்காகவும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன.

**வட மாகாணம் - 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்.** அட்டவணை 5.7.10

| பிரிவு | பௌதீக முன்னேற்றம் (தொகை) | நிதியேற்பாடு (மி.ரூ.) | செலவு (மி.ரூ.) |
|---|---|---|---|
| அரச நிர்வாகக் கட்டிடம் | 114 | 1339.40 | 1206.71 |
| பாடசாலை | 70 | 341.48 | 324.72 |
| வைத்தியசாலை | 65 | 517.03 | 509.21 |
| கமநல சேவை மத்தியநிலையம் | 61 | 222.24 | 197.96 |
| பொதுக் கட்டிடங்கள் | 13 | 245.87 | 113.28 |
| சந்தை மத்திய நிலையம் | 135 | 250.02 | 38.72 |
| **மொத்தம்** | **458** | **2916.04** | **2390.60** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



மல்லாகம் நீதிமன்றத் தொகுதி – யாழ்ப்பாணம்



சிலாவத்தை வித்தியாளயம்- முல்லைத்தீவு மாவட்டம்



தெல்லிப்பளை பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்



யாழ்ப்பாண வைத்தியசாலையை நவீனமயப்படுத்தல்



தலைமன்னார் சந்தைத் தொகுதியை நிர்மாணித்தல் - மன்னார்



பன்னங்கட்டி மயானம்- கிளிநொச்சி மாவட்டம்

**கிழக்கு மாகாணம் - 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்** அட்டவணை 5.7.11

| பிரிவு | பௌதீக முன்னேற்றம் (தொகை) | நிதியேற்பாடு (மி.ரூ.) | செலவு (மி.ரூ.) |
|---|---|---|---|
| வைத்தியசாலை | 14 | 141.70 | 141.70 |
| பொதுக் கட்டிடங்கள் | 2 | 258.52 | 47.39 |
| சந்தை மத்திய நிலையம் | 10 | 236.88 | 51.08 |
| **மொத்தம்** | **26** | **637.10** | **240.17** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



திருகோணமலை மாவட்ட வைத்தியசாலைக்கான வைத்திய உபகரணங்களை வழங்கல் மற்றும் கட்டிடங்களை நவீன மயப்படுத்தல்



ஏராவூர் சிறுவர் பூங்காவை நிர்மாணித்தல் - மட்டக்களப்பு மாவட்டம்



இரக்காமம் சந்தைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் - அம்பாறை மாவட்டம்

## 5.8. நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் வேலைத்திட்டம்

வடக்கில் நிலவிய பயங்கரவாத நடவடிக்கைகள் முடிவடைந்ததுடன், பிரதான சவாலாக அமைந்தது யுத்த மோதல் நிலவிய பிரதேசங்களை நிலக்கண்ணி வெடிகள் அற்ற சூழலாக நிர்மாணிப்பதாகும். இதற்காக அரசாங்கம் அதிகபட்ச முன்னுரிமையைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன், அதன் பிரதிபலனாக இந்தப் பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றி நிலக்கண்ணிகள் மற்றும் யுத்தத்தினால் எஞ்சிய வெடிப் பொருட்களில் இருந்து விடுவித்துக் கொள்வதற்காக மனிதாபிமான நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளன.



கைகளினால் நிலக்கண்ணிகளை அகற்றல்



பயிற்றப்பட்ட நாய்களைக் கொண்டு நிலக்கண்ணிகளை அகற்றல்



இயந்திரங்களின் ஊடாக நிலக்கண்ணிகளை அகற்றல்

### 2012.12.31 ஆம் திகதிக்கான முன்னேற்றம்

அட்டவணை 5.8.1

| மாவட்டம் | நிலக்கண்ணி வெடிகளிற்குள் சிக்குண்ட மொத்த நிலப்பரப்பு (வர்க்க மீற்றர்) | நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட நிலப்பரப்பு (வர்க்க மீற்றர்) | நிலக்கண்ணி வெடிகள் அகற்றபடவுள்ள நிலப்பரப்பு (வர்க்க மீற்றர்) |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 52,095,175 | 47,931,052 | 4,164,123 |
| கிளிநொச்சி | 598,299,576 | 578,845,595 | 19,453,981 |
| முல்லைத்தீவு | 230,331,444 | 210,194,453 | 20,136,991 |
| வவுனியா | 223,646,516 | 216,428,340 | 7,218,176 |
| மன்னார் | 317,235,133 | 291,235,189 | 25,999,944 |
| **உப மொத்தம்** | **1,421,607,843** | **1,344,634,628** | **76,973,215** |
| திருகோணமலை | 98,687,801 | 95,275,807 | 3,411,994 |
| மட்டக்களப்பு | 495,246,649 | 480,574,937 | 14,671,712 |
| அம்பாறை | 46,638,752 | 46,569,646 | 69,107 |
| **உப மொத்தம்** | **640,573,202** | **622,420,389** | **18,152,813** |
| அநுராதபுரம் | 3,547,971 | 196,695 | 3,351,276 |
| பொலன்னறுவை | 233,900 | 48,279 | 185,621 |
| **உப மொத்தம்** | **3,781,871** | **244,974** | **3,536,897** |
| **மொத்தம்** | **2,065,962,916** | **1,967,299,992** | **98,662,925** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

நிலக்கண்ணி வெடிப்பயத்தை நீக்கி வாழ்வதற்குத் தேவையான விடுதலைச் சூழலை ஏற்படுத்தும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு செயற்படுத்தப்பட்ட மனிதாபிமான நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் வேலைத்திட்டத்தின் காரணமாக, 2012.12.31 ஆம் திகதியாகும் போது கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு எஞ்சியுள்ள நிலப்பரப்பின் அளவினை 98,662,925 வர்க்க மீற்றர் வரை குறைப்பதற்கு முடிந்துள்ளது



நிலக்கண்ணி வெடித்ததால் ஊனமுற்ற ஒருவர்



அகற்றப்பட்ட நிலக்கண்ணி



நிலக்கண்ணி அவதானம் தொர்பான அறிவுறுத்தல்

வரைபடம் : 5.8.1




மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## 5.9 வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள்

- வடக்கு கிழக்கு மாகாணங்களிற்குள் வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங் களின் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளிற்கு மேலதிகமாக வடமத்திய, வடமேல், ஊவா, மத்திய. மேல், தென் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்கள் உள்ளிட்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை 2012.12.31 ஆம் திகதியாகும் போது பின்வரும் பிரகாரம் குறிப்பிட்டுக் காட்ட முடியும்.

### வீதிகள் மற்றும் பாலங்கள் மீள்திருத்தம் செய்தல்

அட்டவணை 5.9.1

| மாகாணம் | 2012.12.31 ஆம் திகதிக்கான பௌதீக முன்னேற்றம் | | 2012 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாடு (மி..ரூ.) | 2012.12.31ஆம் திகதிக்கான செலவு (மி.ரூ.) | பயனாளிகளின் தொகை |
|---|---|---|---|---|---|
| | வீதிகள் (கி.மீ.) | பாலங்கள் ( தொகை) | | | |
| வடமத்திய மாகாணம் | 63.57 | 3 | 406.44 | 291.33 | 12,060 |
| வடமேல் மாகாணம் | 54.09 | 15 | 39.85 | 182.95 | 78,114 |
| ஊவா மாகாணம் | 101.50 | 1 | 215.04 | 151.60 | 50,266 |
| மத்திய மாகாணம் | 47.50 | 2 | 447.80 | 658.49 | 29,427 |
| **மொத்தம்** | **265.66** | **21** | **1,209.13** | **1,384.37** | **169,867** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### சிறியளவிலான குளங்களை மீள்திருத்தம் செய்தல்

அட்டவணை 5.9.2

| மாகாணம் | 2012.12.31 பௌதீக முன்னேற்றம் (குளங்களின் தொகை) | 2012 ஆம் ஆண்டிற்கான நிதியேற்பாடு (மி..ரூ.) | 2012.12.31ஆம் திகதிக்கான செலவு (மி.ரூ.) | பயனாளிகளின் தொகை |
|---|---|---|---|---|
| வடமத்திய மாகாணம் | 18 | 369.36 | 406.28 | 2,662 |
| வடமேல் மாகாணம் | 21 | 44.70 | 47.69 | 9,419 |
| ஊவா மாகாணம் | 11 | 53.75 | 59.35 | 7,643 |
| மத்திய மாகாணம் | 5 | 151.78 | 116.39 | 816 |
| **மொத்தம்** | **55** | **619.59** | **629.71** | **20,540** |

மூலம் : பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

- வடமத்திய மற்றும் வடமேல் மாகாணத்திற்குள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்காக 13 கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன, இதற்காக செலவிடப்பட்டுள்ள நிதி 37.51 மில்லியன் ரூபாவாகும். இதன் ஊடாக 16,563 பயனாளிகள் பயனடைவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

- கெமிதிரிய கருத்திட்டத்தின் ஊடாக வடமத்திய, ஊவா, மத்திய. மேல், மற்றும் தென் ஆகிய மாகாணங்கிளிற்குள் இருக்கும் தெருக்கள், சிறிய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள், குடிநீர்க் கருத்திட்டங்கள், பொது மக்கள் மன்றம், ஆகிய பிரிவுகளை மீள்திருத்தம் செய்வதற்காக 2012 ஆம் ஆண்டிற்குள் 1,985.87 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டு, அதற்குறிய நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளதுடன், அதன் ஊடாக சுமார் 487,546 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

# 6

# தந்திரோபாய முயற்சிகள் - பொருளாதார எழுச்சி

# 6. தந்திரோபாய முயற்சிகள் - பொருளாதார எழுச்சி

## சுற்றுலா நடவடிக்கைகள் மற்றும் பொதுப் பொழுது போக்கு வசதிகள் அபிவிருத்தி

தேசியப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக சுற்றுலாப் பொருளாதாரத்தில் விரும்பத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. 2012 ஆம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்திக்கு சுற்றுலாத் தொழில் முயற்சியின் பங்களிப்பு 1.4% மட்டுமே கிடைத்துள்ளது. நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக சுறறுலாத் துறையில் சிறிதளவு பின்னடைவு ஏற்பட்டிருந்த போதிலும் யுத்தம் முடிந்ததும் வருடத்திற்கு 30% மான வளர்ச்சி வேகத்தைக் காட்டி மிக வேகமான விரிவடைந்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகை இலக்காகிய ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை விட அதிகமான சுற்றுலாப் பயணிகள் இந்த நாட்டிற்குள் வருகை தந்துள்ளதுடன், மொத்த சுற்றுலாப் பயணிகளின் தொகை 1,005,605 ஆகும். 2012 ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையினால் கிடைத்த மொத்த வருமானம் 1038.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**2011 மற்றும் 2012ஆம் ஆண்டிற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை**

வரைபு: 6.1




மூலம் : இலங்கைசுற்றுலாஅபிவிருத்தி சபை

2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஐந்தாண்டு (2011-2016) சுற்றுலா அபிவிருத்தி உபாய முறையிலான திட்டத்திற்கு இணங்க,2016 ஆம் ஆண்டாகும் போது 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை இலக்காகக் கொண்டு தற்பொழுது சுற்றுலா துறையின் சகல நடவடிக்கைகளையும் மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு இணங்க சுறறுலாத் துறையின் உபாய மார்க்கம், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் வழங்கல் எனும் மூன்று பிரதான துறைகள் ஊடாக மேற்கொள்ளப்படவிருக்கிறது. அவையாவன, சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி சுற்றுலா நடவடிக்கைகளின் வளர்ச்சி சுற்றுலாத் துறையின் மனிதவள அபிவிருத்தி செய்தல் ஆகும்.

சுற்றுலாத் துறையை வலுப்படுத்தவதற்கு 2011-2016 காலப்பகுதிக்குள் சுற்றுலாத் துறை உள்ளிட்ட நேரடி வேளிநாட்டு முதலீட்டை 3000 மில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான மட்டத்திற்குக் கொண்டு வருவதும், 2016 ஆம் ஆண்டாகும் போது சுற்றுலா தொழில் முயற்சி உள்ளிட்ட சுமார் 500,000 நேரடித் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் சுற்றுலாத் துறையில் ஈடுபட்டுள்ள அதன் கீழான நிறுவனங்கள் கூட்டாகச் சேர்ந்து அபிவிருத்தி நடவடிக்கைகளில் செயற்பட்டுள்ளன.

## 6.1.சுற்றுலா வசதிகளை அதிகரித்தல்

சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை அளவில் அதிகரிப்பதை விட மிகவும் அதிவலுவுள்ள சுறறுலாப் பயணிகளை நாட்டிற்குள் வரவழைத்துக் கொள்வதற்குத் தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகள், அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டின் இலக்காகிய 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரித்துக் கொள்வதறகுத் தேவையான தங்குமிட வசதிகளை வழங்குவதனை நோக்காகக் கொண்டு சகல வசதிகளையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், விசேடமாக உயர் வலுவுடன் கூடிய சுற்றுலாப் பயணிகளின் பயணமாகக் கற்பிட்டி, பாசிக்குடா, குச்சவெளி, தேத்துவை ஆகிய புதிய சுற்றுலா வலையங்களின் சூழலை மனங்கவரும் வகையில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

### நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சுற்றுலா விடுதிகள் தொடர்பாக 2012-12-31 ஆம் திகதிக்குள் அடைந்த முன்னேற்றம்

அட்டவணை: 6.1.1

| சுற்றுலா வலையங்கள் | நிலப்ப ரப்பு (ஏக்கர்) | நிர்மாணிப்பதற்கப் பிரேரிக்கப்பட்டுள் ள அறைகளின் எண்ணிக்கை | தற்பொழுது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அறைகளின் எண்ணிக்கை | தற்பொழுது நிர்மாணித்துக் கொண்டிருக்கும் அறைகளின் எண்ணிக்கை | தற்போதைய தனியார் பிரிவினரின் பங்களிப்பு (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|---|---|
| பாசிக்குடா | 156 | 854 | 130 | 724 | 10161.0 |
| கற்பிட்டி | தீவு 14 ஏக்கர் 20,56 2)) | 5,000 | - | 88 அறைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது டன், 200 அறைகளை நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன | 5,100 மில்லியன் ரூபா எதிர்பார்க்கப்பட்டுள் ளன. |
| குச்சவெளி | 510 | 3,000 | 50 | - | 850.0 |
| தேத்துவ | 1,734 | - | - | - | - |
| யாள | 1136 | 345 | 66 (2010 ஆம் ஆண்டில் இருந்து சேவை வழங்கப்பட்டுள்ள து) | 84 | 2705.0 |
| பெந்தோட்டை | 100 | 615 | 497 | 118 | - |

மூலம் : இலங்கைசுற்றுலாஅபிவிருத்தி சபை



பெரடைஸ் சுற்றுலா விடுதி – பாசிக்குடா



அகோடா சுற்றுலா விடுதி- பாசிக்குடா

சுற்றுலா வசதிகள் அபிவிருத்தியை வேகமாக செயற்படுத்தவதை நோக்காகக் கொண்டு ஒரே கூரையின் கீழ் சகல வசதிகளையும் வழங்கும் பிரிவு (One Stop Unit)இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்குள் தாபிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சுற்றுலா ஹோட்டல் கருத்திட்டங்களின் முதலீட்டாளர்களது பிரச்சினைகளை துரிதமாகத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான அனுமதியைத் உடனடியாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

### ஒரே கூரையின் கீழ் சகல வசதிகளையும் வழங்கும் பிரிவின் முன்னேற்றம்- 2012

அட்டவணை: 6.1.2

| வகை | 2011 | 2012 |
|---|---|---|
| அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் தொகை | 210 | 283 |
| அனுமதி வழங்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் தொகை | 92 | 112 |

மூலம் : இலங்கைசுற்றுலாஅபிவிருத்தி சபை

### மாவட்ட மட்டத்தில் ஒரே கூரையின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களிற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்

அட்டவணை: 6.1.3

| மாவட்டம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| அனுராதபுரம் | 1 | 28 |
| மட்டக்களப்பு | 14 | 429 |
| பதுளை | 1 | 12 |
| கொழும்பு | 17 | 1872 |
| காலி | 19 | 945 |
| கம்பஹா | 8 | 583 |
| அம்பாந்தோட்டை | 9 | 195 |
| யாழ்ப்பாணம் | 4 | 110 |
| களுத்துறை | 11 | 631 |
| கண்டி | 2 | 130 |
| மாத்தளை | 3 | 147 |
| மாத்தறை | 8 | 360 |
| நுவரெலியா | 2 | 84 |
| புத்தளம் | 6 | 325 |
| திருகோணமலை | 7 | 238 |
| | **112** | **6089** |

மூலம் : இலங்கைசுற்றுலாஅபிவிருத்தி சபை

❖ **சுற்றுலா உபசரிப்பு விடுதி வேலைத்திட்டம்**
மக்களை சுற்றுலாத் துறையின் பங்குதாரர்களாக்குவதையும். அதன் பிரதிலாபங்களை அவர்களுக்கு நேரடியாகப் பெற்றுக் கொடுப்பதையும், இலக்காகக் கொண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகைக்குச் சமமாக எதிர்பார்க்கப்பட்டுள்ள அறைகளின் தொகையை வழங்குவதற்கான உறுதிப்பாட்டை நோக்காகக் கொண்டு இந்த வேலைத்திட்டம் மேலும் செயற்படுத்தப்படும். விஷேடமாக திவிநெகும தேசிய வேலைத்தட்டத்திற்கு சமமாக செயற்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தின் மூலம் குடும்பத்தின் பொருளாதார வலுவை மேம்படுத்தவதற்கு சிறந்த உதவியை இது வழங்கும்.

அதற்கு இணங்கஇலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையினால் சுற்றுலா உபசரிப்பு விடுதிகளை ஆரம்பிப்பதற்கு விருப்பமான நபர்களுக்குத் தேவையான ஆலோசனைகள், வழிகாட்டல்கள், பிரச்சாரம் மற்றும் ஊக்குவிப்புக்கள் மேற்கொள்ளப்படும்.



உபசரிப்பு விடுதி தொடர்பான அறிவுறுத்தல



உபசரிப்பு விடுதிச் சொந்தக்காரர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டம்.

### சுற்றுலா உபசரிப்பு விடுதி வேலைத்திட்டம் - 2012.12.31 ஆம் திகதிக்குள் அடைந்த முன்னேற்றம்

அட்டவணை: 6.1.4

| இலக்கு | நெருங்கிக் கொள்ளப்பட்ட அறைகளின் தொகை (2012.12.31) | % |
|---|---|---|
| 1500 | 972 | 64.8 |

மூலம் : இலங்கைசுற்றுலாஅபிவிருத்தி சபை

### ❖ உள்நாட்டு விடுதிகளை மேம்படுத்தல் - "விடுதி வேலைத்திட்டம்"

❖ விடுதி வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமானது உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குள் உள்நாட்டு விடுதிகள் தொடர்பான வரவேற்பை ஏற்படுத்தி அதன் சேவை பெறுபவர்களுக்கு உயர் வரவேற்பை வழங்குவதாகும். இங்கு உள்நாட்டு உணவு அட்டவணைக்கு இணங்க சாப்பாட்டை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல், உயர் பண்பாட்டுடன் கூடிய சுகாதாரப் பாதுகாப்புச் சேவை போன்றவற்றை வழங்குவதன் ஊடாக உள்நாட்டு சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்கு இணங்க இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுதிகளின் தரம் தொடர்பான ஆலோசனைக் கைநூல் ஒன்றைப் பெற்றுக் கொடுக்கும் சேவையை முறையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குப் பின்விபர செயல்முறை ஒன்றைத் தொகுத்து அதன் சேவையை முறையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



அபிவிருத்தி செய்யப்பட்ட மாரவில விடுதி



மேம்படுத்தப்பட்ட பொகவந்தலாவை விடுதி

### ❖ சுற்றுலா நடமாடும் சேவைகளும், அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களும்

தொலைதூர மாகாணங்களில் இருந்து கொழும்பிற்கு வந்து தமது சுற்றுலா நிறுவனங்களைப் பதிவு செய்வதற்குச் செல்லும் காலத்தையும், ஆகுசெலவையும் மீதப்படுத்திக் கொள்வதற்கும், சுற்றுலாத் தொழில் முயற்சியின் புதிய முன்னெடுப்புக்கள் தொடர்பாக அறிவுறுத்தல் போன்ற விடயங்களை இலகுவாகவும், துரிதமாகவும் செய்து கொடுப்பதற்கான சுற்றுலா நடமாடும் சேவைகள் 2012 ஆம் ஆண்டிற்குள் நடாத்தப்பட்டுள்ளன. இதன் கீழ் அநுராதபுரம், கற்பிட்டி, அறுகம்பே, திருகோணமலை, பெந்தோட்டை ஆகிய பிரதான சுற்றுலாப் பயணிகளைக் கேந்திரமாகக் கொண்டு சுற்றுலா நடமாடும் சேவை மற்றும் அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.




சுற்றுலா நடமாடும் சேவைகள் கருத்தரங்கு



உபசரிப்பு வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு பயிற்சி அமர்வொன்றை நடாத்துதல்

### 6.1.1 சுற்றுலா உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களின் பங்களிப்பு

**ஜப்பான் அரசின் கடனுதவியினால் செயற்படுத்தப்படும் சுற்றுலா வளங்களை மேம்படுத்தும் கருத்திட்டம் (TRIP)**

இறுதிக் கட்டத்தில் வருகை தந்துள்ள இந்தக் கருத்திட்டத்தின் கீழ் மீகமுவை, சீகிரிய, அநுராதபுரம், மற்றும் நுவரெலியா சுற்றுலா நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தல், மக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், மற்றும் ஜப்பான் சுற்றுலா வர்த்தக வளர்ச்சி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்னுரிமை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக பின்வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

### உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

இதன் கீழ் மீகமுவை நகரத்தில் ஹமில்டன் கால்வாயை மேம்படுத்தல், புதிய மீன் வர்த்தக நிலையக் கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல், மற்றும் நகர அலங்கார வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல். இனாமலுவை – சீகிரிய பிரதானபாதை,தென்னகோன் வீதி மற்றும் சிகிரிய – மொரகஸ்வெவ பாதையை மேம்படுத்தி சுற்றுவட்டப் பாதையாக அபிவிருத்தி செய்தல், அநுராதபுரத்தின் புனித நகரத்தின் சுற்றுவட்டப் பாதையை மேம்படுத்தல் மற்றும் மல்வதுஓய பூங்காவின் அபிவிருத்தியை மேற்கொள்வதுடன், விக்டோரியாப் பூங்காவை மேம்படுத்தல், மற்றும் கிரகரிக்குளம் தொடர்புற்ற பூங்காவை நிர்மாணித்தல் ஆகிய செயற்பாடுகள் இந்த வேலைத்திட்டத்தின் ஊடாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.





ஹமில்டன் கால்வாயை அபிவிருத்தி செய்தல்



உள்ளகவீதி அபிவிருத்தி – விக்ரோரியா பூங்கா நுவரேலியா மாவட்டம்



கிரகெரி பூங்கா அபிவிருத்தி நுவரேலியா மாவட்டம்

### கண்டி பல்லேகெலே சுற்றுலா ஹோட்டல் பாசாலையை நிர்மாணித்தல்

இதன் கீழ் 255.0 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டு சகல வசதிகளும் கொண்ட புதிய ஹோட்டல் பாடசாலையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக 110 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டு மே மாதம் சட்டபூர்வமாகத் திறந்து வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 5500 சதுர அடி கொண்ட இந்த ஹோட்டல் பாடசாலை இந்தத் துறைக்கு உகந்த தொழிலாளர்களைப் பயிற்றுவிப்பதற்குத் தேவையான சகல நவீன வசதிகளும் கொண்ட நிலையமாகும்





ஹோட்டல் பாடசாலை அபிவிருத்தி – கண்டி மாவட்டம்

### நிரந்தர சுற்றுலா அபிவிருத்திக் கருத்திட்டம் - 2012 (STDP)

இந்தக் கருத்திட்டம் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்காலத் தேவை களுக்குப் பொருந்தும் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் அதனைத் திரும்பவும் தொகுப்பதற்கு நேர்ந்தது. சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்குச் சுற்றுலாத் துறைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும், சமூக மனங்கவர் முதலீட்டுக்காகவும், அவ்வாறான முதலீட்டை மேம்படுத்துவதற்காகவும்,குறை நிரப்புநிதியேற்பாட்டுக் கொடுப்பனவுமுறையின் கீழ் வசதிகள் பெற்றுக் கொடுப்பதே இந்தக் கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இந்தக் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவை யான செயற்பாட்டுக் கைநூலைத் தொகுத்து 2013 ஆம் ஆண்டில் அதைச் செயற்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் பிரிவினதம், அரச பிரிவினதும் சம்பந்தத்தின் கீழ் நான்கு பில்லியன் ரூபா முதலீட்டு வசதிகளை எதிர்வரும் இரண்டு வருடங்களிற்குள் பெற்றுக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சுற்றலாத் துறையில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களின் எழுச்சியை எதிர்பார்க்கப்படுகின்றன.

### 6.1.2 சுற்றுலா நடவடிக்கைகளின் அபிவிருத்தி

- ✷ சுற்றுலாப் பயணிகளின் வருகையை வருடம் முழுதும் ஒரே மட்டத்தில் நடாத்திச் செல்வதை நோக்காகக் கொண்டு எங்களின் சம்பிரதாய சுற்றுலா சந்தைக்கு மேலதிகமாகப் புதிய சந்தையை அறிமுகப்படுத்திக் கொடுத்து சீனா, கொரியா, ரஷ்யா,மத்திய கிழக்கு, இந்தியா, ஜப்பான் அகிய நாடுகளின் சுற்றுலா வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விஷேட வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளது

- ✷ அவ்வாறே 2012 ஆம் ஆண்டில் உலகின் பிரதான சுற்றலா வியாபாரக் கண்காட்சி, இடைப்பட்ட தேசிய ஊடகவியளாலர்களை அறிவுறுத்தல், பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தாபிக்கப்பட்டுள்ள புதிய சுற்றுலாத் தகவல் கொத்து (Tourism Information Kiosks), கொழும்பு மரதன் போட்டிகள் ஆகிய செயற்பாடுகளின் ஊடாக இலங்கையை இடைப்பட்ட தேசிய மட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.







கொழும்பு மரதன் போட்டித் தொடர்கள்

### இடைப்பட்ட தேசிய ஊடகம் ஊடாக இலங்கையின் அபிவிருத்தி




கல்ப் வலைய
அபிவிருத்தி




சீனாவின் அச்சு ஊடகத்தின்
மூலம் அபிவிருத்தி

- ✷ அவ்வாறே உலகப் பிரசித்தி பெற்ற விமானக் கம்பனியான British Airways, Korean Airways ஆகிய விமானக் கம்பனிகள் இலங்கையுடன் நேரடி விமானச் சேவைகளை ஆரம்பிப்பதற்குத் தீர்மாணிக்கப்பட்டுள்ளது

### இலங்கையின் சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தினால் நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்களினால் அடைந்த முன்னேற்றம்

அட்டவணை: 6.1.5

| ஆண்டு | வியாபார ஏல விற்பனை | | வீதிக் காட்சிகள் | |
|---|---|---|---|---|
| | நாடுகளின் தொகை | வியாபார ஏல விற்பனைகளின் தொகை | நாடுகளின் தொகை | வீதிக் காட்சிகளின் தொகை |
| 2011 | 12 | 18 | 01 | 02 |
| 2012 | 16 | 23 | 01 | 02 |

மூலம் : இலங்கைசுற்றுலாத்துறைஊக்குவிப்புபணியகம்

### இடைப்பட்ட தேசிய ஊடகவியலாளர்களை அறிவுறுத்தல்

இதற்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டு முழுக்க இடைப்பட்ட தேசிய ஊடகவியலாளர்கள் சுமார் 181 பேரின் பங்களிப்புடன் இலங்கை தொடர்பாக அறிவுறுத்தும் பயணங்களை ஏற்படுத்தியுள்ளதுடன், ஐக்கிய இராச்சியம், இந்தியா, சீனா, ஜேர்மனி, ரஷ்யா ஆகிய உலக முன்னிலை நாட்டு ஊடகவியலாளர்கள் இதற்காகப் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

### ஒன்றுகூடல்கள், ஊக்குவிப்பு, சுற்றுப் பிரயாணம், கலந்துரையாடல் மற்றும் மாநாட்டுத் துறை (MICE Tourism)

சுற்றுலா வர்தத்கத்தின் விஷேடத் துறையான இந்தத் துறையில் சிறந்து விளங்கும் முன்னேற்றத்தைக் கடந்த சில மாதங்களிற்குள் காணக்கூடியதாக உள்ளது. 2012 ஆம் ஆண்டிற்கு MICEசுற்றுலாப் பயணிகளின் வருகையின் எதிர்பார்த்த இலக்கு சுற்றுலாப் பயணிகள் சுமார் 90,000 ஆவதுடன், இந்த இலக்கைத் தாண்டி சுற்றுலாப் பயணிகள் சுமார் 119,560 பேர் மட்டில் இந்த நாட்டிற்குள் வருகை தந்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டின் ஆரம்ப எட்டு மாதத்திற்குள் இலங்கையில் நிலவிய விஷேட வேலைத் திட்டங்களான Jaffna Trade Fair,பொது நலவாய நாடுகளின் பாராளுமன்ற ஒன்றுகூடல், சிறுவர் விஷேட வைத்தியர்களின் சம்மேளனம்,Kiwaniசர்வ தேச சம்மேளனம் ஆசியாவின் இளைஞர் விளையாட்டு விழா, கொழும்பு சங்கீத நிகழ்ச்சிகள் ஊடாக உயர் மட்டத்திலான சுற்றுலாப் பயணிகளை இந்த நாட்டிற்குள் வரவழைப்பதற்கு முடிந்துள்ளது







கிவானிசர்வதேச மாநாடு – கொழும்பு



லூபின் பர்மா சர்வதேச மாநாடு – கொழும்பு

MICE சுற்றாடல் பயிற்சிக்கான சுற்றாடல் துறையில் தெரிவு செய்யப்பட்டுள்ள 50 பேரிற்கு இடைத் தேசியத் தேர்ச்சி பெற்றவர்கள் மூவரின் வழிகாட்டலின் கீழ் பயிற்சித் தொடர்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக MICE சுற்றுலாவின் எனைய அபிவிருத்தி விடயங்கள் பின்வருமாறு.

அம்பாந்தோட்டை புதிய மாநாட்டு மண்டபத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஆலோசணை உதவி பெற்றுக் கொடுத்தல் , Jetliner கப்பல் வளர்ச்சி, Courtyard (Old Dutch Hospi tal) , காலி நூதனப் பொருட் காட்சிச் சாலையின் சீனக் கலாச்சாரக் கொட்டகையை (Chinese Chamber) நிர்மாணித்தல் போன்ற விடயங்களாகும்.



MICE சுற்றுலாப் பயிற்சி 2012 க்ளப் ஹோட்டல் டொல்பின், வயிக்காள

### 6.1.3 சுற்றுலாத் துறையில் மனித வள அபிவிருத்தியை மேற்கொள்ளல்

இந்த நாட்டின் சுற்றுலாத் துறைக்குத் தேவையான மனித வளம் பற்றிய பயிற்சியை வழங்கும் அரச நிறுவனமாக, இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் திகழ்கிறது. கொழும்பில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்துடன் கண்டி, கொக்கல, பண்டாரவெல, அநுராதபுரம் மற்றும் இரத்தினபுரி ஆகிய நகரங்களில் அமைந்துள்ள பிரதேசப் பாடசாலைகள் ஐந்தும் அதில் அடங்கும். கண்டியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாடசாலையின் வேலைகளை 2013 வருடத்தில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

உள்நாட்டு, வெளிநாட்டு வரவேற்பு உபசரிப்பு வழங்குதல் துறையின் தொழில் வாய்ப்புக்களை இலக்காகக் கொண்டு, தொழில் மட்டத்திலான வல்லுனர்களை உருவாக்குதல், தற்பொழுது ஹோட்டல்களில் சேவை புரியும் பணியாளர் குழுவினருக்கு மேலும் அத்துறைக்குத் தேவையான அறிவு மற்றும் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல், புதிய அறிவுடன் கூடிய விடயப் பரிந்துரையைத் தொகுத்தல். தேசியத் தொழில் மட்டத்திலான தராதரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான தரக்கட்டுப்பாடு, சர்வதேசத் தரத்திற்கு அநுகூலமான விடயப் பாடநெறியை மேம்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் சுற்றுலாத் துறையின் மனிதவள அபிவிருத்தியின் முன்னுரிமை விடயங்களாகும்.

**2012 ஆம் ஆண்டில் பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர் தொகை- 2012**

அட்டவணை: 6.1.6

| | சமையல்காரர் (Professional Cookery) | உணவு, குடிபாண சேவை (Food & Beverages) | ஹோட்டல் வீட்டு நிர்வாகி (Hotel Housekeeping) | அதிதிகளை வரவேற்றல் (Front Office Management) |
|---|---|---|---|---|
| அடிப்படை வல்லுனர் மட்டம் | 144 | 65 | 92 | |
| உறுதிப் பத்திர பாடநெறி | 370 | 325 | 312 | 250 |
| இடைத் தரகர்(Intermdiate) பாடநெறிகள் (கொழும்பு) | 24 | 19 | 09 | 21 |
| **மொத்தம்** | **538** | **409** | **413** | **271** |

மூலம் : இலங்கைசுற்றுலாஹோட்டல் முகாமைத்துவநிறுவனம்

இதற்கு மேலதிகமாக 2012 ஆம் ஆண்டில் ஹோட்டல் முகாமைத்துவப் பாடநெறிக்காக 53 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன்,205 மாணவர்கள் தேசிய பாடநெறிக்காகப் பதிவு செய்துள்ளனர். பிரதேசப் பாடசாலை ஊடாக நடாத்தப்படும் விஷேட வேலைத்திட்டங்களுக்கு 157 மாணவர்கள் தராதரம் பெற்றுள்ளனர்.





உணவு குடிபானங்களைத் தயாரிப்பது தொடர்பான பாடநெறியைக் கற்றுக் கொள்ளல்

**அவ்வாறே ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா வளங்களை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் (TRIP) கீழ்.**

கண்டியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய ஹோட்டல் பாடசாலையின் புதிய பாடத்திட்டத்தை தயாரித்தல் மற்றும் ஆலோசனையாளர்களைப் பயிற்றுவித்தல் உட்பட இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்திற்குத் தாபன அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வெளிநாட்டு விஷேட உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் 2012 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டுள்ளது

## 6.2.பொதுப் பொழுது போக்கு வசதிகள் அபிவிருத்தி

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான பொதுப் பொழுது போக்கு வசதிகளை வழங்குவதை நோக்காகக் கொண்டு, தேசிய விலங்குப் பூங்கா மற்றும் தேசிய பசுமைப் பூங்காக்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை அமைச்சின் வழிகாட்டலின் கீழ் 2012 ஆம் ஆண்டில் வேகமாக விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

### 6.2.1 தேசிய விலங்குப் பூங்கா அபிவிருத்தி

தெஹிவளை விலங்குப் பூங்கா, பின்னவள புதிய விலங்குப் பூங்கா, பின்னவள யானைகள் சரணாலயம் மற்றும் அம்பாந்தோட்டை சபாரிப் பூங்கா, ஆகிய அனைத்தும் தேசிய விலங்குப் பூங்காத் திணைக்களத்தினால் அபிவிருத்தி செய்யப்படுவதுடன், அதற்காகத் தேசிய வரவு செலவில் இருந்து 600.00 மில்லியன் ரூபாவும், விலங்குப் பூங்கா அபிவிருத்தி நிதியத்தில் இருந்து 255.00 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது இந்த அபிவிருத்தி விடயங்களிற்காக 503.55 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது தேசிய விலங்குப் பூங்காக்களைப் பார்வையிடுவதற்கு வருகை தந்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் தொகை 1,909,219 ஆவதுடன், அதனால் கிடைத்த வருமானம் 146.12 மில்லியன் ரூபாவாகும். அதே போன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 287,485 பேர்களின் வருகையினால் 626.78 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டுவதற்கு விலங்குப் பூங்காத் திணைக்களத்திற்கு முடிந்துள்ளது.

விலங்குப் பூங்கா அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் பின்வரும் பொது அபிவிருத்தி விடயங்கள் அனைத்தும் விலங்குப் பூங்காவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- உள்ளகப் பாதைகள் அபிவிருத்தி
- சுற்று வேலிகள் மற்றும் நில அலங்கார நடவடிக்கைகள்
- சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளைத் தொகுத்தல் மற்றும் புதுப்பித்தல்.
- திறமையான நீர்வழங்கல் தொகுதியை ஏற்படுத்தல்
- உள்ளகப் பாதைகளை மேம்படுத்தல்.
- உள்ளக மின்சாரம் வழங்குதல், விலங்குத் தூள் உற்பத்தி
- விடுதிகளை நிர்மாணித்தல்

**தெஹிவளை விலங்குப் பூங்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி விடயங்கள்**



ரைனோசிரசிற்கு சேற்றுத் தடாகத்தைத் தயாரித்தல்



உள்ளகப் பாதைகளைத் தயாரித்தல்



இரும்புச் சட்டகத்துடன் கூடிய குருவிக் கூடுகளைத் தயாரித்தல்

## பின்னவள விலங்குப் பூங்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி விடயங்கள்



கரடிகள் இருக்கும் வலையத்திற்குத் தயாரிக்கப்பட்டுள்ள அகழி



கரடிகளை ரசிப்பதற்கான ரசிப்புக் கூடம்



நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நினைவுச் சின்ன வியாபார நிலையம்

## அம்பாந்தோட்டை சபாரிப் பூங்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி விடயங்கள்



நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் மிருக வைத்தியசாலை



மிருக வைத்தியசாலையின் உள்ளகக் காட்சி



வெளி எல்லை மதிலை அமைத்தல் -2 ஆம் கட்டம்

### 6.2.2 தேசியப் பசுமைப் பூங்காக்களின் பொது வசதிகள் அபிவிருத்தி

தற்பொழுது தாபிக்கப்பட்டுள்ள பூங்காக்களுக்கிடையில் பேராதனை ராஜகீயப் பூங்கா, ஹக்கல பூங்கா, கம்பஹஹ ஹெனரன்கொட பூங்கா போன்று கனேவத்தை மூலிகைப் பூங்கா, ஆகியவை சுற்றுலாப் பொருளாதாரத்திற்கான நேரடிப் பங்களிப்பை வழங்குவதுடன், 2013 ஆம் ஆண்டில் திறந்து வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மிரிஜ்ஜவில உலர்வலைய பசுமைப் பூங்கா மற்றும் அவிஸ்ஸாவெல்ல ஈரவலைய பசுமைப் பூங்காக்களுக்கிடையில் கவனிக்கத்தக்க வேறுபாட்டைச் சுற்றுலாத் துறையில் ஏற்படுத்தும் என்பது உறுதி.

**சுற்றுலாப் பயணிகளின் வருகை**

2012 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை வருகை தந்த 1,931,914உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும்,259,572 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், தேசியப் பசுமைப் பூங்காவை ரசித்துள்ளனர். பூங்காக்களுக்கான நுழைவுக் கட்டணம், பயிர்கள் விற்பனை போன்றவற்றினால் கிடைத்த முழு வருமானம் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது 382.79 மில்லியன் ரூபாவாகும்

**2011 மற்றும் 2012 ஆம் ஆண்டிற்குள் பிரதான பசுமைப் பூங்காக்களுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை**

வரைவு 6.2.1




மூலம் :தேசியதாவரவியல் பூங்காஅபிவிருத்தி

**பசுமைப் பூங்காக்களினால் கிடைத்த வருமானம் (2012 ஆம் ஆண்டிற்குள்)**

அட்டவணை 6.2.1

| பசுமைப் பூங்காக்கள் | மொத்த வருமானம் (மில்லியன் ரூபா) |
|---|---|
| ராஜகீய பசுமைப் பூங்கா- பேராதனை | 326.22 |
| பசுமைப் பூங்கா - ஹக்கல | 40.11 |
| பசுமைப் பூங்கா- கம்பஹா | 14.72 |
| மூலிகைச் செடிப் பூங்கா - கெனேவத்த | 0.58 |
| சுவஹஸ் புஞ்செடி நாற்று மேடை - கொழும்பு | 0.06 |
| ஈர வலைய பசுமைப் பூங்கா - அவிஸ்ஸாவெல்ல | 0.81 |
| உலர் வலைய பசுமைப் பூங்கா - அம்பாந்தோட்டை | 0.29 |
| **மொத்தம்** | **382.79** |

மூலம் :தேசியதாவரவியல் பூங்காஅபிவிருத்தி

## பசுமைப் பூங்காக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

### பேராதெனிய ராஜகீய பசுமைப் பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

- உள்ளகப் பாதைத் தொகுதியை மேம்படுத்துவதன் மூலம் நில அலங்கார நடவடிக்கைகள் மற்றும் பாதைகளின் திறனை மேம்படுத்தல்.
- புதிய அனுமதிச் சீட்டுக் கருமபீடம், நினைவுச்சாலை ஆகியவற்றை நிர்மாணித்தல். (ஊனமுற்ற நபர்களுக்கு நுழையும் திறனுடன் கூடிய)
- பூங்காவின் பிரதான அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
- பழைய மலசலகூடத்தையும், சாப்பாட்டுக் கொட்டகையையும், ஏனைய கட்டிடங்களையும் புதுப்பித்தல்.
- வலை வீட்டை நிர்மாணித்தல்
- நீர் வழங்கல் தொகுதியை நிர்மாணித்தல



புதிய அனுமதிச் சீட்டுக் கருமபீடத்தை நிர்மாணித்தல்



உணவுக் கொட்டகையை நவீனமயப்படுத்தல்



### ஹக்கல பசுமைப் பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகள

- பிரதான நுழையும் பாதைக்கு காப்பட் இடல் மற்றும் உள்ளகப் பாதைகளுக்கு கொங்கிரீட் இடல் மற்றும் நடை பாதைகளை மேம்படுத்துவதன் ஊடாக பாதைத் தொகுதியை மேம்படுத்தல்
- நாற்று மேடைப் பயிர்களை சிறப்பாக முகாமைத்துவம் செய்வதற்கு முன்னர் இருந்த பாதுகாப்பு வீட்டை நவீனமயப்படுத்தல் மற்றும் தூவல் நீர் வழங்கல் தொகுதியையும், நீர் உரம் இடும் தொகுதியையும் நிர்மாணித்தல்.
- வனவிலங்குகளினால் ஏற்படும் அழிவைத் தடுப்பதற்கு பூங்காவின் சுற்று வேலிகளை நவீனமயப்படுத்தல், உணவுக் கொட்டகையை நிர்மாணித்தல், பூங்காவின் பிரதான அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல், அனுமதிப் பத்திரக் கருமபீடம், நீர்த்தடாகம், கழிவறைகள் உட்பட ஏனைய பூங்கா
- சட்டகத்தைமீள்நிர்மாணம் செய்தல்.
- கொம்போஸ்உரத்தொகுதிஒழுங்குபடுத்தல்



மேம்படுத்தப்பட்ட நடைபாதை



அபிவிருத்தி செய்யப்பட்ட பாசானப் பூங்கா



பாதுகாப்பு வீட்டை நவீனமயப்படுத்தல்.

### கம்பஹா ஹெனரன்கொட பசுமைப் பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

- உள்ளகப் பாதைத் தொகுதிக்குக் காப்பட் இடல்
- பூங்காவின் விளையாட்டுப் பகுதிக்கான உபகரணங்களைப் பொருத்துதல்
- பதவி விடுதிகளின் நீர் வழங்கல் தொகுதியை நவீனமயப்படுத்தல்
- புதிய வாகனத் தரிப்பிடம் ஒன்றை நிர்மாணித்தல்
- போக்குகள். நீர்ப்பம்பிச் சாலையை நவீனமயப்படுத்தல்.



உள்ளகப் பாதைத் தொகுதியை மேம்படுத்தல்



உணவுக் கொட்டகைகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை

### கனேவத்தை மூலிகைப்பூங்காவின் அபிவிருத்தி

- சிறந்த வெளிப் பார்வைக்கு பூங்காவின் நில அபிவிருத்தி நடவடிக்கைகள், பாதை அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பூங்காவிற்கு இலகுவில் நுழையக் கூடிய பிரகாரம் பிரதான நுழைவுப் பாதை மற்றும் உள்ளகப் பாதைகளை மேம்படுத்தல்.
- பெறுமதிமிக்க தாவர இனங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சுற்று வேலியைத் தொகுக்கும் மூன்றாம் கட்டத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல்.
- தாவர வீட்டை நிர்மாணிக்கும் இரண்டாம் கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- 458 புதிய தாவர இனங்களை பூங்காவிற்குள் சேர்த்துக் கொள்ளல்.
- இஞ்சி, அரத்தை போன்ற மூலிகைத் தாவரங்களை வர்த்தக உற்பத்திக்காக மேம்படுத்தல்



உள்ளகப் பாதைகளிற்குக் காப்பட் இடல்



தாவர வீட்டை நிர்மாணித்தல்

### மிரிஜ்ஜவில உலர் வலையப் பசுமைப் பூங்கா அபிவிருத்திநடவடிக்கைகள்

- பூங்காவின் பிரதான நுழைவாயிலை நிர்மாணித்தல, வாகனத் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய மூன்னைய உணவுக் கொட்டகைகளை நிர்மாணித்தல்.
- குடிநீர் வழங்கல் தொகுதியை நிர்மாணித்தல்.
- பதவி விடுதிகளை நிர்மாணித்தல்.
- உள்ளகப் பாதைத் தொகுதியை மேம்படுத்தல்.
- அலங்காரத் தாவரங்களுடன் கூடிய பூந்தோட்டங்களை நிர்மாணித்தல்
- நடை பாதைகள், வீதிகள், கூடார மற்றும் கிளைப் பூங்காக்களை உருவாக்குதல்



மேம்படுத்தப்பட்ட உள்ளகப் பாதைத் தொகுதி



பிரதான நுழைவை நிர்மாணிக்கும் நடவடிக்கை



கோடை கால குடில்களின் கட்டுமாணம்

## புதிய ஈரவலையைப் பசுமைப் பூங்காவின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

- பூங்காவின் நுழைவாயிலை நிர்மாணித்தல்
- உள்ளகப் பாதைத் தொகுதியை இனடர்லொக் (Interlock)பரவி மேம்படுத்தல்.
- புதிய பூங்கா நில அறிகுறிகளை ஒன்று சேர்த்து நில அலங்கார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தாவரங்கள் ஒன்று சேர்வதை விரிவு படுத்தல்
- இரண்டு கழிவறைத் தொகுதிகளை நிர்மாணித்தல்.
- மூன்று தடாகங்களை நிர்மாணித்தல் மற்றும் இருக்கும் குளத்தை விரிவுபடுத்தி அதனைச் சூழ தடுப்பு அணை மற்றும் நான்கு பக்க போக்கு நிர்மாணித்தல்
- ரோசாப் பூங்காவை நிர்மாணித்தல



நுளைவுச் சீட்டுக் கருமபீடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கை



கழிவறைத் தொகுதிகளை நிர்மாணிக்கும் நடவடிக்கை

## 6.3. முதலீட்டு வளர்ச்சி

அமைச்சின் கீழ் செயற்படும் மேலுமொரு முக்கிய பிரிவு முதலீட்டு வளர்ச்சிப் பிரிவாகும். வெளிநாட்டு நேரடி முதலீடுகள், இலங்கையைக் கவர்ந்து கொள்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி,விஷேட வரிக்கொள்கையை அறிமுகப்படுத்தல் மற்றும் வேறு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல், அமைச்சின் வழிகாட்டலின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையின் ஊடாகச் செயற்படுத்தப்படும்.

### 2012 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களும், கருத்திட்டங்களின் செயலாற்றுகையும்

அட்டவணை 6.3.1

| 2012 ஆம் ஆண்டில் ஆரம்பித்துள்ள முதலீட்டுக் கருத்திட்டங்கள் | | | |
